12

# ஜகன்மோகினி



1-OCT 1945

அ 4 ணா

September 1945

ஆண்டு 22 திங்கள் 9

JAGANMOHINI, SINGAPERUMALKOIL



# சந்தோஷத்தைப் போலவே குடும்ப சௌகரியத்துக்கும் முன்னதாக திட்டம் போடவேண்டும்

சில சிறிய சுகபோகப் பொருள்கள் இல்லாவிட்டால் குடும்ப வாழ்க்கை உற்சாகமற்றதாகவே இருக்கும். இப்பொருள்களை வாங்கி வைத்துக்கொண்டு அனுபவிக்கக்கூடிய மனிதன் சந்தோஷசாலிதான்! ரேடியோ, டெலிபோன், புஷ்பங்கள், குழந்தைகளுக்குரிய விளையாட்டுச் சாமான்கள்—இவைதான் பணம் படைத்தவனுக்கும் அது படைத்திராதவனுக்கும் உள்ள வேற்றுமைகளாகும். இவைகள் இந்த யுத்தத்திற்குப் பிறகு ஏராளமாய்க் கிடைக்கும். ஆனால், ஒருமாத வருமானத்திலிருந்து அல்லது மூன்றுமாத வருமானத்திலிருந்துகூட நீர் இப்பொருள்களையெல்லாம் வாங்கமுடியாது.

ஆகையினால் தான் இப்போது பணம் சேர்த்துவைக்க முடியுமென்று நினைக்கும் அநேகர் ஒவ்வொரு மாதமும் கிரமமாக சேர்த்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய எதிர்கால வாழ்வு வாடகைக் கிரய ஏற்பாடாகிய பாறைகளின் மேல் மோதி உடைபடாது. தங்கள் சேமிப்புகளைச் சிறந்த முறையில் வட்டிக்குப் போட்டுவைப்பதற்கு உகந்ததென்று அவர்கள் தெரிந்துகொண்ட சாதனம்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி 4½ சத வீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அது வரையில் சேர்ந்து வந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

ASA 137

# ஜகன்மோகினி

ஜீவியசந்தா ரூ. 50

வருஷ சந்தா ரூ. 3

தனிப்பிரதி அணா 4


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 22. No. 9. பார்த்திப : ஆவணி September 1945


## சாந்தி

உலகை ஆறுண்டுகளாக ஆட்டிவந்த அதிபயங்கரக் கொடூரப் போர் முடிவடைந்துவிட்டது. அசுர சக்திகளின் ஆர்ப்பாட்டத்தால் ஆரம்பித்த யுத்தம் இன்று நிகரற்ற சர்வநாசாதிகாரியான அணுக்குண்டின் அசுர சக்தியின் முன்பு தலைவணங்கிவிட்டது. இந்நிலையில் கவியின் சுத்தான்ம உள்ளம் சாந்த முரசு கீதத்தைப் பொழிகிறது. (2-ம் பக்கத்தில் காண்க). ஸ்டாலின் வாத்யம் முழக்க, ட்ருமன் பறை கொட்ட, அட்லி தாளம்போட வெற்றி பவனி (சாந்த முரசு கீதத்துடன்) நடப்பதை பாரதத் தாயும் ஆசி கூறி "சேமமாகப் பூமியெங்கும் சேர்ந்து நன்கு வாழவே" என்று வாழ்த்துவதையே இவ்விதழின் மேலட்டைச் சித்திரம் குறிப்பிடுகிறது.

யுத்தம் முடிந்துவிட்டது என்கிற வார்த்தையைக் கேட்டதும் மக்கள் அடைந்த சந்தோஷத்திற்கு ஒரு எல்லையே இல்லை. இதயத்தில் பெரும் பாறைபோல் அழுத்திவந்த திகில், கவலை, பயங்கரம் முதலியன ஒழிந்ததால் (பழைய நிலைமை வருவதற்கு வெகு நாட்களாகுமெனினும்) இன்றே சாதாரண நிலையை அடைந்த சாந்தியும் நிம்மதியும் நிலவிவிட்டன. கொஞ்சங்கொஞ்சமாகவே நிலைமையில் அபிவிருத்தியை எதிர்பார்க்கவேண்டும். கீழ்த்திசையில் இதுவரை ஜப்பானிய ஆதிக்கத்தில் சிக்கியிருந்த ஆயிரக்கணக்கான மோகினி அன்பர்களுக்கு வாழ்த்துகூறுகிறோம். அவர்களுக்கு கூடிய சீக்கிரமே—1946 ஆரம்பத்திலிருந்தாவது—மோகினிச் செல்வி திரும்பவும் மகிழ்ச்சியளிப்பாள் என்று எதிர்பார்க்கிறோம். யுத்த சேவையில் ஆங்காங்கு வெளி நாடுகளுக்குச் சென்ற நம் தமிழ் வீரர்கள் தாய் நாடு திரும்பும் சந்தோஷகாலம் சமீபித்துவிட்டது. கூடிய சீக்கிரமே பேப்பர் பஞ்சமும் ஒழிந்து எல்லா மோகினி அன்பர்களுக்கும் இரட்டிப்பான மகிழ்ச்சியையளிக்க எல்லாம் வல்ல கீதாசாரியன் அருள் புரிவாராக! எங்கும் சாந்தி நிலவட்டும்! ஓம் சாந்தி!

# வெற்றிச் சங்கு

குந்தலவராளி — திஸ்ர ஏகதாளம்

பல்லவி

ஓம் சாந்தி சாந்தி யென்றே
ஊது வெற்றிச் சங்கமே — ஓம்

அனுபல்லவி

சேமமாகப் பூமி யெங்கும்
சேர்ந்து நன்று வாழவே — ஓம்

1-OCT 194

சரணம்

எல்லையற்ற நாடெலாம்
இரத்த வெள்ள மாக்கியே
தொல்லை செய்த பேயரக்கர்
தோல்வி யுற் றழிந்தனர் — ஓம்

நகர்களை அரைநொடி
நரகச் சாம்ப லாக்கியே
தகர்சினப் படைக்குலம்
சரண்புகுந்த நாளிதே — ஓம்

நிலத்தும் வானும் நீரிலும்
நெருங்குயிர் நொருங்கவே
கொலைக்க ளங்கள் ஆக்கிய
கொடூரப்போர் குமைந்ததே — ஓம்

அன்பு கொண்ட நேயராய்
அறிவு மிக்க தூயராய்
மன்பதைகள் இன்ப மாக
வாழ்க வாழ்க வாழ்கவே — ஓம்

சமரச சன்மார்க்கமே
சமயமாய் உலகெலாம்
அமைதியாக வாழவே
அருள்செய் சுத்த சக்தியே — ஓம்

**சுத்தானந்த பாரதி**

# 2. மன விகாரம்

ஒரு வீட்டுத் திண்ணையில் குழந்தைகள் வீடு கட்டி கலியாணம் நடத்தி, சாமி புறப்பாடு செய்து அழகாக விளையாடுகின்றன. குழந்தைகள் சாதிமதபேதமில்லாமல் மனங்கலந்து நேசிக்கின்றன...

கதவு திறக்கிறது; "நீ வாடா கண்ணு.....பட்சணம் தின்ன" என்று தாய்க்குரல் தன் பிள்ளையை மட்டும் அன்போடு அணைத்துச் சீடை தருகிறது. அதே குரல் பேய்க்குரலாகி "போங்கள் வீட்டுக்கு—ஹூ—உதைப்பேன், திண்ணையெல்லாம் மண்ணாகிறது; ஊர்ச்சனியன்களுக்கெல்லாம் என் திண்ணைதானா சத்திரம்... ஓடுங்கள்...ஹா—ஹூ" என்று குழந்தைகளை விரட்டியடிக்கிறது. வஞ்சமற்ற குழந்தைகள் திகைப்புடன் தோழனை கண்ணனை நோக்குகின்றன. கண்ணன் "அம்மா! என் சிநேகிதருக்கும் பட்சணம் தா..." என்கிறான்.

"இந்தப் பீடைகளுடன் உனக்கென்னடா சிநேகம்? இவர்களுடன் சேரக்கூடாது...." என்கிறாள் சுயநலத் தாய். "ஊ...ஊ...அவர்களுக்கும் தந்தாலே நான் சாப்பிடுவேன்" என்று முரண் செய்கிறான் கண்ணன்.

தாயார் உள்ளேசென்று அழுகல்வாழைப்பழத்தைக்கொண்டு வந்து, "சாப்பிடுங்கள்" என்று அயல் வீட்டுக் குழந்தைகளுக்குத் தருகிறாள்; "சரி இனிப் போங்கள்" என்று விரட்டி விட்டுத் தன் குழந்தைக்கு இனிய பண்டம் தருகிறாள்.

கண்ணன் தாயாரின் ஓரகத்தைப் பொறுக்காமல் மனதிலேயே வைத்துக் கொண்டு, தாயார் வீட்டிலில்லாத சமயம் மெல்லப் பானைகளைத் தடவி நல்ல பட்சணத்தை வாரிக் கொண்டுபோய்த் தோழருக்குத் தந்து மகிழ்கிறான். குளத்தி லிருந்து தண்ணீர் சுமந்து வரும் தாயார், வழியில் அதைக் காண்கிறாள்.—"அட திருடா, வா வீட்டுக்கு, வைக்கிறேன் பூசை" என்கிறாள்.

விளையாட்டின்பத்தில் கண்ணன் அம்மா மிரட்டலைப் பொருட்படுத்தாமல் தோழருடன் குதிக்கிறான். வீட்டுக்கு வந்ததும் "பானையில் வைத்த பட்சணத்தைத் திருடினாயா?" என்று தாயார் கேட்கிறாள்.

பயந்த குழந்தையானால் "நானில்லையம்மா" என்றொரு பொய்யைச் சொல்லும். கண்ணன் தைரியமான குழந்தை. "ஏனம்மா! எல்லாக் குழந்தைகளுக்கும் தந்து நானும் சாப்பிட்டேன். நீ உன் குழந்தைக்கு மட்டும் சீடையும், மற்றக் குழந்தைகளுக்கு வசவும் அழுகல் வாழைப் பழமும் தந்ததேன்? நான் உன் குழந்தை

யாயிருப்பதுபோல், அந்தக் குழந்தைகளும், அவரவர் தாய் மாருக்கு அருமைக் குழந்தை களே" என்று சமத்துவம் பேசுகிறான்.

"சரி அப்பாவைப்போல நீயும் சமத்துவம் பேசுகிறாயா!" என்று தாயார் அங்கலாய்க்கிறாள்.

அப்பா கச்சேரியிலிருந்து வருகிறார்; அம்மா வழக்கைச் சொல்லுகிறாள்.

அப்பா பொதுவுடைமைக்காரர். "நாம் தின்பதை அந்தக் குழந்தைகளும் தின்று போகட்டுமே. நமது குழந்தை போல் அந்த குழந்தைகளும் திண்ணையில் விளையாடட்டுமே —இதில் என்ன குடிகெட்டுப் போனது? உன் குழந்தைக்கு அடுத்த வீட்டம்மா அழுகலைத் தந்து விரட்டினால் சும்மா இருப்பாயா? தான் தனது, எனது எனக்கே, என்ற சுயாபிமானமும், சுயநலச்செருக்குமே உலகைக் கலகக் காடாக்குகின்றன; எல்லாம் மன விகாரம் தான்" என்கிறார் அப்பா.

"வரவர வேதாந்தம் முற்றிப் போனது; நீர் பொதுவுடைமை பேசித்தான் பிள்ளைபானையைத் தடவிப் பொதுவுடைமையாக்குகிறான். என்னத்தைச் சொல்லுவேன்." என்று கன்னத்தில் கைவைக்கிறாள் தாயார்.

இதே வீட்டு விவகாரந்தான் நாட்டுவிவகாரமாக நடக்கிறது, இயற்கையில் மனிதன் சேர்ந்து வாழும் உயிர்த் தொகுதியே. எந்த வேதமும் ஒருமையுணர்ச்சியை வற்புறுத்தும். "உயிர்களெல்லாம் இறைவன் மேனி" என்கிறது சைவம் "எல்லாம் வாஸுதேவ மயம்" என்று காண்பவனே மஹாத்மா" என்கிறது கீதை: "அன்னியமில்லாமல் தானே அனைத்தும் எனக் காணும் தீரனே ஞானி" என்கிறது உபநிஷத்து. "எல்லாநம் கிறிஸ்துவில் ஒன்று" என்கிறது பைபிள். "அல்லாமுன் எல்லா நம் ஒருதலம்" என்கிறது குரான். "சர்வ பூதங்களிலும் நானே இருக்கிறேன் என்று கண்டு, எல்லாரிடமும் அன்பு கொள்பவனே என் அன்பு மணி" என்கிறான் கண்ணன். எல்லா உடல்களையும் நடமாடும் கோயில்களாகக் கருதுகிறது ஹிந்து மதம். எந்த மதமும் பிறரை வெறுக்கச் சொல்லவில்லை! தனக்கே வாழச் சொல்லவில்லை.

உலகம் வான்—சூழ்ந்த கோயில்; எல்லா உயிர்களும் ஒரே சங்கிலித் தொடரான ஜீவமூர்த்தி. ஒவ்வொரு உயிருக்கும் இங்கே இரண்டு காரியங்கள் உண்டு. ஒன்று தன்னைக் காக்கும் வினை; மற்றொன்று உலகைக் காக்கும் வினை. உயிர், உலகு, இறைவன் ஆகிய முப்பொருள்களின் விளக்கமே எல்லாச் சமயங்களுமாகும். இந்த முப்பொருள்களும் சேர்ந்தே வாழ்க்கையாகும். ஒருமயமான இறைவனின்றி உலகமில்லை; உலகமின்றி உயி

ரில்லை; உயிர்களின்றி உலகிற்குப் பொருளில்லை; உயிரும் உலகும் இன்றி ஈசுவர சக்திக்கு ஆடலில்லை. ஆதலால் ஒவ்வொருயிரும் இறைவனிடத்திலிருந்து வந்து, வினை தாங்கி வாழ்ந்து, உலகின் முக்குண விகாரங்களை வென்று, நிர்விகாரியாகி மீண்டும் இறைவனை நோக்கி யாத்திரைசெய்து, அவனுடன் கலந்து இன்புறும். இது தான் அனாதிகாலமாக நடக்கும் ஜீவயாத்திரை; இந்த யாத்திரைக் கூட்டமே மனித சமுதாயம். எல்லாரும் ஆன்மநேயரே; இதை யறிந்தால் உலகில் அன்பும் அமைதியும் நிலவும்.

ஒருதிருநாளில் எத்தனையோ வகையான ஜனங்கள் ஒன்றுபட்டு மகிழ்ச்சி கொள்கிறார்கள். ஒரு பிரசங்க சபையில் பல வகுப்பாளிகள் ஒருமித்து அமர்ந்து அமைதியாயிருக்கிறார்கள்; இதேமாதிரி வாழ்விலும் அனைவரும் ஒரே ஆத்மநேசராக வாழலாம். வழியுண்டு. ஆனால் மனம் ஒன்று இடையே குறுக்கிடுகிறது; சூரிய ஒளி ஒரே வெண்மையாகக் காண்கிறது; பளிங்குக் கண்ணாடியால் பார்த்தால் எழு நிறம் தோன்றும். எழு நிறமும் ஒரே சூரிய ஒளிதான்: இதை நினைக்காமல் மனம் சூரியனையே எழு விதமாக நினைத்து மயங்குகிறது. மனம், நாம் முதலிற் சொன்ன தாயைப்போல், சுயாபிமானமும் பேதபுத்தியுங் கொண்டு தனது, தான் தனக்கு என்று, பிறர் வாடையை மறுக்கிறது. "எனது, யான்" என்னும் இந்த மனவிகாரந்தான் உலகை வேற்றுமைக் கந்தலாக்குகிறது.

ஒரு கோயிலில் விநியோகம் நடந்தது; ஒருவர் தளிகையைத் தூக்கிவந்தார்; ஒருவர் உருட்டி வழங்கினார்; இன்னொருவர் கண்ணை உருட்டி ஆட்களின் நெற்றியைப்பார்த்தார். "அடலே, நீ எங்கே வந்தாய்; போ" என்றொருவனை விரட்டினார்.

"ஐயா! கடும்பசி; பிரசாதம் சாதிக்க வேண்டும்" என்று கெஞ்சினான் அவன்.

"போ உன் கோயிலுக்கு; இது எங்கள் கோயில்" என்று விரட்டினார்.

அந்த ஏழைக்கு ஆத்திரம் வந்தது; எப்படியோ சென்று பசியைத் தீர்த்துக் கொண்டு வந்து, சுவாமி புறப்படும்போது அவர்மேல் ஒரு மலைப் பிஞ்சைச் சுண்டி விட்டான்.

உடனே பற்றிக் கொண்டது சண்டை—கலைச் சண்டை. சுவாமி திகைத்துப்போய் ஒரு மணி நேரம் அறியா மனிதரின் கலைச் சண்டைக்கும் சாட்சியாயிருந்தார்.

இச்சண்டை முற்றி ஊர் இரண்டாகி, கோர்டிற்கும் நல்ல வேலை வைத்துவிட்டது. இப்படிப்பட்ட மதச் சண்டைகள் அடிக்கடி உண்டாவதேன்? மனவிகாரமே காரணம். ஏகரஸமான ஆத்ம திருஷ்டியை மனமாயம் மறைக்கிறது.

இதோ அவன் என்னைப்போல் விபூதி பூசுகிறவன்; அவனே என்னினம்; மற்றவன் நாமம் போடுகிறவன்; அவன் அன்னியன்; இன்னொருவன் சூனிய நெற்றியன், அவன் கிட்டவரக் கூடாது. இவன் வெள்ளை, என்னினம்; இவன் கறுப்பு; சை! கறுப்பு மனிசன் மனிசனா? ...இவன் எனது தேசத்தான்; இவன் அன்னிய நாட்டான்; இவனை நசுக்கி நாமே உலகை ஆளவேண்டும்" என்ற சுயநல அகம்பாவத்தின் பிறப்பிடம் மனமே. மனத்தின் தன்மை ஆசை அகம்பாவம்—இரண்டுமாம். இந்த இரண்டே ஒரே உலகை, ஒரே மனித சமுதாயத்தைப் பலவாகப் பிரித்து நலிக்கின்றன. தேவாசுர யுத்தமெல்லாம் மனப்போரே; உலகில் பெருகிய கொலை வெறிகளும் கொலைக் கருவிகளும் இரத்த வெள்ளமும் மனோராக்ஷஸன் செய்யும் கொடுமைகளே. "எனது நார்டிக் (Nordic) ஜாதியேபெரிது, அதுவே அரசு; மற்ற நாட்டார் அதற்குஅடிமை என்னை மிஞ்சும் உலகை அழித்து நானே ஆளவேண்டும்" என்று ஹிட்லரின் மனப்பேய் ஆசைப் புயல் வீசிக் கிளம்புகிறது. உடனே அழிபோருக்கு வேண்டிய கொலைக் கருவிகளைச் செய்து குவிக்கிறது, பிறகு பேராசைச் சனி கிளம்பி, போலந்தின் மேல் பாயத் தூண்டுகிறது; பிறகு நாசச் சனி ரஷ்யாமேல் ஏவிவிடுகிறது. முடிவில் போர்ப் பேய் ஆளையே பலிவாங்கி மனத்தில் ஒளிந்துகொள்கிறது. ஆயிரக்கணக்கான யூதர்களைக் கொலை செய்தது எது? ஹிம்லர் மனத்திற் புகுந்த சாதிச் செருக்கு என்ற பேயே; அந்தப் பேய் அவனைக் கொலைக்குக் கொலை இட்டுச் சென்று முடிவில் பொடாஸியம் ஸைநீட் (Potasseum Cynide) தந்து அவனையே ஒரு விநாடியில் பழிவாங்கி விட்டது.

இந்த மனப் பேயை மட்டும் மனிதன் வென்று ஆத்ம சமதர்சனம் பெற்றால், சாதி மத நிற நாடு வேறுபாடின்றி எல்லாரும் கலந்து வாழலாம். மஹான்களின் திருவாக்குகளெல்லாம் மனப் பயிற்சிக்கு எவ்வளவோ பாடுபட்டும் இன்னும் அதன் கொட்டம் அடங்கவில்லை. அது செய்யும் திருவிளையாடல்களை வரிசையாகக் காண்போம்.

## ஆனந்த முரசு

தம் தம் மக்களை இனி காணலாம், கண்டு களித்து அளவளாவலாம், தாய் நாட்டின் தவபூமியில் அடிவைக்கலாம் என்று தேசத்திற்காக சகலத்தையும் த்யாகம் செய்துச்சென்ற நமது இந்தியப் போர்வீரர்களின் இதயத்தில் ஆனந்த முரசு அடிக்கின்றது. அத்தகைய வீரரைக் காணப்போகும் அவர்களது மக்களின் இதயங்களும் ஆனந்த முரசு பறைசாற்றுகிறது. இனியாவது யுத்தபூதம் ஒன்று கிளம்பி மக்களைச் சிதறவடிக்காமல் சாந்தியும் சமாதானமும் நிலவி இருக்க பகவான் அருள்புரிவாராக.

# 3. மனத் திருவிளையாடலே!

15—8—45 ரேடியோவில் "ஜப்பான் சரணடைந்துவிட்டது; போர் நின்றது" என்ற முழக்கம் கேட்டது. உலகமே "உஸ் அப்பாடா" என்று ஆறுதலடைந்தது.

"இந்தப் போர் எதற்காக வந்தது? ஆறுண்டுகள் உலகம் குண்டுத்தீயில் வெந்ததேன்? எங்கும் பயம், பஞ்சம், பட்டினி, கொள்ளை, அநியாயம், சாவின் சண்டதாண்டவம் கண்டோம்; இந்த அட்டூழியம் நடந்ததேன்? கடவுளுக்குக் கண்ணிருந்தால் இப்படி நடக்குமா?" என்று கூடச் சிலர் கேட்டனர். டாங்கு, கண்ணி, வேட்டை விமானம், விமானக் கோட்டை, ராகெட் பாம், ரேடியோ ஆகிய எத்தனையோ கருவிகளால் போர் பயங்கரமாக வளர்ந்தது; இருபுறமும் குண்டுகளால் பூவாசெண்டு நடந்தது. ஹிட்லர் எத்தனையோ பேய்க் கருவிகளைக் கொண்டு பிசாசுபோலப் போர் செய்தான். முடிவில் தனது நாசிப் படையுடன் நாசமானான். கிழக்கே ஜப்பான் குண்டுக்குக் குண்டு கொடுத்து, முண்டிக் கொண்டிருந்தது. ஒரு பயங்கரமான பேய் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டது. இந்தப் போரின் படுநாசப் பேய். அதுதான்—அணுகுண்டு (Atomic Bomb). ஒரே அணுகுண்டில் ஹிரோஷிமா (Hiroshima) துறைமுகம் பூண்டோடழிந்து சாம்பலானது; இன்னொன்று நாகசாகியைச் சுடுகாடாக்கியது.

தைரியப் புலியான ஹிரோஹிதேவே அலறியடித்து 'அபயம் அபயம்' என்று மக்கார்தரைச் சரண் புகுந்தான். போட்ஸ்டாம் நிபந்தனையை முன்னே ஒப்பாதவன், அணுவெடிச் சத்தம் கேட்டதும் நடுநடுங்கிப்போய் ஒப்புக்கொண்டான்.

இந்தப் போரின் பெரிய பலன் அணுகுண்டுதான். இந்தக் குண்டு ஒன்றால் ஓர் ஊரைத் தீர்த்துவிடலாம். முன்னே திரிபுராதிகள் மூன்று கோட்டையில் வந்திறங்கி ஊர்களை எரித்த கதையும் இப்படித்தான் போலும். திரிபுரம் என்பது கோட்டை விமானமாயிருக்கலாம். அதிலிருந்து அவர்களும் அணுவெடிகளைப் போட்டிருக்கலாம். நாம் புராணப்புளுகு என்றதெல்லாம் இப்போது ஸயன்ஸ் யுகத்தில் நிதர்சனமாக நடக்கின்றன. ஓரேவிமானத்தில் அணுவெடி வைத்துக்கொண்டு ஒரு நாள் வட்டமிட்டாலே போதும்; கல்கத்தா, பாட்னு, காசி, பிரயாகை, நாசிக், பம்பாய் எல்லாம் நிர்மூலமாக்கிவிடலாம். இப்படிப்பட்ட படுநாசக் குண்டு இப்போது ஆங்கில—அமெரிக்க வல்லரசிற்குக் கிடைத்திருக்கிறது. "அடைக்கலம் புகுவாயா? அணுகுண்டு வேண்டுமா?" என்று இனி யாரையும் மிரட்டிவிடலாம்.

அணுகுண்டுதான் ஸயன்ஸ்—நாகரிகத்தின் சர்வாதிகாரி—சர்வநாசாதிகாரி. அணுவெடி ரகசியத்தை மூடிவைக்க முடியாது, எப்படியாவது மற்ற நாடுகளும் இதைச் செய்தே தீரும். முன்பே ஜெர்மனி அதை ஏறக்குறையச் செய்து விட்டதாம். ஐந்தாறுண்டுகள் நேசப்படையினர் ஜெர்மனி ஜப்பான் தேசங்களைக் கண்காணிக்கலாம். அதற்குள் வியாபாரப்போட்டிகளும், இராசதந்திரச் சூழ்ச்சிகளும்

விபரீதமாகவளராதிருக்கவேண்டும். பிறகு நாட்டுக்கு நாடு அணுகுண்டு செய்து வைத்துக்கொண்டு நரக சதுர்த்தி தொடங்கினல், உலகம் அழிந்தே தீரும். இப்போது ஆறுண்டுகள் நடந்த போர் அப்போது ஆறே வாரத்தில் உலகைச் சுடுகாடாக்கலாம்...

மனித சமுதாயம் அறிவை வளர்த்து, பௌதிக ரசாயனக் கலையை வளர்த்து, முடிவில் அணுகுண்டு லீலையைக் காண்கிறது.

பிரம்மா ஆக்கி, விஷ்ணு காக்கும் உலகை அழிக்க அணுகுண்டு காலருத்திரன்போலப் புறப்பட்டிருக்கிறது. நாஸ்திகர்களுக்கு இது பெரிய கொண்டாட்டமாயிருக்கிறது! சமாதான நாளன்று சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் கோயில்களிலும் தொழுகை நடந்தது. "ஆண்டவனே! உன்னருளால் போர்நின்றது; பகைவர் பணிந்தனர்; அமைதி வந்தது; வந்தனம்!" என்று பக்தர் தொழுதார்கள். "ஹஹஹ—ஆண்டவனும் அமைதியாம்! எல்லாம் புரட்டு. அணுகுண்டுதான் போரை வென்றது; அதனலேதான் போர் நின்றது; கடவுளாலில்லை; அப்படிக் கடவுளுக்குச் சக்தியிருந்தால் டான் ஜிக்குடன் போரை நிறுத்தாததேன்? எங்கும் நிறைந்த கடவுள் மனிதரைப் பிரித்துப் பகைப்போர் மூட்டுவதேன்? மனித சமுதாயம் அமைதியாக வாழச்செய்ய அவரால் முடியாதா?" என்று பலர் கேட்கிறுர்கள். கீதை இதற்குப் பதில் சொல்லுகிறது.

"கடவுள் எவர் பாவத்தையும் சுகதுக்கங்களையும் ஏற்பதில்லை; அவர் சர்வ சாட்சியாயிருக்கிறர். அஞ்ஞானத்தால் பாபமுண்டு ஜந்துக்கள் மயங்கித்துன்புறுகின்றன.

"ந ஆதத்தே கச்யசித் பாபம்
ந சைவ சுகிர்தம் விபு:
அஜ்ஞானேன ஆவ்ருதம் பரபம்
தேன முஹ்யந்தி ஜந்தவ:"

கடவுள் மனிதனுக்கு நல்ல உடம்பு, தூய உள்ளம், தெளிந்த மூளை, பகுத்தறிவு, இரக்கம், பரோபகாரத் தன்மை, அன்பு, அருள் எல்லாம் கருணையுடன் கொடுத்தார். மனிதன் புலன்களூடே புறம் போய் அலைந்து, ஆசை ஆணவ வெறி கொண்டு மனதைப் பேயாக்கி, நோயாக்கிக் கெடுகிருன். உலகையும் கெடுக்கிருன். வீட்டில் வாய்ப்போர் செய்வதும் இந்த மனப் பித்தமே; உலகில் குண்டுப்போர் செய்வதும் மனப் பேயே.

வீட்டுக் கலகமும், நாட்டுக் கலகமும் மனத் திருவிளையாடல்களே. ஒரு சமுதாயத்தை ஆக்குவதும் அழிப்பதும் மனமே. மனமே கட்டு; மனமே விடுதலை; மனமே மனிதன். இயற்கை மனிதனுக்கு அறிவைத் தந்தது; அந்த அறிவால் மனிதன் பல கலைகளைக் கண்டான். கலைகளைக் கொலைக் கருவிகளாக்கியது பேராசைப் பேய்பிடித்த கொடிய மனமே.

அடிக்கடி போர் வெறி கொண்டு உலகை அழிக்கும் அசுரர், மனத்தின் விகாரங்களே. ஹிட்லர் மனத்தின் கொடிய வடிவமே, ஓர் இட்லர் அழிந்தான். மனதில் இன்னும் எத்தனையோ இட்லர்கள் மறைந்திருக்கிருர்கள். இன்று சமாதானம் செய்துகொண்ட நேயரே நாளை அணுகுண்டு வீசிக்கொள்ளலாம். எல்லாம் மனத் திருவிளையாடல்.

ஆதலால் உலகப்போர் ஒழிய வேண்டுமானல் உலக மனமே திருந்தவேண்டும், உள்ளத்தை உயர்த்தவேண்டும். அதுதான் ஒரு சமுதாயம் உயரும் வழி.

உலக சமுதாயத்தில் மனவிகாரங்களால் உண்டான விபரீதங்களை அடுத்தபடி காண்போம்.

பி. ஸ்ரீ

# விளக்கில் ஏற்றிய விளக்கு

காவேரி வெள்ளம் கரை புரண்டு போகிறது. ஓடம் கிடைக்காமல் அவசரமாக ஸ்ரீரங்கம் போகிறவர்கள் தாழி என்ற சிற்றோடத்தில் (இந்நாளில் பரிசல் என்று சொல்லுகிறோம்) போய்க் கொண்டிருக்கிறார்கள். சூரியாஸ்தமனமாகி, மலையும் இருட்டுமாய் அக்கரை இக்கரை தெரியவில்லை. இடியிடிக்கும் சத்தமும், வெள்ளம் மேன்மேலும் பொங்கி கரையிலுள்ள மரங்களைச் சாடும் ஓசையும் காதில் விழுகின்றன. தாழிக்காரர்களும் கூச்சலிடுகிறார்கள் "ஐயையோ! முழுகிவிடும்போலிருக்கிறதே, ஒருவராவது இறங்கினாலொழிய, பரிசல் முழுகிவிடும்" என்று. உடனே ஒரு குரல் "நமக்கெல்லாம் ஒருயிரான நம் பிள்ளையைக் கரையிலேயே கொண்டுவிடுங்கள்" என்று முழங்குகிறது! அதே சமயத்தில் ஒரு பெண் ஆற்றிலே குதித்துவிட்டாள் என்பது அந்தகாரத்தைப் பிளந்த ஒரு மின்வெட்டில் தெரிந்துவிடுகிறது.

தாழி வேகமாய்க் கரை சேர நம்பிள்ளைமகாவியாகுலத்தோடு, "ஐயோ அந்த அம்மாள் விழுந்துவிட்டாளே!" என்று பரிதவிக்கிறார். அப்போது, "வருத்தப்பட வேண்டாம் ஸ்வாமி! இதோ இருக்கிறேன்" என்று மறுபடியும் கேட்கிறது அந்தக் குரல். "நல்ல வேளை. மரத்தையோ திடரையோ பற்றியிருக்கிறாள்; கரைக்கு அருகேதான் இருக்க வேணும்" என்று ஊகிக்கிறார் நம்பிள்ளை. பிறகு பரிசிலோட்டிகளின் உதவியால் அவளைக் கரையேற்றுகிறார்.

அவள் அவரடிகளில் வீழ்ந்து, "தாங்கள் என் ஆத்மாவைக் கரையேற்றியதுபோல், ஆற்றிலே முழுகிப் போகிறபோதும் கோரைமேடாகவும் வந்து ரக்ஷித்தீர்களே!" என்று விண்ணப்பம் செய்துகொள்கிறாள்.

நம்பிள்ளை அவளுடைய மகத்தான தியாகத்தைக் குறித்து, ஆச்சரியப்பட்டுக் கொண்டே, "உன்னுடைய நம்பிக்கை அப்படியுமாகாதோ!" என்று ஆனந்தப்படுகிறார்.

நம்பிள்ளை ஒரு வைஷ்ணவ ஆசாரியர். ஸ்ரீரங்கத்திலே காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தார். ராமானுஜருக்குப் பின் பாகவத தருமத்தைப் பேணி வளர்த்த பிரசித்தமான ஆசாரியருங்கூட "நம்முடைய பிள்ளை" என்று குருவால் அபிமானிக்கப் பெற்றதால், 'நம் பிள்ளை' என்று சிறப்பாகப் பெயர் பெற்றவர். இவருடைய சிஷ்யர்கள் அல்லது ஞான புத்திரர்களில் ஒருவர்தான் வியாக்கியான சக்கரவர்த்தி என்று கொண்டாடப் பெறும் பெரியவாச்சான் பிள்ளை. பிரசித்திபெற்ற குருபரம்பரை ஆசிரியரான பின்பழகிய பெருமாள் ஜீயரும் இவருடைய சிஷ்யர்தான்.

நம்பிள்ளையின் குரு நஞ்சீயர். இவர் நூறுதரம் திருவாய்மொழிக்குப் பொருள் சொல்லிக் காலக்ஷேபம் நடத்தினாராம். இவருடைய குரு கூரேசன் என்ற கூரத்தாழ்வானின் புதல்வரான பட்டர் என்பவர். ராமானுஜர் காலஞ் சென்றதும் பட்டர் ஆசார்யஸ்தானம் வகித்து,

வைஷ்ணவப் பிரசாரம் செய்து வந்தாராம். நஞ்சீயர் அக்காலத்தில் வைஷ்ணவக் கொள்கைகளை மறுத்து வந்த வேதாந்தியாகப் பிரசித்தி பெற்றிருந்தார். ஒரு நாள் பட்டர் இவரிடம் போய், "பிக்ஷைக்கு வந்தேன்!" என்றார்.

"போம் நம்முடைய சத்திரத்துக்கு." என்றார் நஞ்சீயர்.

"எனக்கு வேண்டியது சோற்றுப் பிச்சை இல்லையே!"

"கா பிக்ஷா ?" (என்ன பிக்ஷை?)

"தர்க்க பிக்ஷா ?" (தர்க்க பிக்ஷை)

தர்க்கத்திலே வேதாந்தி தோற்றார். பட்டர் இவருக்கு ஞான பிக்ஷை அளித்துச் சிஷ்யராக்கிக் கொண்டார். வேதாந்தி துறவியாகி வைஷ்ணவத்தைப் பரப்புவதில் குருவுக்கு விசேஷ உதவி புரிந்து வந்தார். எனவே பட்டர் இவரை விசேஷமாய் கடாட்சித்து, "நம்முடைய ஜீயர் வந்தார்" என்று அணைத்துக் கொண்டாராம்; அன்று தொட்டு வேதாந்தி நஞ்சீயர் என்று பேர் பெற்றார்.

பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை முதலானவர்களெல்லாம் ராமானுஜருக்குப் பின் விளக்கில் கொளுத்தின விளக்குப் போலே, வைஷ்ணவ தர்மத்தை வளர்த்துக்கொண்டிருந்தனர். பட்டர் காலத்திலும் நஞ்சீயர் காலத்திலும் ராமானுஜருடைய ஆத்மசக்தி நன்றாகப் பிரகாசித்தது. நம்பிள்ளை காலத்திலேயே இந்தச் சக்தி ஒருவாறு குன்றிப் பொறுமையும் பிளவும் ஏற்பட்டன என்று ஊகிக்கலாம்.

அப்பால் தாயாதிகளாயிருந்த இரண்டு தத்துவ ஞானிகளின்பேரும் புகழும் பிரசித்தமாயிருந்தன. இவர்களில் ஒருவர் பிள்ளைலோகாச்சாரியர். மற்றவர் வேதாந்த தேசிகர். இவர்கள் கி. பி. 13-ம் நூற்றாண்டிலும் பதினாலாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தார்கள்.

இக்காலத்திலேதான் தென்னிந்தியாவில் முதல் முதல் முகம்மதியர் படையெடுப்பு ஏற்பட்டது. அல்லாவுதீன் கில்ஜி என்ற டெல்லி மன்னனுடைய சேனாபதியான மாலிக்காபர் ராமேச்வரம் வரையிலும் வந்து கோவில்களை இடித்து, ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு போனான், அவன் திரும்பும் போது சமயபுரம் முதலான இடங்களில் சுல்தான்களை நியமித்தான்.

சமயபுரம் சுல்தான் ஸ்ரீரங்கம் கோயிலைப் பாழாக்க வந்ததும், ஸ்ரீரங்கநாத விக்ரகத்தை எங்கேயாவது ஒளித்து வைக்கவேண்டும் என்று எடுத்துக்கொண்டு போனார்கள், வைஷ்ணவர்கள். அப்போது தொண்டு கிழவராயிருந்த பிள்ளை லோகாச்சாரியரும், அவருடைய சிஷ்யர்களிற் சிலரும் மெய்காப்பாளர்களைப்போல், அந்த விக்ரகத்தை பந்தோபஸ்து செய்து கொண்டு போனார்கள்,

பிள்ளைலோகாச்சாரியார் பதினெட்டு 'ரகஸிய கிரந்தங்கள்' எழுதியிருக்கிறார். ரகஸ்யங்கள் என்றால், பலருக்கும் தெரியாமல் மறைக்கவேண்டும் என்று பொருளல்ல; குருமுகமாகச் சிஷ்யர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய—உபதேச பரம்பரையில் வந்த—விசேஷமான கருத்துக்கள் என்றுதான் பொருள். இந்த ரகஸ்ய கிரந்தங்களில் அதி முக்யமானது ஸ்ரீ வசன பூஷணம்.

இந்த நூல் நானூற்று அறுபத்திமூன்று சூத்திரங்களால் செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக ஒரு சூத்திரத்தைப் பார்க்கலாம்;

"குற்றம் செய்தவர்கள் பக்கல், பொறையும் கிருபையும் சிரிப்பும்

உகப்பும் உபகார ஸ்மிருதியும் நடக்க வேணும்''—(365 சூத்.)

குற்றஞ் செய்தவர்கள் விஷயத்திலே, பொறுமை மட்டும் போதாதாம். கிருபையும் காட்ட வேண்டுமாம். "நாம் பொறுத்திருந்தாலும் இவர்களைக் கடவுள் தண்டிக்கப் போகிருரே. ஐயோ! அதற்கு நாம் என்ன செய்வோம்!" என்று இரக்கப்படவேண்டுமாம். கிருபையோடு சிரிப்பும் வேண்டுமென்கிருர். சிரிப்பிலும் இகழ்ச்சி கிடையாது. தற்பெருமை கிடையாது. துன்பத்தை வென்று எதிரிக்கும் இதம் செய்யும் சிரிப்பே அது. குற்றம் செய்கிறவர்களையும் உகந்து திருத்தவும் விரும்புகிருர்கள் பக்தர்கள். எனவே சிரிப்பும் வேண்டுமென்கிருர். கடைசியாக நம்முடைய குறைகளை நாம் மறந்துவிடாமல் உபகாரம் செய்கிருர்களே' என்ற நினைவோடு நன்றி பாராட்டவும் வேண்டுமாம்.

இப்படிப்பட்ட உயர்ந்த கொள்கைகளையுடைய ஸ்ரீ வசனபூஷணத்தை ஓர் அரணுக, பிள்ளை லோகாச்சாரியரின் தம்பியான அழகிய மணவாளப்பெருமாள் நாயனர், 'ஆசார்ய ஹிருதயம்' என்ற ஒரு நூல் இயற்றியிருக்கிருர். இங்கே ஆசார்யர் வைஷ்ணவத்தின் பிரதம ஆசாரியரான நம்மாழ்வார்தான். இவரது இதயத்தை வெளியிடுவதால், இதை 'ஆசார்ய ஹிருதயம்' என்கிருர்கள்.

இச் சகோதரர்கள் ஸ்ரீரங்கத்திலே பிரசித்தி பெற்றிருந்த காலத்திலேதான் வேதாந்த தேசிகர் என்ற பிரபல ஆசாரியரும் காஞ்சீபுரத்திலே பிரசித்தி பெற்றிருந்தார். இவ்விரு ஆசாரியர்களுடைய சிஷ்யர்களுக்குள்ளே அடிக்கடி சச்சரவுகள் தோன்றின. இந்தச் சச்சரவுகள் தான் வடகலை தென்கலைச் சண்டைகளாக நாளடைவில் முற்றிவிட்டன.

இந்த இரண்டு ஆசாரியர்களும் தாயாதிகள் என்று சொல்லப்படுகிறது. தாயாதிச் சண்டையே ஒரு பாரதமாக விளைந்துவிட்டதல்லவா?

---

## ஸ்ரீ தியாகராஜ கிர்த்தனை

*இராகம் : முகாரி* | *தாளம் : ஆதி*

*பல்லவி*

சிந்திஸ்துன்னடே யமுடு —சி

*அநுபல்லவி*

ஸந்ததமு சுஜனுலெல்ல சத்பஜன ஜேயுட ஜூசி —சி

*சரணம்*


சூலா பாச த்ருத பட ஜாலமுல ஜூசி மரி மீ
கோலாகலமுலுடுகு காலமாயனேயனுசு —சி
வாரிதி சோஷிம்பஜேயு க்ரூர கும்ப ஜூனி ரீதி
கோர நரகாதுல நணசு தாரக நாமமுனுதலசி —சி
தாரி தெலிய லேக திருகு வாரலென த்சாவுனனின
ஸாரமனி தியாகராஜ ஸங்கீர்த்தனமு பாடெதானி —சி

# தாரக நாமத்தின் சக்தி



1. யமன் சிந்தனையிலாழ்ந்திருக்கிறான். ஏன்?
2. பக்தர்கள் ஸத்பஜனை செய்வதைப் பார்த்தே!
3. சூலம், பாசக்கயிறு, யமதூதர்கள் முதலியவர்களுக்கு இனி வேலையில்லையே என்று!
4. த்யாகராஜருடைய தாரகநாம கீர்த்தனைகளை ஜனங்கள் பஜனை செய்வதால் யமன் அவர்களை அணுக முடியாது தவிக்கிறான்.

## பெரியாழ்வார் திருமொழி—1. ப. 8. தி. (3)




பஞ்சவர்தூதனாய்ப் பாரதம்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகம்கிடந்த நற்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டுஅருள்செய்த *
அஞ்சனவண்ணனே ! அச்சோவச்சோ
ஆயர்பெருமானே ! அச்சோவச்சோ.

1. பாண்டவர் கிருஷ்ணனை தூதனுப்புகின்றனர். 2. கிருஷ்ணன் தூது. 3. பாரதம் கை செய்தார். 4—5 காளிந்தியை அடக்கி அதன் மேல் நர்த்தனமாடுகிறார். 6—7 காளிந்தியின் வேண்டுகோளுக்கு இணங்கி அருள் செய்கிறார். 8. ஆயர்பெருமானே ! வருக, வருக !

# பரமாணு ஜீவன்கள்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M. B., B. S. D. T. M.

ஆங்கிலத்தில் வைரஸ் என்ற பெயர், தோஷகுணமுள்ள எல்லா அணுஜீவன்களுக்கும் ஒரு பெயராக விளங்கி வந்தது. சேம்பர்லந்து (Chamberland) நீரில் தங்கியிருக்கும் அணுக்களை எல்லாம் வடிக்கட்டி எடுக்க ஒரு கருவி கண்டுபிடித்தார். இது முதல் இந்த விஷயமாகப் பலவித ஆராய்ச்சிகள் நடைபெற்றன. சேம்பர்லந்து வடிக்கட்டுக் கருவியால் நீரில் கலந்திருக்கும் பாக்டிரியாக்களையும், அவைபோன்ற மற்ற அணுஜீவன்களையும் நீரிலிருந்து பிரித்துவிடலாம். அப்படிப் பிரிக்கும்போது அந்த நீர் சுத்தமடைந்துவிடும். அதில்ஒருவிததோஷ குணமுள்ள அணுஜீவன்களுமிருக்க முடியாதென்று தோன்றியது. ஆனால் சீக்கிரமாகவே ஒருசந்தேகம் ஏற்பட்டது. அணுஜீவன்கள் முற்றிலும் சேம்பர்லந்து வடிக்கட்டுக் கருவியால் நீரிலிருந்து பிரிக்கப்படுகின்றனவா என்பதுதான். இந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்து, இப்படி வடிக்கட்டினபோதும் சில அணுஜீவன்கள் வடிக்கட்டின நீரில் கலந்திருப்பதைத் தெளிவாகக் காண்பித்தவர் லூயிப்பாஸ்டர். வெறி நோய்க்குக் காரணமான அணுஜீவன் இப்படிப்பட்ட அணுஜீவன் என்று அவர் தெளிவாக்கினர். 1892-ம் ஆண்டில் ஐவனேவ் (Iwanow) என்ற ருஷிய விஞ்ஞானி புகையிலைக்கு உண்டாகும் ஒருவித நோய் இவ்வித அணுஜீவனினால் ஏற்படுகிறது என்று நிரூபித்தார்.

இம்மாதிரியான வடிக்கட்டு அணுஜீவன்களுக்கு வைரஸ் (Virus) என்ற பெயர் வைக்கப்பட்டது. அணுஜீவன்களுக்கு பொதுவான பெயராயிருந்த வைரஸ் என்னும் பெயர் இதுமுதல் வடிக்கட்டு அணுஜீவன்களுக்குமட்டுமே என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்குப் பிறகு வைரஸ்ஸைப் பற்றிய விஞ்ஞானம் அதிகரிக்கத் தொடங்கியது.

இந்த அணுஜீவன்கள் சாதாரண அணுதர்சியினுடைய உதவியால் காண முடியாதவை. ஆனால் இவை இருக்கும் நீரைப் பக்குவமான முறையில் சாயமேற்றி ஆயிரம் மடங்கு பெரிதாகக் காண்பிக்கும் அணுதர்சியின் உதவியால் காணலாம். சிறு (0.25) அளவுள்ள வட்டங்கள்போல் அவைகளைக் காணலாம்.

வடிக்கட்டிப் பிரிக்கும் சேம்பர்லந்துக் கருவிக்கு ஃபில்டர் காண்டில் என்று ஆங்கிலத்தில் பெயர். இந்தப் பெயர் விளங்குவதற்குக் காரணம் என்னவெனில், இது வெள்ளை மண்ணினால் மெழுகுவத்தி போன்ற உருவமுள்ளதாக இருக்கிறது. இக்கருவிகளைப் பல அளவுள்ள துவாரங்களடங்கியவையாகச் செய்யலாம். இவ்விதக் கருவிகள் வழியாய்ச் செல்லவைத்து, பல வைரஸுகளின் பருமனை அறிந்து கொள்ளலாம். வேறு பல சூக்ஷ்மமான முறைகளையும் கையாடி வைரஸுகளுடைய பருமனை நிர்ணயிக்கிறார்கள்.

அணுஜீவன்களை வடிக்கட்டக் கூடியவை வடிக்கட்டக் கூடாதவை என்று இருவகுப்பாகப் பிரிக்கச் சில தடங்கல்களுண்டு. க்ஷயரோக பாக்டிரியாவுக்கு ஒரு மிகச் சிறிய உருவமுண்டென்றும், அந்த உருவ

முள்ள அணுக்கள் வடிக்கட்டுக்கருவியினுள்ளே புகுந்து வெளி நீரில் செல்லக்கூடுமென்றும் தெரியவருகிறது. அப்போது க்ஷயரோக பாக்டிரியாவை வடிகட்டக்கூடாத அணுஜீவனென்ற வகுப்பில் சேர்ப்பதா என்ற சந்தேகமுண்டாகிறது. இது போலவே விப்ரியோ (Vibrio) என்ற வளைவு பாக்டிரியாவும் வடிக்கட்டுக் கருவியினுள்ளாகப் புகுந்து செல்லக்கூடியது. வடிக்கட்டுத்துவாரங்களில் ஒட்டிக்கொண்டு வடிக்கட்டுக் கருவியினுள்ளாகப் புகுந்து செல்லாத மிகச் சிறிய அணுஜீவன்களுமுண்டு. இத்தகைய காரணங்களினால் வடிக்கட்டக்கூடிய அணுஜீவன்களென்றும், வடிக்கட்டக்கூடாத அணுஜீவன்களென்றும் அணுஜீவன்களைப் பிரிக்கமுடியாது.

வைரஸ்ஸுகளை உயிரினங்களில் எந்த வகுப்பில் சேர்ப்பது? ஜங்கம இனத்திலா? அல்லது தாவர இனத்திலா? ஜங்கம இனத்தில் அணுஜீவன்களுக்கு புரோட்டோஸோவா என்று ஆங்கிலத்தில் பெயர். வைரஸ்ஸுகளின் குணவிசேஷங்கள் நன்கு வெளிப்படாததினால் இந்தச் சந்தேகம் உண்டாகிறது.

ரேபீஸ் என்ற வெறிநோய் வைரஸை இப்போது நடைபெறும் ஆராய்ச்சிகள் ஒருவித புரோட்டோஸோவா என்று காண்பிக்கின்றன. வைரஸ்ஸுகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் விருத்தியடையும் போது சில வைரஸ்ஸுகளை தாவர வகுப்பில் சேர்க்கவேண்டியதாகலாம்.

வைரஸுகள் பாக்டிரியாக்களைப் போல தனிமையாக உணவு நீரில் வளர சக்தியற்றவை. பிராணிகளுடையவும், தாவர வர்க்கங்களுடையவும் ஜீவாணுக்களின் உள்ளேதான் வளரும். பெரியம்மை வைரஸ் மனிதனுடைய ஜீவாணுவில் வளரும்போது, அதில் சில "உறுத்து சாதனங்களைக் (Irritation products or inclusion bodies) காணலாம். இவ்வித "உறுத்து சாதனங்கள்" அநேகமாய் எல்லா வைரஸ்களும் ஜீவாணுக்களில் செய்யக்கூடியவை. இவைகள் அந்த ஜீவாணுக்களின் அம்சங்களோ அல்லது வைரஸ்களின் வளர்ச்சிக்குவியல்களோ என்பது தீர்மானமாகவில்லை. வளர்ச்சிக் குவியல்களாகவே இருக்கலாம்.

வைரஸ்களால் ஆக்கிரமிக்கப்பட்ட ஜீவாணு இயற்கை வளர்ச்சிப் போக்கைவிட சில வேளை அதிக வேகத்துடன் வளரலாம், அவைகள் எண்ணிக்கையிலும் அதிகமாகலாம். சாதாரணமாய் இந்த ஆக்கிரமத்தினால் ஜீவாணு நாசமடையும், அப்போது "உறுத்து சாதனங்கள்" உண்டாகும். ரேபீஸ் என்ற வெறிநோயில் மூளைச் சோற்றணுக்களில் காணப்படும் உறுத்து சாதனங்களை நெக்கிரி என்பவர் கண்டு பிடித்ததற்காக நெக்கிரி பாடீஸ் (Negri bodies) என்று கூறுகிறார்கள்.

பெரியம்மை ஆக்கிரமித்த ஜீவாணுக்களில் காணப்பட்ட "உறுத்து சாதனங்களை" குவார்நியரி பாடீஸ் (Guarnieri bodies) என்று மேற்கூறிய காரணத்துக்காகவே பெயர் சொல்லப்படுகிறது.

அணுஜீவன்கள் சாதாரணமாய் ஈரமில்லாதபடி உலர்ந்தால் நாசமடையும். சில உலர்ந்த பொழுதும் உயிர் காப்பாற்றிக்கொள்ளும். அது போலவே, வெளிச்சம், உஷ்ணம், ரசாயன சாதனங்கள் முதலியவைகளுடைய தோஷத்தைத் தாங்குவதில் வைரஸ்கள் வித்தியாஸப்படலாம். வைரஸ்கள் கிலஸரினில்

(Glycerine) சாதாரணமாகப் பிழைத்திருக்கும். சிறு நீர், இரத்தம் இரத்தசாரம் இவைகளில் வெகு நாட்களுக்கு வைரஸ்கள் உயிர் தப்பித்துக்கொண்டிருக்கும்.

வைரஸ்களை (சினைப்படுத்திய) உயிருடனிருக்கும் கோழிமுட்டையிலிருக்கும் ஜீவாணுக்களில் வளரச் செய்யலாம். சேர்க்கை உணவு நீரில் வளர்த்தப்பட்ட தசை அணுக்களிலும் (Tissue culture) வளரச் செய்யலாம்.

நோயளிக்கும் வைரஸ்கள் நமது உடலில் புகும் வழிகள் பல. பெரியம்மையைப் போன்ற வைரஸ்கள் நாசித்துவாரங்கள் வழியாய் உட்செல்லும். ரேபீஸூம், மாட்டம்மையும் சர்மத்தின் வழியாய் புகுந்து செல்லுகின்றன. டிங்கு (Dengue) வைரஸ் கொசுகு கடித்து இரத்தத்தில் கலக்கிறது.

வைரஸ்நோய்களுக்கு நிவர்த்தன நிலை அனேகமாய் நெடுநாள் உடலில் தங்கக்கூடியது. சில வைரஸ் நோய்களுக்கு நன்ருய் காப்பாற்றக்கூடிய வாக்சிநேஷன் முறைகளிருக்கின்றன. இதற்கு உதாரணமாக அம்மைக் குத்துதலேயும் ரேபீஸ் வாக்சிநேஷனையும் கூறலாம். பெரியம்மை வைரஸை மாடுகளுக்குச் செலுத்தி அதன் உக்கிரத்தைக் குறைத்து, அந்தப் பாலை மாட்டிலிருந்து எடுத்து அம்மைக்குத்தினல் சில வருஷங்களுக்குப் பெரியம்மை வராது. வைரஸை முயலுக்கு மூளைத்தண்டில் கொடுத்து, அதைப் பாகம்செய்து ரேபீஸ் வாக்ஸின் செய்யப் படுகிறது.

---


## பார்த்திப நந்தவனம்

தினே தினே அளவற்ற புகழ்மாலையைச் சூடிக்கொண்டு தமிழகத்திற்கே...தமிழ் பெண்ணினத்திற்கே...பெருமையளிக்கும் நந்தவனத்தின் பார்த்திப வருஷத்திய முதல் மலரைப்படித்து பரம சந்தோஷமடைந்து நூற்றுக்கணக்கானவர்கள் எழுதியிருக்கிறுர்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனம்.

இவ்வருஷத்திய இரண்டாவது நந்தவனம் க்ரீஷ்ம ருதுமலர் தயாராகி விட்டது. மொத்தம் 128 பக்கங்கள்; 10 படங்கள். விலை ரு. 1—2 தான்.

| | | |
|---|---|---|
| 1. | ராஜலக்ஷ்மி | மதுரையில் பொற்கிழி |
| 2. | எஸ். அமிர்தா சுப்ரமண்யம் | அன்பு |
| 3. | வி. ராதாலக்ஷ்மி | சிதைந்த காதல் |
| 4. | கி. ஜயலக்ஷ்மி | துவாரகா யாத்திரை |
| 5. | ஆர். ஜானகி | கடமையா? கருணேயா? |
| 6. | என். உமாதேவி | இடையூறுகள் |
| 7. | எஸ். சீலி | டெலிபோனும் என் மனைவியும் |
| 8. | லக்ஷ்மி சுப்ரமண்யம் | சகுனம் எப்படி? |
| 9. | கே. பத்மாவதி | சிற்பியின் சிலை |
| 10. | ஸி. எஸ். எஸ். லக்ஷ்மி | சமையல் குறிப்பு |
| 11. | என். எஸ். ருக்மிணி | ஸரஸாவின் ஒட்டியாணம் |
| 12. | விசாலாக்ஷி நடராஜன் | அக்கரை பச்சை! |
| 13. | கே. கனகவல்லி | முற்றிலும் உண்மை |
| 14. | தேவகுஞ்சரி அம்மாள் | என்னை நினைச்சுக்கோ கொஞ்சம் |
| 15. | வை.மு.கோ. 68-வது நாவல்(தொடர்ச்சி)வாழ்க்கைத்தோட்டம் 33-64 | |

இன்றே ஆர்டர் செய்யுங்கள்

# இரணியன் வதைக் கதை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வேதங்களைக் கொண்டும் வேள்விகளைக் கொண்டும் மற்றுமுள்ள பல்வகைச் சாதனங்களைக் கொண்டும் சித்திபெறும் மஹாத்மாக்கள் ஜபம்செய்யும் திருநாமத்தையன்றோ நான் கூறினேன்; வனங்களிலும் பெரிய மலைகளிலும் வசித்துத் தவவேடம் பூண்டு முத்தியடைபவர்கள் பெறும் ஆனந்தத்தையன்றோ நான் இத் திருநாமத்தினால் பெற்றது; இத் திருநாமத்தின் மகிமை அளவிடக் கூடியதோ? பல ஆசிரியர்களிடம் பலகால் கேட்டு உணரவேண்டிய பல நூற்பொருள்களையும் நான்கு வேதங்களின் உட்பொருள்களையும் இத் திருநாமத்தினின்றுமே உண்மைப் பத்தர்கள் உணரப் பெறுவார்கள். எனக்கும் நான்முகன் முதலிய தேவர்கட்கும் ஸர்வஜ்ஞனான தனக்கும் அறிய நிலமல்லாத வைபவங்களையுடைய ஸ்ரீமந் நாராயணன் என் மனத்திற் குடிகொண்டுளன்; ஆதலால் மெய்ப்பொருள் கண்டவனாயினேன்; உனக்கும் இப்பொருளே காண் தஞ்சமாவது— என்று இனைய பலவுங் கூறினன்.

இவ்வளவு கேட்ட ஆசிரியன் அச்சிறுவனுக்கு யாதொரு மறுமொழியுங் கூற மாட்டாதவனாய் மனங்கலங்கி 'இனி நான் ஈடேறும் வழி என்னே! எனக்கு அழிவுகாலம் வந்திட்டது போலும்' என்று சிந்தித்துக் கொண்டு ஓடிச் சென்று இரணியனிடம் சேர்ந்து கனாக் கண்டவன் அதிசயங் கூறுமாறுபோலக் கூறத் தொடங்கி, "மஹா ப்ரபுவே! உன் மகன் நெஞ்சால் நினைத்தற்கும் வாயிற் சொல்லுதற்கும் தகாததானவற்றைச் சொல்லிக் கொண்டு கல்வி பயிலாதிருக்கின்றனன்'' என்றான்.

அது கேட்ட இரணியன் குருவை நோக்கி 'என் மகன் சொன்னவற்றைச் சொல்லாய்' என்றான். அதற்குக் குரு தலைமேல் அஞ்சலி செய்துகொண்டு "நாதனே! காதுக்கு நாராசம் போன்ற அச்சொல்லை நான் உனக்குச் சொன்னால் நரகத்தையடைவேன், நாவும் வெந்து போம்'' என்றான். அது கேட்ட இரணியன் 'எனது புதல்வனை வெகு சீக்கிரமாக இங்கு அழைத்து வாருங்கள்' என்று ஏவலாளர்க்குக் கட்டளையிட, அவர்கள் ஓடிச்சென்று ப்ரஹ்லாதனிடம் தந்தை கட்டளையைத் தெரிவிக்க, உடனே அவன் தந்தையிடம் வந்து வணங்கி நின்றான். அன்னவனை இரணியன் மார்பாரப் புல்கி அருகே உட்கார வைத்து 'குழந்தாய்! உனது குரு வெறுக்கும்படி நீ ஏதோ தவறாகச் சொன்னாயாமே; அச் சொல் யாது சொல்லு பார்ப்போம்' என்றான்.

ப்ரஹ்லாதன்: ப்ரணவ ஸ்வரூபியாய் உலகுக்கெல்லாம் ஒப்பற்ற தனிநாயகனான கடவுளின் திருநாமமே யான் கூறியது. உபதேசமாகக் கேட்டுணர்வதற்கும் சிந்தனை செய்தற்கும் பிறவித்துன்பக் கடலைக் கடத்தற்கும் மிக உரியதான இத் திருநாமத்திற் காட்டிலும் சிறந்தது வேறொன்றுமில்லையே; குரு வெறுக்கத்தக்க தொன்றும் யான் சொல்லவில்லையே.

இரணியன்: (குரு பொய்சொல்லியிருக்கமாட்டார்; உள்ளது உள்ளபடியே கூறுமியல்பினராதலால்

அவர் சொன்னதில் பொய்ம்மை ஒன்றுமிராது; குற்றமிருப்பின் தண்டிப்போம் என்று எண்ணி) குழந்தாய்! நீசொன்ன அச்சொல்லை விளக்கமாகக் கூறுவாயாக—என்ருன்.

ப்ரஹ்லாதன்: அறம் பொருளின்பங்களுள் விரும்பிய பலன்களை யெல்லாம் கொடுப்பதும் மோக்ஷத்தையளிப்பதுமான எம்பிரான் திருநாமமே நான் சொன்னது; அதற்குத்தான் திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரமென்று பெயர். எல்லாவுலகங்களிலும் சராசரப் பொருள்கள் அனைத்தின் உணர்ச்சியும் சொல்லுதற்கு ஏற்ற இடமாவது அந்தத் திருவெட்டெழுத்தேயாம். சிவபிரான் நான்முகக் கடவுள் முதலாகச் சாதாரண மனிதர்களளவும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர் இறந்தவரே யாவார். இதன் பெருமை பிறர்க்கு விவரித்துக் காட்ட முடியாதது. நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கவல்ல தெள்ளிய ஞானம் படைத்தவர்களே இதன் மகிமையை நன்ருகக் கண்டறிந்துள்ளார்கள். அல்லாத பிறர் சிறிது மறியார். ஸம்ஸாரக் கடலைக் கடக்கச் சிறந்த மரக்கலமாயுள்ளதும், எல்லோர்க்கும் ஆபரணம் போலப் பொலிவு செய்வதும், மங்களச் சொற்களுள் தலைமை பெற்றதும், உபநிஷத்துக்களின் ஸித்தாந்தமான தத்துவப் பொருளுமாகப் பிரசித்தி பெற்ற இத் திருமந்திரத்திற் காட்டிலும் சிறந்தவை வேறில்லை. உனது உயிர்க்கும் எனது உயிர்க்கும் மற்று மெல்லாவுயிர்கட்கும் இத்திருமந்திரமே எல்லா நன்மைகளையும் விளக்க வல்லது என்று நன்ருக ஆலோசித்தே இதனை நான் சொன்னேன்'' என்று கம்பீரமாகச் சொல்லி முடித்தான்.

ப்ரஹ்லாதன் இங்ஙனம் சொல்லக் கேட்ட இரணியன்—''அடா பயலே! நான் பிறந்த நாள் தொடங்கி இன்றளவும், நீ குறித்த பெயரைச் சொன்ன வாயையும் சிந்தித்த நெஞ்சையும் என்னுடைய ஆணை சுடுமென்பது மூவுலகிலும் பிரஸித்தம்; அப்படியிருக்க இந்தப் பெயரை உனக்குச் சொன்னவர் ஆர்? நீ இதனை யாருடனே கற்றுக்கொண்டாய்? மும்மூர்த்திகளும் மற்றைத் தேவர்களும் முனிவர்களும் எப்பொழுதும் சிந்திப்பது என் கழலிணையே, துதிப்பது என் பெயரே, ஆதலின் அவர்களெல்லோரும் உனக்கு இந்தப் புதிய பெயரைக் கூறுதற்கு அஞ்சுவர்களே; பிள்ளாய்! இதனை நீ வேறு யாரிடத்து உணர்ந்தாய்? என்னோடு போர் செய்யும் பொருட்டும் பலதரம் எதிர்த்து வந்து என்முன் நிற்க மாட்டாமல் கருடனது வேகத்தால் தப்பி யோடிச் சென்று மறைந்து பாற்கடலிலே புகுந்தொளித்துக் கொண்டு இன்னமும் வெளிவராமல் உறங்குப வணுகிய விஷ்ணுவின் பெயரை உனக்கு எல்லா நன்மைகளையும் விளைவிப்பதாகக்கூறினவர் யாரோ? நம் குலத்தில் தோன்றிய எண்ணிறந்த பல பெரியோர்கள் அந்த விஷ்ணுவினல் அழிந்தவர்களாயிருக்க இதனை நீ அறிந்து வைத்தும் அவன் பெயரைச் சொல்லத் துணிந்ததும் புத்தி என்னே! தன் இனத்திற்குப் பகையாகிய பாம்பின் பெயரை எலி பக்தியோடு கூறுவது முண்டோ? வலிமையிற் சிறந்தஎனது உடன்பிறந்தவனை ஹிரண்யாக்ஷனை ஒரு பன்றியின் வடிவமாய்த் தோன்றிக் கொன்றவனது பெயரைப் பகர்வதற்காகவோ உன்னை நான் பிள்ளையாகப் பெற்றது?

எவ்வுலகங்கட்கும் எவ்வுயிர்கட்கும் நானே தலைவனகவும் நானே எல்லாப் பொருள்களையும் படைத்

துக் காத்து அழிக்க வல்லவனுகவு மிருக்க, இந்தப்ரத்யக்ஷப்ரமாணத்தைக் கொண்டு என்னையே முழு முதற் கடவுளாகத் துணிதலை விட்டுக் காணப்படாதாரொருவனைக் கடவுளாகத் துணிய உனக்கு மனம் வந்ததே! நீ வாழக் கடவையோ! ஆதிகாலத்தில் தவமகிமையினுல் விஷ்ணுவென்றும் பிரமனென்றும் சிவனென்றும் சிறந்த நிலைமையை யடைந்தவர்கள், யான் பின்பு கொடுந்தவம் புரிந்து தலைமையை யடைந்ததனுல் எனது பாதுகாப்பின் கீழ் அடங்கியுள்ளார்கள். அசுரர்களாகிய நமக்கு இயற்கையிற் பகைவர்களான திருமால் முதலிய தேவர்கள் என் சிறப்பைக் கண்டு அசூயை கொண்டு என்னினுஞ் சிறப்பாக யாகமும் தவமும் செய்வராயின் அவர்கள் என்னினும் மேம்படக் கூடுமென்றெண்ணி நான் அவர்களை அங்ஙனஞ்செய்ய வொட்டாதபடி எனது வலிமையால் தடுத்திட்டேன்; அன்றியும் அப்படிப்பட்ட சிறந்த யாகம் தவம் என்பவற்றின் தன்மையை அறியலாம்படி அவர்கள் சாஸ்த்ரவிசாரம் செய்தலும் கூடாதென்று மறுத்திட்டேன்; ஆகவே அவர்கட்கு என்னிலும்மேம்பாடு அடைய ஒரு படியாலுமாகாது; ஆகையால்அவர்களெல்லாரும் என்னையே தங்களுக்கெல்லாம் கடவுளாகக்கொண்டு தங்கள் காரியங்களிலெல்லாம் என்னையே துதித்து வாழ்கின்றனர்காண்; பயலே! இப்போது நீ தவறு செய்ததை நான் பொறுத்தேன்; மீண்டும் இத்தன்மையனவான பயனற்ற வார்த்தைகளைச் சொல்லாதே; குருவின் கட்டளையே காக்கத்தக்கதென்று துணிந்து இனி அவரது கட்டளையின்படி வேதமோதுவாயாக; போ.— என்று மிகுந்த கோவக் குறியுடன் சொல்லி முடித்தனன்.

ஸ்ரீ ஜகதாசார்ய ஸிம்ஹாஸனதிபதி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்காராச்சாரிய ஸ்வாமியின் தேன்மாரி போன்ற உபந்யாஸங்களைக் கேட்டு மகிழ்ந்தவர்களும், நிகரற்ற கிரந்தங்களாகிய அவரது இலக்கியவிருந்தை ருசித்துப் பயன் பெற்றவர்களும் எண்ணற்றவரன்றோ! மோகினி அன்பர்களுக்கும் இப்போது பெரும்பாக்யம் ஏற்பட்டு அவரது விருந்து கிடைக்கிறது. ஒருங்கே பண்டித—பாமர ரஞ்சகமாக எளிய நடையில் ஸரளமாய்த் தமிழ் அமுதம் பொழியும் இவரது பேனு இப்போது சிறுவர் அறிவு வளர்ச்சியிலும் ஈடுபடவாரம்பித்திருக்கிறது. பாலர் மோகினி முதல் புத்தகத்தில் "கெடுவான் கேடு நினைப்பான்" என்றொரு நீதிக் கதையை ரஸமாய் வெளியிட்டார். இப்போது தயாராகி வரும் இரண்டாம் புத்தகத்தில் "பாலகன் பெற்ற பேறு" என்ற பக்திக் கதையை அருமையாய் அளித்துள்ளார். மோகினியைப் படிக்கும் அன்பர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலர் மோகினியை அளிப்பதன் அவசியம் தெரிகிறதா? அறிஞர்களின் பேராதரவு பெற்ற சிறுவர் அறிவு வளர்ச்சித் தொகுதி பாலர் மோகினி ஒன்றே!




“எங்கே உங்கள் மகனைக் கண்ணிலேயே காணவில்லையே!” என்று கோயிலில் ஒரு அம்மாள் மற்றொரு அம்மாளைக் கேட்டார்கள். அதற்கந்தம்மாள் “ஐயோ! கொள்ளையே... ஊரெல்லாம் வந்திருக்குதே அனியாயக் கொள்ளே அது எம்புள்ளேயெயும் இழுத்துண்டு பூடுத்து”...என்றாள். எனக்கு கபீரென்று வாரிப் போட்டது. முதலில் கேட்ட அந்தம்மாள் “ஐயோடீ! இதென்னக் கொள்ளேடீ!” என்று பெரிய ஒப்பாரிபோல் கேட்டாள். அதற்கு இரண்டாவதம்மா... அதாண்டீ! அதான்... அந்த எழவெடுத்த மில்டேரி இருக்குதொன்னோ! அதிலே பொய் சேந்துட்டான்” என்றாள். வார்த்தையின் லக்ஷணத்தைக் கேட்டு வியப்படைந்தேன்.

* * * *

ஒரு கல்யாண புரோகிதர் ரயிலில் யாருடனோ பேசுகையில் “உம்..எந்த ரேஷனானா என்ன, எந்த யுத்தமானா என்ன ஸார்... எங்களுக்கு ஒன்றும் பஞ்சமில்லே... நாலு மட்டே விழுந்தாலும் (சாவுக்கு பேர் அது) சரி. நாலு முடி விழுந்தாலும் சரி. எங்கள் வரும்படிக்கு என்ன குறைவுசார்!... என்கிறார். அவர் வரையில் கல்யாணமும் கர்மாதியும் ஒன்று போலும்.

* * * *

அத்புதமான பாட்டுக்கச்சேரி நடக்கும் இடத்தில் ஒரு அம்மாள் ஸ்வாரஸ்யமாய்த் தூங்கிக்கொண்டிருந்தாள். அவளைக்கண்ட ஒரு பெண்...“ஏம் மாமீ! காசைக் கொடுத்து டிக்கட்டு வாங்கி வந்து இங்கு தூங்குகிறீர்களே! சிவனே என்று வீட்டிலேயே தூங்கக் கூடாதா?” என்றாள். அதற்கந்தம்மாள், “ஐயோ ராமா! வீட்டிலே சித்தே நேரம் முடங்கிக் கடக்கப் போதேதடியம்மா! டிக்கட்டு வீணாப் போறது. போறயாம்மான்னான் பிள்ளே...சரின்னு வந்தேன். வீணாப் போர டிக்கட்டுதானே...ஒனக்கென்ன கஷ்டம்?” என்றாள்.

* * * *

சில வருஷங்களுக்கு முன்பு ஒரு பாட்டியம்மாள் க்ராமபோன் ரிகார்டு பாடுவதைக் கேட்டு மிகவும் நன்றாயிருக்கிறது என்றார்கள். அடுத்தடுத்து அதே ரிகார்டை வைத்துக் கேட்டதும் பாட்டியம்மா மூக்கில் விரலை வைத்துக்கொண்டு “ஏண்டியம்மா! ஒரு கல்யாணத்தில் சித்தெ எரஞ்சு பேசினா பாடினா தொண்டெ கட்டிக்கிறதே. இந்த பொட்டிக்குள்ளே பாட்றவ ஓயாதே அதே பாட்டை நூறுதரம் பாடினாலும் தொண்டெ சித்தெகூட கட்டவேயில்லையே...என்ன அதிசயமடீ! ...என்றாள்.

ஸ்ரீமதி "குகப்ரியை"

# புள் இருக்கு வேளூர்

நமக்குத் தொல்லைகள் நேரிடும் பொழுதும் அல்லது தொந்தரவு செய்கிறவர்களைக் காணும்பொழுதும் "இதேது பெரிய கிரகசாரமாயிருக்கிறதே!" என்று சொல்வதுண்டு. அதாவது கிரகங்களின் கோளாறுகளினால் மனிதன் ஆட்டுவிக்கப்படுகிறான் என்று கருத்துத் தோன்ற. நம்மை ஆட்டுவிக்கும் அந்தக் கிரகங்களுள் ஒன்றாகிய குஜன் என்னும் மங்களனுக்கு ஒரு சமயம் மிகக்கொடிய நோய் ஒன்று பற்றிக்கொண்டதாம். அந்த சமயம் சிவபெருமானை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றானாம். இந்த அற்புதம் நிகழ்ந்தது சோழவளநாட்டில். தீராத மிகக்கொடிய நோயைக் குணமாக்கிய அந்த அற்புத மருத்துவனுக்கு வைத்தியர்களுக்கெல்லாம் தலைவன் என்னும் கருத்துத்தோன்ற வைத்தியநாதன், வைத்தீச்வரன் என்று பக்தர்கள் கொண்டாடுகிறார்கள். இராஜாதி ராஜன், தேவாதி தேவன் என்பவை போதாமல், வைத்திய நாதனைக் காட்சியளிக்கிறார் அந்தத் தலத்தில். மந்திர சாஸ்திரத்தையே தமது இசைகளின் மூலம் சாஸனம் செய்து வைத்தவரும் சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவருமான ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்கள் தமது கீர்த்தனையில் "தீனரக்ஷம், பூஜித வைத்தியநாத க்ஷேத்ரம்" என்று மங்களாசாஸனம் செய்திருக்கிறார்.

ரயிலடியிலிருந்து ஊருக்குள் திரும்பிய உடனே வானை அளாவி நிமிர்ந்து நிற்கும் கோபுரங்கள் நம்மை வரவேற்கும். காலவெள்ளத்தை எதிர்த்து பழந்தமிழகத்துக்கு நம்மை இழுத்துச்செல்லும் சிந்தனைகள், "இதென்ன? ஊரா? நாடக அரங்கமா? அல்லது திசை தப்பி எங்கேயோ உள்ள ஒரு அற்புத உலகத்துக்கே வந்து விட்டோமா?" என்று திகைக்கச் செய்யும் அந்த வசிகரமான இடம். இருபுறமும் வரிசையாய்த் தீபங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் எங்கேயோ அழைத்துச் செல்லும். நெடுந்தூரத்தில் தெரியும் மூலஸ்தானம். 'கோபுர வாயிலிலிருந்து மூலஸ்தானம் ஒரு பர்லாங்குக்கு அதிகமிருக்கும்போலிருக்கிறதே!' என்று யாரோ சொல்வது என் செவிகளுள் வீழ்ந்தது. அப்பொழுதுதான் எனக்கு உணர்வு வந்து, 'ஓகோ! இது கோயில்தான். நாம் கோபுரவாசலில்தானிருக்கிறோம்' என்ற நினைவு வந்தது.

மிகப் பெரிய அந்தக்கோபுரத்தை அடையும் வரையில் மிகப்பெரிய மண்டபம். இருபுறம் சுமார் $1\frac{1}{2}$ அடி உயரமுள்ள மேடைகள். நடுவில் நடைபாதை. இருபுறமும் உள்ள மேடைகளில் வளையற்கடைகள் சில்லரை சாமான்கள் பொம்மைகள், ஊதல்கள், கிலுகிலுப்பைகள், மஞ்சள் குங்குமம் சீப்புக்கள் கண்ணாடிகள் இவைகள், மாசிமணிகள், அலுமினியம், இரும்பு முதலியவைகளாலான சில்லரை சாமான் இவை குவிந்துகிடக்கும். மறுபுறம் வண்டுகள் மொய்க்கும் புஷ்பக் கடைகள், தேங்காய் பழம் கற்பூரம் இத்யாதி. அம்மண்டப முழுவதும் வாழைப்பழம் இன்னும் சில்லரையான பலூன் முதலியவற்றின் தோரணங்கள். இவைகளைத் தாண்டியதும் முதற்கோபுரம். அந்தக் கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால்

விஸ்தாரமான மண்டபங்களை யுடைய முதற் பிராகாரம். முதற் பிராகாரத்திற்கும் இரண்டாம் பிரா காரத்திற்கும் இடையில் மிகவும் அழகிய ஒரு அஷ்டகோண மண்ட பம். அதன் அமைப்பு மிகவும் அற் புதம். மிகமிகப் பெரிய எட்டு யாளிகள் அந்த மண்டபத்தைச் சுமந்து நிற்பதுபோல் தோன்றும். இதைத் தாண்டிச் சில அடிகள் சென்றால் இரண்டாம் பிராகாரத் தைக் குறிக்கும் சிறு கோபுரம்.

அந்தப் பிராகாரத்திலே இடது புறம் திரும்பினால் முத்துக் குமரன் சந்நிதி. அதையடுத்து குமரப் பெரு மானது உத்ஸவ விக்ரகம். வள்ளி குஞ்சரியோடு வன்னமயில் மேல் கம்பீரமாய் வீற்றிருக்கும் முருகன் திரு உருவம் மிகவும் அழகுவாய்ந் தது. சந்நிதிக்கு எதிரிலுள்ள ஒரு சிறு துவாரத்தின்மூலம் ஏறுமயி லேறி விளையாடும் எம்பெருமான் குழந்தை வேலன்மீது வருஷமுழுவ தும் சூரியக்கிரணங்கள் விழும். தன் பொற் கைகளை நீட்டிச் செந்தா மரை மலர்கொண்டு சூரியன் முரு கனைப் பூஜித்தாராம் இந்தத் தலத் தில், இந்தத் தலத்திலே சிவபெரு மானையும், முத்துக்குமரனையும் நவக்கிரகங்களையும் வணங்குவோ ருக்கு கிரகங்களினால் கெடுதி நேருவ தில்லையாம்! "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று சிவபெரு மான் கேட்டதற்கு, இங்கே தங்களை யும் குமரப்பெருமானையும், எங் களையும் வழிபட்டவர்களுக்கு கிரக தோஷங்கள் ஏற்படவே கூடா தென்று வரமளிக்கவேண்டினராம் குஜன், என்று புராணம் சொல்லும்.

தவிர, மற்றக் கோயில்களைப் போல நவக்ரக தேவதைகள் ஒரு வரை ஒருவர் பாராமல் பிரதிஷ்டிக் கப்படவில்லை. ஒரே வரிசையாய் பீடத்தின் மீது நின்ற உருவுடன் தோன்றுகின்றனர். இது சந்நிதிக் குப் பின்புறம், அங்கிருந்து பிர தக்ஷிணமாய் வந்தால் சண்டேச் வரர் தவம்செய்யுமிடம். இதனருகே விமானத்தின் ஓரத்தில் கர்ப்பகிர கத்தை ஒட்டி சட்டைநாதர் என்ற ஒரு அழகிய சிலை இருக்கிறது. பூமட்டத்திலிருந்து சில படிகள், அதன்மேலேறினால் அங்கே ஒரு சிறு மாடம்; அம்மாடத்திற்குள் தலையை நீட்டி எட்டிப்பார்த்தால் அழகும் வசீகரமுமுள்ள ஒரு சிலை யைக் காணலாம். அவர்தான் சட்டைநாதர். அவர் யார்? வரலாறு என்ன! என்று கேட்டால் சொல் வாரில்லை. உள்ளூர் குருக்களை கேட் டால் அஷ்டபைரவர்களுள் அவர் ஒருவர் என்கிறார். உயரத்திலிருப் பானேன் என்றால் ஊர்த்துவ பைர வர் உயரேதான் இருப்பார் என்று சொல்லிவிட்டார். மற்றபடி அவ ரைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை. இங்கிருந்து முன்னேக்கிச் சென் றால் சித்தாமிருத தீர்த்தத்தின் கரையை அடையலாம்.

அழகியதும் விஸ்தாரமானது மான மண்டபம். அதன் ஒரு கோடி தேவியின் ஸந்நிதி. எதிரில் சித்தா மிருத தீர்த்தம். இந்தக் குளத்திலே தவளைகளும் மீன்களும் வசிப்ப தில்லை. இக் குளத்திலே மூழ்கி எழுந்ததும்தான் நோய் நீங்கிச் சுய உருவு பெற்றாராம் செவ்வாய். ஆகவே வியாதியின் பொருட்டுப் பலர் இதில் நீராடுவார்கள். தேவி யின் சந்நிதி மிகவும் அழகியது. தையல்நாயகி கேட்ட வரமெல்லாம் கொடுப்பாளாம். தையல்நாயகி அணிந்திருக்கும் மங்கல்யம் இரும்பி லானது என்றும், மாங்கல்யப் பிச்சை யளிப்பதில் அவள் தாரதம் மியம் பார்ப்பதில்லை என்றும்,

கர்ணபரம்பரை. தேவியின் ஸந்நிதியைத் தாண்டி முன்னே சென்றால் வைத்தீச்வரர் ஸன்னிதி. மற்ற சிவஸ்தலங்கள் போலவே சிவபெருமான் இலிங்க வடிவாய் இங்கே எழுந்தருளி இருக்கிறார், நாயன்மார்களால் பாடல்பெற்ற திவ்யஸ்தலம். ஜடாயுவும் ருக்வேதமும் பூஜித்ததால், புள் இருக்கு வேளூர் எனப் பெயர் பெற்றது. ஒளி பொருந்திய தாமிரக்குவளை எப்பொழுதும் சாத்தப்பெற்றிருக்கும். ஆகவே பகவான் மிருதிவிலிங்கம் என்று சொல்லும் புற்று வடிவமென்றும், புற்று மண்ணே நோய் தீர்க்கும் மருந்தென்றும் சொல்வாருமுண்டு.

அந்த தெய்வ மருத்துவன் கோயிலில் எப்பொழுதும் பக்த கோடிகளின் ஆரவாரம் நிறைந்திருக்கும். சோழ நாட்டிலுள்ள சிறந்த நாயனக்காரர்களும், நடனமாதர்களும் கோயிலிற் பணி செய்வர். கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளுக்கு மடவிளாகம் என்று பெயர். இக்கோயிலின் மேற்குக் கோபுரவாயிலும் கிழக்குக் கோபுர வாயிலைப்போன்ற முக்யத்துவமும் அழகும் பெற்று விளங்கும். அதையடுத்துப் பண்டாரசந்நிதிகள் மடம்.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வராகிய ஷை தம்பிரான் அவர்களின் சிறந்த நிர்வாகத்தின் கீழ் ஆலயத் திருப்பணிகளும், உற்சவாதிகளும் வெகு சிறப்பாய் நடைபெறுவதில் ஆச்சரியமென்ன? தைப்பூசத்தை ஒட்டி முத்துக்குமரன் திருநாள். காணக் கண் கோடி போதாது. பவனி வரும் அழகு நம்மை மெய்மறந்து நிற்கச் செய்யும். சோழ நாட்டிலேயுள்ள பல தலங்களுள் இங்கே பிரார்த்தனை செலுத்துவோர் அதிகம். சைவம் வைஷ்ணவம் என்ற பேதமின்றி எல்லா மதத்தினரும் குழந்தைகளுக்கு முடி கொடுப்பர். பக்தி சிரத்தையோடு ஆறுகால பூஜைகளும், உற்சவாதிகளும் நடைபெறும் இக்கோயிலில், கிளிகளை மட்டும் ஏன் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்களோ? யாரைக் கேட்பது? கருணைக்கடலாகிய தையல்நாயகியைத் தான் கேட்கவேணும்.

## விடுகதைக் கணக்கு

ஒருவன் சில கதம்ப மாலைகள் கொணர்ந்தான். வழியில் ப்ருஹ்மா விஷ்ணு சிவன் ஆகிய மும்மூர்த்திகளின் ஆலயங்களும் ஒவ்வொரு ஆலயத்தின் எதிரிலும் ஒவ்வொரு தடாகமும் கட்டப்பட்டிருந்தன. அக்குளங்களில் ஒரு பங்கு ஸாமானுடன் மூழ்கி எழ இன்னொரு பங்கு அதிகமாகும்.

மாலைக்காரன் முதலில் ப்ருஹ்மதடாகத்தில் மூழ்கி எழுந்ததும் அவன் வைத்திருந்த மாலையோடு இன்னொரு பங்கு பெருகியது. அதில் சிலதை ப்ருஹ்மனுக்கு ஸமர்ப்பித்துவிட்டு விஷ்ணு வாவியை அடைந்தான். முறையே அங்கும் ஒரு பங்கு பெருக திருமாலுக்கு சிலவற்றை ஸமர்ப்பித்து சிவ புஷ்கரணியை அடைந்தான் அதிலும் ஸ்னானம் செய்ய மறுபடி மாலை பெருகிற்று எல்லாவற்றையும் கங்காதரருக்கு சூட்டி வீடு அடைந்தான். அவன் ஒவ்வொரு ஸ்வாமிக்கும் ஸமர்ப்பித்த மாலைகள் எண்ணிக்கை வித்யாஸ மின்றியும் ஒரே அளவாகவும் கணக்காவும் இருந்தன; மாலைகள் மீறவுமில்லை. முதலில் கொண்டுவந்த மாலைகள் எத்தனை கடவுள்களுக்குச் சாத்தின மாலைகள் எத்தனை? குறிப்பு:—அவன் முதலில் கொணர்ந்த மாலைகளும் 5 நம்பருக்குள்ளேயே இருந்தன. ஒவ்வொரு ஸ்வாமிக்கும் சாத்தின மாலைகளும் 5 எண்ணுக்குள்ளேயே.

—ஜெயஸ்ரீ.



# வைத்தியசாலையின் தமாஷ்

வை.மு.கோ

டாக்டர்:—என்னடா! தலையில் பலமாகப் பத்துபோட்டிருக்கிறுய்?... தலை வலியா...

நோயாளி :—இல்லீங்க...... ஆபீஸிக்கு லீவுலெட்டரு ஒணம்... அதுக்காவ பத்துதான் இது. மருந்து கொடுத்து பில்லு எழுதாமே, லீவு கடுதாசி எயுதுங்க.

* * * *

டாக்டர்:—என்ன பாட்டியம்மா! இந்த ராத்திரிலே ஓடி வந்தே...... யாருக்கு என்ன உடம்பு?...

பாட்டி:—எங்க எஜமானருக்குத்தான்... இங்கே யாரும் இல்லையே... இன்னிக்கு ஒரே நாளில் மூணு ப்ராமணார்த்தம் சாப்பிட்டார். வயித்து நோவு என்று பறக்கிறுர். அவரே வரத்துக்கு முடியல்லே; நான் வந்தேன். நல்ல மருந்தா கொடுங்கோ...

டாக்:—பாட்டி! நாளைக்கும் மூணு ப்ராமணார்த்தம் சாப்பிட்டுவிட்டால் புண்ணியம் உயர்ந்துபோய்வயிற்று வலி பறந்துபோயிடும்னு போய் சொல்லுங்கோ...

* * * *

டாக்டர்:—நேற்று நீர் கொண்டு வரச்சொன்னேனே ஏன் கொண்டு வரவில்லை?

நோயாளி:—இதோ கொண்டாந்திருக்கேனே......பழனியாண்டவனுடைய திருநீருதானுங்க...

* * * *

டாக்டர்;—என்ன சமாச்சாரம். தயங்கி தயங்கி நிக்கறே......என்ன கேட்கவேணும் கேளு ..

நோயாளி:—ஆனாலும் ரெண்டு மாசமா மருந்து சாப்பிட்டு பத்யம் பண்றதிலே நாக்கு செத்துப்புட்டா பேலே இருக்குதுங்க...

டாக்டர்:— நல்லதாச்சு...நீ சாகவில்லையே. நாக்குதானே செத்தாப் போலிருக்கு. அதுவும் பிழைத்துவிட இன்னொரு டோஸ் கொடுக்கிறேன்

* * * *

டாக்டர்:—என்ன விசேஷம்... கல்கண்டு கொண்டுவந்து கொடுக்கிறுய். பிள்ளை பிறந்ததா என்ன....

வந்தவன்:—அதெல்லாம் ஒன்றுமில்லே சார். இந்த தரம் நீங்க கொடுத்த லீவுலெட்டரை ஆபீஸிலே ஒத்துண்டு லீவுகொடுத்துட்டா சார்.

* * * *

டாக்டர்:—வாயெக் கட்டாப் போனு எப்படி உடம்புகுணமாகும்?

நோயாளி:-என்னுங்க...வாயெக் கட்டி, வவுத்தெக் கட்டி குருவி முக்காலே பணத்தே சேத்துத்தான் மருந்துக்கு கொட்றேனே......இன்னும் வாயெ கட்டணுமுண் நீங்களே.

* * * *

டாக்டர் :— இதுவரையில் எத்தனை புட்டி சாப்பிட்டிருப்பாய்?

நோயாளி :— ஊம்...நோவுவந்தப்றம் புட்டிபோட்றத்தையே உட்டுட்டேங்க,நீங்க குடுக்கர புட்டி தண்ணீ தான் 10 புட்டி குடிச்சாச்சுங்க...

ஸ்ரீமான் M. J. பார்த்தசாரதி

183105

# தண்டனை

திருமாலூர் கிராமத்தில் சடகோபாச்சாரியார் பெரிய மிராசுதார், ஆசாரசீலர். எல்லோருக்கும் அவரிடம் மதிப்பு உண்டு. குமுதம் அவருடைய ஒரே மகள். அழகும் குணமும் வாய்ந்தவள். வெகு செல்வமாக வளர்க்கப்பட்டாள். அவளுக்கு தன் தாயைக் காட்டிலும் தந்தையிடம் வெகு பற்றுதல். அவளது துணைக்காக ஆசாரியார் தன் தங்கை மகன் ராஜுவை தன்னிடமே வளர்த்து வந்தார். குழந்தைகளும் எத்தனையோ விளையாட்டுச் சண்டைகளுக்கிடையில் அன்புடன் பழகினர்.

படிக்கும் வயது வந்ததும் ராஜு திருமாலூருக்கருகிலுள்ள ஊரில் படித்துவந்தான். தினமும் வண்டியில் காலையில் சென்று மாலை திரும்புவான். தெருக்கோடியில் வண்டி வரும் சத்தம் கேட்டதும் குமுதம் ஓடிவந்து வண்டி வீட்டின் முன் நின்றதும் ராஜுவிடமிருந்து புஸ்தகங்களை வாங்கிக்கொண்டு அவனுடன் குதூகலத்துடன் உள்ளே வருவாள். ராஜு கால் அலம்பிப் பலகாரம் சாப்பிடுகையில் இருவரும் அன்றைய விசேஷங்களை பேசுவார்கள். ராஜு தான் அன்று படித்ததை அவளுக்குச் சொல்லிக் கொடுப்பான். இப்படி குமுதம் விளையாட்டுக்கிடையில் கல்வி கற்றாள்.

வருஷங்கள் சென்றன. குமுதம் வசீகரத்தோற்றம் பெற்றாள். ராஜுவும் வயது வந்த வாலிபனானான். அவன் மதராஸில் காலேஜில் படித்துவந்தான். இப்பொழுதெல்லாம் கோடை விடுமுறை நாட்களுக்கு மாத்திரம் ராஜு திருமாலூருக்கு வருவான். முன்போல் குதூகலம் வெளிப்படையாகக் காணாவிட்டாலும் ஒருவரைக் காண ஒருவருக்கு ஆனந்தம். இருவருக்கும் மனம் லயித்திருந்தது.

குமுதத்துக்கு 11 வயது நிறைவதற்காகக் காத்திருந்த ஆசாரியார் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தார். ராஜுவைப் பற்றி அவரும் அவர் மனைவியும் நினைக்கவேயில்லை. அவனைத் தம் மகளுக்கு ஒரு விளையாட்டுக் கருவியாக நினைத்தார்களேயன்றி தங்கள் அந்தஸ்துக்குத் தகுந்தவன் இல்லை என்று எண்ணி ஒரு பெரிய இடத்தில் வரன் நிச்சயிக்கப்பட்டது. பழைய கால ஸம்ப்ரதாயப்படி ஆசாரியார் குமுதத்தைக் கலக்காமலே அவளுக்கு நல்ததென்று தனக்குத் தோன்றிய இந்ல வரத்தை முடிவுசெய்தார். கிராமத்தில் வளர்ந்த பெண்ணாகையால் தன்னைக் கேட்காமல் தன் மனோபாவத்தைத் தெரிவிக்க வெட்கப்பட்டாள். முகூர்த்த தினம் நெருங்க நெருங்க குமுதம் தனக்குள்ளேயே புகைந்தாள். பந்துக்கள் வந்தனர். ராஜுவும் வந்தான். ராஜு தன் அந்தஸ்தை நினைத்துத் தனக்குக் கிட்டாத பொருளை மறக்க முனைந்து விவாக கார்யங்களில் ஈடுபட்டான். கல்யாணம் முடிந்தது. ராஜு ஊருக்குப் புறப்பட்டான். குமுதத்தைப் பார்க்கும்பொழுது கண்களில் தன்னையறியாமல் நீர் நிறைந்தது. குமுதமும் இடிந்தமனத்துடன் ராஜுவுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

தீபாவளிப் பண்டிகை வந்தது; பண்டிகைக்கு முதல் நாள் காலையில் மாப்பிள்ளை வந்து சேர்ந்தான். அவ்வூரிலுள்ள ஆற்றில் ஸ்நானம்

செய்ய ஆசைப்பட்டு வேலையாளு டன் போனுன்; வெகு நேரமாகியும் மாப்பிள்ளை வீடு திரும்பவில்லை, வேலையாள் ஓடிவந்து, நீந்துவதற்கு இறங்கிய மாப்பிள்ளை சுழலில் அகப் பட்டு மறைந்ததாகக்கூறினுன். மறு தினம் அடுத்த ஊரில் ஆற்றங்கரை யில்உடல்கண்டெடுக்கப்பட்டது.கல் யாணத்தன்றும் ஸரியாகப் பார்க் காத கணவனின் சவத்தை இன்று குமுதம் கண்டபொழுது அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆசாரி யாருக்கும் அவர் மனைவிக்கும் உல கமே இருண்டது. செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வாழ்க்கைப் பட்ட குமுதம்ஒன்றும் அனுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. வாழ்க்கை யில் ருசிவரண்டது. பகவத்விஷயம் படித்துப் போது போக்கினுள்.

குமுதத்தின் தாய், தன் பெண்ணை நினைத்து உருகி நோய்வாய்ப்பட் டாள். தசரா விடுமுறையில் ராஜு வும் அவன் தாயும் வந்திருந்தனர். குமுதமும் தன் வருத்தங்களை மறந்து ராஜுவுடன் ஸந்தோஷ மாகப் பழகினுள். அவளது கவிழ்ந்த முகம் மலர்ந்திருந்தது.

நான்கு மாதங்கள் கழிந்தன. இப் பொழுதெல்லாம் குமுதம் தன் தகப் பனுர் முன்னுல் வருவதில்லை. எப் பொழுதும் தாயுடனேயே இருந் தாள். ஒரு நாள் வாழைப்பட்டை சிவுவதற்காக கத்தியைத் தேடுகை யில் சாமான் அறையில் ஒரு மூலே யில் ஒரு கடிதம் அகப்பட்டது. அஸ்வாரஸ்யமாய் பிரித்துப் பார்க் கையில்,

"நீ நான்கு மாதமாய் ஸ்னனம் செய்யவில்லை என்பது தெரியலா னேன். வருந்தாதே.நான் ஒருநாளும் உன்னை கைவிடமாட்டேன்.எனக்கு கூடிய சிக்கிரம் ஒரு வேலையும் கிடைக்கும்போல் இருக்கிறது. வேலை கிடைத்ததும் உன்னை மணந்துகொள்கிறேன். நாம் தனி யாக இருக்க நேரிடினும் அதற்குத் தயார். இதுஸத்தியம்" என்றிருந்தது. ஆசாரியாருக்கு ஒன்றும் விளங்க வில்லை. கடிதத்துடன் தன் மனைவி யிடம் சென்று விசாரித்தார். தாயும் மகளும் ஒருவரை யொருவர் பார்த் துக்கொண்டனர். குமுதம்தேகமெல் லாம் நடுங்க, சவம்போல் வெளுத் திருந்தாள். அவளது வயிற்றின்மேல் பார்வை விழுந்ததும் எல்லாம் விளங்கிவிட்டது அவமானம் பொறுக்க முடியவில்லை. தன் மகளை ஒரு கொடிய ஸர்ப்பமாக எண்ணி னுர். ஒன்றும் தோன்றுமல் கோபத் துடன் "இவளை மணக்கப்போகும் மஹானுபாவன் யார்?" என்று மனைவியைக்கேட்டார்.அவள் ராஜு வின் பெயரைச் சொன்னதும் கோபம் பன்மடங்கதிகமாய் "ஏற் பட்டிருக்கும் அவமானம் போதா தென்று எல்லோருக்கும் தம்பட்ட மடிப்பதற்காக அந்தப் பயல் இந்த விதவையைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிருனே? அவசியம் வேண்டியதுதான்" என்று தன்னை யும் அறியாமல் வெகு ஆத்திரத் துடன் அருகிலிருந்த உலக்கையால் குமுதத்தை ஓங்கி அடித்தார். அவள் அப்படியே உயிர் நீத்தாள். அவ ருக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவர் மனைவியும் ப்ரமித்துப்போய் அப்படியே படுத்துக் கிடந்தாள். ஊரில் பெரிய மிராசுதார் வீட்டு விஷயமாகையால் விஷயம் பரவா மல் சவச்சடங்குகள் முடிந்தன. மனமுடைந்த தாயும் கொஞ்ச நாளில் மகளிடம் சேர்ந்தாள்.

ஆசாரியருக்கு வயது 45. அவர் வாழ்க்கைத்துணைவி யில்லாமல் தனி யாயிருப்பதைப் பற்றி அவர் சுற்றத் தார் பலமாக ஆக்ஷேபித்து மறு

விவாகத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். 15 வயதில் யௌவனத்திலிருந்த தன் மகள் மறுவிவாகம் செய்வது அதர்மமென்று அவளைத் தண்டித்தனுப்பியவர் தன் 45-வது வயதில் கிருஹஸ்தாச்ரமத்துக்கு துணைவி அவசியமென்று ஒரு இளநங்கையை மணந்தார்.

நாளடைவில் பழைய துக்கங்களை மறந்து ஸந்தோஷமாக புதுக்குடித்தனம் நடத்தினர். மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தன.

முதல் பெண் லக்ஷ்மி கலியாணமாய் ப்ரஸவத்துக்காக வந்திருந்தாள். எல்லா ஸவுகரியங்களையும் ஆசாரியார் ஏற்பாடு செய்திருந்தார். ஒருநாள் அவர் கனவில் குமுதம் தோன்றினாள். அவளைக் கண்டதும் வந்த காரணத்தை வினவினர்.

"காரணம் ஒன்றுமில்லை. என்னை மறந்துவிட்டீர்கள். பார்த்துப் போகலாம் என்று வந்தேன்" என்று சொல்லி மறைந்தாள்.

மறுநாள் காலையில் லக்ஷ்மிக்கு நோவு கண்டது. கஷ்ட ப்ரஸவத்தில் தாயும் சேயும் இறந்தார்கள்.

இரண்டாவது மகள் ஸரோஜா பட்டணத்தில் தன் கணவனுடன் ஸம்ஸாரம் செய்துவந்தாள். அவள் இரண்டு மாதமாய் ஸ்நானம் செய்யவில்லையென்று கேள்விப்பட்டதும் ஆசாரியர் ஸம்ஸாரம் ஸரோஜாவுக்கு உதவியாக மூன்றும் மாதத்திலேயே பட்டணம் போனாள்.

குமுதம் மறுபடியும் கனவில் தோன்றினாள். ஆசாரியர் மிகுந்த பயத்துடன் "ஏனம்மா தொந்திரவு செய்கிறாய்? மறுபடியும் ஏன் வந்தாய்?" என்றார். குமுதம் "உம்மை விட்டு நான் எங்கேபோவது அப்பா? இப்பொழுதுதான் பட்டணத்திலிருந்து வருகிறேன்" என்றாள். அவர் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தார். ஒன்றும் தோன்றவில்லை. விடிந்ததும் பட்டணம்போய் மகளைப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தார். காலையில் பட்டணத்திலிருந்து ஒரு ஆள் கடிதம் கொண்டுவந்தான். ஸரோஜாவின் கணவன் எழுதியிருந்தான். "நேற்று திடீரென்று ஸரோஜாவுக்கு குறை ப்ரஸவம் ஆயிற்று (Abortion) ஆசுபத்திரியில் தக்க உதவியளித்தும் எங்களைவிட்டுப் போய்விட்டாள்" என்றிருந்தது.

அன்று படுக்கையாய் படுத்தவர் கொஞ்சநாளில் "குமுதம் என்னை மன்னிப்பாயா" என்று பிதற்றியவாறு காலமானர்.

அய்யங்காரின் கடைசிப் பெண் பத்மாவுக்குக் கலியாணமாயிற்று. பத்மாவின் தாயும் கூடவே இருந்துவந்தாள். அவள், தன் இரு பெண்களின் கதியை நினைந்து பத்மாவின் கதி எப்படியோ என்று பயந்திருந்தாள். பத்மாவும் கருத்தரித்தாள். தாயாருக்குக் கவலை அதிகமாயிற்று. பைத்யமே பிடித்துவிடும் போல் இருந்தது.

ஒருநாள் அவள் கனவில் குமுதம் தோன்றி "நான் உன் மூத்தாள் மகள் குமுதம். உன் குழந்தை பத்மாவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். தண்டனை அனுபவிக்க வேண்டியவர் இறந்துவிட்டார். எனக்கு அளித்த தண்டனைக்கு அவர் இரட்டிப்பாகத் தண்டிக்கப்பட்டார் நீ இனி பயப்படாதே" என்று சொல்லி மறைந்தாள். பத்மாவுக்கு குழந்தை பிறந்தது. அதற்குக் குமுதம் என்று பெயரிட்டனர்.

இச்சிறு கதை வெறும் கட்டுக் கதையல்ல. ஒரு கிராமத்தில் உண்மையாக நடந்ததே யாகும்.

# சந்தோஷம் கரைபுரண்டோடுகிறது!

உலகத்தில் தாம் பெற்ற மக்களைப் பார்த்துத் தாமே சந்தோஷப்படுவது ஒருபுறமிருக்க, அக்குழந்தைகளின் அழகையோ, அறிவையோ, கண்டு பிறர் சந்தோஷப்பட்டுப் பாராட்டுவதைக் காணும்போதுதான் பெத்ததாயின் உள்ளத்தில் பரிபூரண சந்தோஷம் அபாரமாகப் பொங்கும். அதேபோல் நம் நந்தவனத்தை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அதைப்பற்றி பல சகோதரிகள்—ஏன் பல சகோதரர்கள் கூட—ப்ரமாதமாய்க் கொண்டாடி எழுதியிருப்பதைக் காண என்னிதயம் நிரம்பி மகிழ்ச்சி மலர் பூத்துக் குலுங்குவதுபோல், நந்தவனத்தில் எழுதியுள்ள சகோதரிகளின் மனதும் பூரிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரு சகோதரி எழுதுகிறார்:—நீங்கள் வெளியிடும் நந்தவனத்தின் விளம்பரத்தைப் பார்த்து நான் முதலில் ஏதோ என்னவோ என்று அச்ரத்தையாக இருந்துவிட்டேன். சென்ற வருஷ ஆறு ருதுமலர்களும் சேர்ந்து பைண்டுசெய்த ஒரு புத்தகத்தை என் கணவர் என் பிறந்தினத்தின் பரிசு என்று வாங்கியளித்தார். பெரிய உருவில் கனிசமாக வந்த புத்தகத்தைப் படிக்கவாரம்பித்ததும் என் சந்தோஷம் கரைபுரண்டதோடு நான் முதலில் அச்ரத்தையாயிருந்ததனல்தானே சேர்த்தாற்போல் 100 ஸ்த்ரீ ரத்தினங்களின் எழுத்து மலர்களை ஒரேமட்டாகப் படிக்கும் பேறு கிடைத்தது. இம்மாதிரி விருந்து அளிக்கும் பெருமை தமிழ்நாட்டில் உங்கள் ஒருவருக்கே சான்றது என்பதை தமிழ்ப் பெண்கள் மறக்கவே முடியாது"......

மற்ருெரு சகோதரி, "சென்ற வருஷம் 6 ருதுமலர்களும் நான் ஆவலுடன்தான் வாங்கிப் படித்தேன். ஆனல் மோகினியைப்போல் எப்போது முதல் தேதிவரும் என்று காத்து மனது துடிக்கவில்லை. இவ்வருஷத்திய முதல் நந்தவனத்தைப் படித்ததும் எப்போது இன்னெரு ருதுவரும் என்று என்னிதயம் தவிக்கிறது. வெகு சாதுர்யமாயும் தைரியமாயும் காலத்திற்கேற்ற வாழ்க்கைச் சித்திரமாக வாழ்க்கைத் தோட்டத்தை நீங்களே எழுதியிருப்பதுதான் இந்தத் துடிப்பிற்குக் காரணம்..."

இதுபோன்ற கடிதங்கள் அனேகம் அடிக்கடி பார்க்கும்போது என் சந்தோஷம் எப்படி இருக்கும்? இத்தனைக்கும், நந்தவனத்தில் கூட ஒத்துழைத்த எழுத்தாள சகோதரிகளின் முயற்சியே காரணம்.

---


## தாரண வருடத்தில் தமிழகம் கண்ட புதுமை!

★ கற்பனை ஊற்று ★ நவரஸ அலங்காரம்
★ ஓவியச் சோலை ★ அழகுப்பொக்கிஷம்

## தாரண நந்தவனம்

**(700 பக்கங்கள். 100 படங்களுடன்)**

நூறு சகோதரிகள் சிருஷ்டித்த ருது மலர் மாலை. (ரூபாய் ஒன்பது)

---

பார்த்திப வஸந்தருது—7 வது மலர் ரூ. 1—2—0
,, கிரீஷ்மருது—8 வது மலர் ரூ. 1—2—0

உங்கள் பிரதிக்கு ஆர்டர் செய்தாயிற்ரு? ஷை பார்த்திப மலர்களில் வை. மு. கோ. 68 வது நாவல் வாழ்க்கைத்தோட்டம் தொடர்ந்து வெளிவருகிறது. இவ்வருட 6 மலர்களும் ரிஜிஸ்தர் போஸ்ட் மூலம் ரூ. 7. முன் பணம் அனுப்பவும். வி. பி. கிடையாது.

# மதமா? மனமா?

வை. மு. ஶ்ரீ.

அத்தியாயம் 9

## அலறலும் ஆறுதலும்

இதயக் கடலில் அடிக்கும் அகோரப் புயல், கனத்த அதிர்ச்சி அலைகளைத் திடீர் திடீரென வாரி வாரி இறைக்கலாயிற்று. திரும்பத் திரும்ப அந்தக் கடிதத்தைப் படித்த காளிக்கு "இது உண்மையா? உண்மையா!" என்று அலறுவது தவிர வேறு எதுவும் சொல்லவும் செய்யவும் தெரியவில்லை. மாரியம்மா விடுத்துச் சென்ற அதிர்ச்சிக் குண்டு வருமாறு:—

"அன்பு உருவான அன்னையே! நான் என்றாவது உன்னைவிட்டுப் பிரிந்திருந்தால்தானே என்னிடமிருந்து உனக்குக் கடிதம் வர சந்தர்ப்பமிருந்திருக்கும்? இதுவரை என்னிடமிருந்து கடிதமே கண்டிராத நீ, இன்று இக் கடிதத்தையும் என் மறைவையும் கண்டு பெரிதும் அதிர்ச்சியடைவாய் என்பதை நான் அறிவேன். இருப்பினும், எல்லாம் நல்லதற்கே என்ற நம்பிக்கையில் தான் இவ்வாறு செய்ய முன்வந்தேன். நீ மனக்கலக்கமும் கோபமும் அடையக்கூடாது. இன்னும் சில தினங்களுக்குள் உனக்கு விவரமான கடிதம் எழுதுகிறேன். அப்போது உனக்குத் திருப்தியே ஏற்படுமென்று நம்புகிறேன். நீ நம் கல்லகன் துரை வீட்டிலேயே இந்த ஒரு வருடமாக இருந்ததுபோல் விரக்திப் பிம்பமாகக் காரியத்திலேயே கண்ணாக இரு. "திடீரென்று மறைந்திருக்கும் இவள் ஒருவேளை மதம் மாறவோ, அல்லது யாராவது யுவனுடனே ஓடிவிட்டாளோ" என்று மாத்திரம் பயந்துவிடாதே! சேற்றில் முளைத்த செந்தாமரை என்று கொண்டாடப்பட்ட பக்தனின் மகள் அப்படிச் செய்யமாட்டாள். காளியின் குமாரியான தீயை எந்த ஈயும் மொய்க்க முடியாது. இதை நம்பு. ஒரு வாரத்திற்குள்ளாகவே விவரமாய் எழுதுகிறேன். நம்முடைய நன்மைக்காகவேதான் கிளம்பியிருக்கிறேன். முன் கூட்டியே தெரிவித்தால் நீ அனுப்பமாட்டாய் என்றதனால் இவ்வாறு தைரியமாய் திட மனதுடன் நடக்கலானேன். கொஞ்சம் பொறுமையாய் இரு. அதிர்ச்சி அடையாதே. எல்லாம் நல்லதற்கே!"

எத்தனை தரம் திரும்பித் திரும்பிப் படித்தாலும் "அவள் எழுதியிருப்பது உண்மையா? கெட்ட எண்ணத்துடன் அவள் வெளியேற வில்லையே?... அல்லது 'அப்பா குதிருக்குள் இல்லை' என்ற கதைபோல் தானா? விளங்கவில்லையே!" என்று துடித்தாள் காளி. பொறுத்திருக்கும்படி எல்லோரும் தைரியமும் கூறினர்கள்.

"உன் பெண்ணை இந்த ஒரு வருடமாகக் கவனித்து வருகிறேனே, அவள் நீ பயப்படுவதுபோன்று மனதைத் தளரவிடக்கூடியவளன்று. ஏதோ முன்யோசனையுடன்தான் கிளம்பியிருக்கிருள். நீ பயப்படாதே. இன்னும் ஒரு வாரத்தில் அவள் கடிதம் வரவில்லையென்ருல் பிறகு தேடுவோம்" என்று கல்லகன் துரையே காளியைச் சமாதானப்படுத்தினர்.

*   *   *   *

ஒரு வாரம் செல்வது ஒரு யுகம் போல் தோன்றியதென்று சொல்லவும் வேண்டுமா? ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட மாரியின் கடிதம் எட்டாம் நாளன்று கிடைத்தது:—

"அன்பே உருக்கொண்ட அன்னையே! க்ஷேமம். உன் க்ஷேமத்தை அறிய அதி ஆவலுடன் இருக்கிறேன். உனக்குப் பெரும் அதிர்ச்சியை விளைவித்த நான் இப்போது கொஞ்சம் நிம்மதி யேற்படும்படியான செய்தியை அனுப்புவதாகவே நம்புகிறேன். உனக்கும் எனக்கும் இடையே இப்போது 600 மைல் தூரமிருப்பினும், உன் கண்காணிப்பில் நான் எப்படியிருப்பேனே அதேபோல் இங்கு இருக்கும்படியான பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது (இதைப் படிக்கையில் விஷயம் என்னவென்றறியாது துடிப்பாய். எல்லாவற்றையும் விவரமாக எழுதுகிறேனென்று முன்னமே தெரிவித்திருக்கிறேனே.) ரோஜாப்பட்டி துறைமுகத்திற்கு நான் வந்து சேர்ந்த விவரத்தைத் தான் முதலில் குறிப்பிடவேண்டும். நான் புறப்படுவதற்கு முதல் நாள் மேரிக்குப்பத்திற்கு ஒரு கோஷ்டியினர் வந்திருந்தார்களே, அவர்களில் கிழவரைாக இருந்தவரைக் கவனித்திருப்பாய். அவர் நம் கல்லகன் துரையிடம்கூட வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார் என்பது நினைவிற்கு வருகிறதா?

அவர் ரோஜாப்பட்டி மிஷனைச் சேர்ந்த பாதிரியார். அந்த மிஷனைச் சேர்ந்த ஆஸ்பத்திரிகளும், கான்வென்டுகளும் ஏற்கெனவே பல ஊர்களில் ஏற்படுத்தி யிருப்பதாயும் இன்னும் அனேக இடங்களில் புதிதாக நிறுவப்போவதாயும் அவர் நம் துரையிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர் குறிப்பிட்டார்: "நர்ஸ்களாக உழைப்பதற்குத் தான் நிறைய பெண்கள் கிடைக்கவில்லை. இதனாலே புது ஆஸ்பத்திரிகள் அதிகம் ஏற்படுத்த யோசனை செய்யவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே உள்ள ஆஸ்பத்திரிகளும் இன்னும் அதிகப்படியான நர்ஸ்களைக் கோருகின்றன. இதையெல்லாம் உத்தேசித்து "நர்ஸ் ட்ரெய்னிங் ஸெண்டர்" ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். சுமாரான படிப்புள்ள பெண்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து, சரியானபடி பழக்கி, மூன்று வருஷ காலத்தில் திறமைவாய்ந்த நர்ஸாகத் தயாராக்கி விடுகிறோம். இந்த மூன்று வருஷப் பயிற்சியின்போது சகல செலவையும் நம் மிஷனே மேற்கொண்டு, தவிர மாதம் பதினைந்து ரூபாய் அவள் குடும்பத்திற்கு அனுப்புவதற்காக அளிக்கிறோம். பிரசாரத்திற்காக ஊர் ஊராய்ச் செல்லுமிடங்களில் தகுந்த பெண்கள் கிடைத்தால் ரோஜாப்பட்டிக்கு அனுப்பிவிடுகிறோம். அங்கு திறமைவாய்ந்த லேடி டாக்டர்களும் பெரிய நர்ஸ்களும் முன்னின்று அத்தகைய பெண்களைப் பழக்குகிறார்கள். அவர்கள் இருப்பதற்குத் தனி பெண்கள் விடுதியும் அமைத்திருக்கிறோம். மேடம் ரோஸி எல்லோரையும் தாய்போல் பாதுகாத்து வருகி

ருன். இப்போது சுமார் ஐம்பது பெண்கள் தேர்ச்சி பெற்று வருகிருர்கள்."

இந்த விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்த என் மனதில் நர்ஸ் பயிற்சி விஷயமாகப் பெரு மோகம் ஏற்பட்டுவிட்டது. "எத்தனை நாளைக் குத்தான் வீட்டு வேலை செய்து கால க்ஷேபம் செய்ய முடியும்? நர்ஸ் தொழிலில் இறங்கினல் வாழ்வு முழுதும் உழைக்கலாம், எந்த நிமிஷத்திலும் நோய் வாய்ப் பட்டவர்களுக்கு உழைத்து ஆறுதலளிக்கலாம். இந்த பரோபகாரமான தொழிலில் பயிற்சி பெறச் சந்தர்ப்பம் வரும்போது, அதைப் பயன் படுத்திக் கொண்டால்தான் ஜீவாதாரமான ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்" என்ற எண்ணமே தலை தூக்கியதாலும், மறு நாள் காலையே பாதிரி கோஷ்டியினர் ஊரை விட்டுக் கிளம்புவதாலும், உன்னைக் கேட்டால் பிரிந்திருக்க உத்திரவு கொடுக்க மாட்டாய் என்பதாலும் கடிதம் எழுதி வைத்து விட்டுக் கிளம்பிவிட்டேன். இங்கு மேடம் ரோஸி என்னும் கிழவியின் பாதுகாப்பையும் அன்பையும் கொண்டாடி முடியாது.

மூன்று வருஷகாலம் நீ நம் துரை வீட்டிலேயே வேலை செய்து கொண்டிரு. அடிக்கடி கடிதம் எழுதுகிறேன். மாதா மாதம் பணம் அனுப்புகிறேன். வருடத்திற்கு ஒரு முறை நேரில் வந்து இரண்டு வாரம் தங்கலாமாம். நான் குதுகலத்துடன் இருக்கிறேன். நீ கவலைப்படாதே பகவான் இந்தத் தொழிலை வழி காட்டியிருப்பதால் அதில் பெரு நம்பிக்கை கொண்டிருக்கிறேன். மேற்கொண்டு அடுத்த வாரம் எழுதுகிறேன்.

நாளுக மேற்கொண்ட 'அதிக ப்ரஸங்கித்தனத்திற்கு' என்னை மன்னித்துவிடு. எல்லாம் நல்லதற்கே என்றுதான் நான் திடமாக நம்பியிருக்கிறேன். மற்றவை பிறகு. என்னைப்பற்றி எந்த விஷயத்திலும் கவலைப்படாதே."

மாரி தன்னை விட்டுப் பிரிந்திருப்பது காளிக்கு மிகவும் கஷ்டமாயிருப்பினும், அவள் தன் வருங் காலத்தை யுத்தேசித்துச் சரியான அஸ்திவாரம் போட்டுக்கொண்டது பற்றி நிம்மதியே ஏற்பட்டது. எல்லோரும் ஒருமுகமாக மாரியம்மா செய்தது சரியே யென்று காளிக்கு ஆறுதல் கூறிவந்ததாலும், அவ்வப் போது அவளிடமிருந்து கடிதங்களும் ரஸமான தொழில் குறிப்புகளும், மாதம் தவருது பணமும் வந்து கொண்டிருந்ததாலும் காளி திருப்தி யுடனே காணப்பட்டாள்.

* * * *

வருடம் ஒன்று உருண்டோடி விட்டது. இரண்டு வார லீவில் வரப் போவதாக மாரி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்: — "இன்று ரிஜிஸ்தர் போஸ்டில் ஒரு க்ரூப்— போடோ அனுப்பியிருக்கிறேன். நான் இங்கு வந்து சேரும்போது 50 பேர்தான் இருந்தோம்; இப்போது 120 பேர் பயிற்சி பெறுகிரும். இந்த நர்ஸ் கூட்டத்தில் என்னைக் கண்டு பிடி பார்க்கலாம்! மனதில் தெம்பும், தொழிலில் ஊக்கமும், சரியான போஷாப்பும் இருப்பதால் நான் அடையாளம் தெரியாது உப்பியிருக்கிறேன். இந்தக் குட்டி யானையை நேரில் கண்டு அதிர்ச்சி யடைவதற்கு முன்னரே இந்தப் படத்தில் பார்த்துவிட்டால் சற்று தெளிந்து விடுவீர்களென்று தான் இதை முன்னதாக அனுப்புகிறேன். தவிர, நேரில் உனக்கு ஒரு விசேஷச் செய்தியும் கொண்டு வரு

கிறேன். அடுத்த புதன் கிழமை அங்கு சேர்வேன்.....மற்றவை நேரில்!"

அந்தப் படத்தில் மாரி இருக்கு மிடத்தைத் தேடிப் பிடித்த காளி, "அடி, என் ராஜாத்தி! இவ்வளவு அழகு உனக்கு எங்கிருந்தடி வந்தது!" என்று வாய்விட்டுச் சொல்லி விட்டாள். "எனக்கு விசேஷச்செய்தியா? என்னவாயிருக்கும்? புரியவில்லையே!" என்று ஆவலுடன் துடித்தாள், பெண்ணின் வரவை எண்ணி எண்ணி, தினங்கள் சீக்கிரம் உருண்டோடி புதன்கிழமை விரைவில் உதயமாகுமா என்று ஆவலே வடிவாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கன்றின் அருமை பசுவுக்குத்தானே தெரியும்?

---


# பாலர்மோகினி

## இனி பெரிய அளவில் வெளிவரும்!

★

பாலர் மோகினி முதல் புத்தகம் சிறிய அளவில் (மினியேசர் ஸைஸில்) வெளியானது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். தற்போது தயாராகி வரும் இரண்டாம் புத்தகம் பெரிய அளவில்—ஜகன்மோகினி அளவிலேயே—வெளியாகுமென்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பல துறைகளிலும் பிரஸித்தி பெற்ற மகா அறிஞர்களைக் கொண்டே பாலர் உலகில் ஞானதீபத்தை ஏற்றி வைப்பது என்ற நோக்கத்துடன் ஆரம்பித்துள்ள இத் தொகுதியின் முதல் புத்தகத்துக்கு அன்பர்கள் அளித்துள்ள வரவேற்பு பெரிதும் எமக்கு உத்ஸாக மூட்டுவதாயிருக்கிறது. அறியவேண்டிய விஷயங்கள் அனேகம் என்பதைச் சுட்டிக் காட்டும் வழிகாட்டியாக விருந்து, உபயோகமுள்ள, அறிவு வளர்ச்சிக்குரிய விஷயங்களை அளிப்பதே பாலர் மோகினியின் தொண்டு. முதல் புத்தகத்திலேயே இந்த லட்சியத்தில் வெற்றி பெற்று புகழ்மாலை சூடிக் கொண்டுள்ளாள்.

இரண்டாவது புத்தகம் இன்னும் சிறந்து விளங்கும். புதிய அம்சங்களுடன், பெரிய அளவில், அழகிய படங்களுடன் வெளிவரும்.

விலை வழக்கம்போல்தான். அணா 6. தபால் மூலம் அணா 7. முற்றிலும் கிளேஸ் பதிப்பு. இன்னும் ஆர்டர் செய்யாதவர்கள் உடனே எழுதுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானது பாலர்மோகினியே.

ரகுவின் மனம் கொந்தளிக்கும் வேகத்தில் அவனை எப்படியோ கடல்கரையில் கொண்டு சேர்த்தது. நிலைதடுமாறிய நிலையில் மணலில் குப்புறப்படுத்துப் புலம்பிப் புலம்பி முகமும் வீங்கிவிட்டது. இதயமும் புண்ணாகி நாவும் வரண்டது. எவ்வளவு நேரந்தான் அவன் புலம்பினானே தெரியாது.

கண்ணை விழித்துப் பார்க்கும்போது மணிதெரியவில்லையெனினும் நடு நிசியோ, அன்றி உதயமாகும் பின்மாலை வேளையோ சந்தேகமாக விருந்தது. இனி இந்த இருட்டில் அங்கு எதற்குப் போகவேண்டும். ஒண்டிக் கட்டையின் ஒண்டி வாழ்வை எங்குக் கடத்தினால் என்ன ? என்று வெறுப்புடன் படுத்திருந்தான். தூக்கமென்பதே வரவில்லை. எண்ணுதையும் எண்ணித் தவிக்கிறான். மனத்திற்குச் சமாதானம் சொல்ல முடியாது வெகு நேரம் தத்தளித்தான். பொழுது புலரும் குறிகள் தோன்றின. காலையில் உலாவுவதற்காக ஜனங்கள் கரைமீதுமணலோரமாகச் சிலரும் மணல் வெளியில் ரோட்டிலேயே சிலரும் வரத்தொடங்கினார்கள்.

அவர்களில் இளந்தம்பதிகள் கை கோர்த்துக்கொண்டு வெகுஉல்லாஸமாய்ப் பேசிக்கொண்டு போவதையும் அவர்களுடைய களிப்பையுங் கண்டு உள்ளம் உருகினான். ஒரே ஒரு நாளாவது என் சுலோசனா, உம்... எதற்கெடுத்தாலும் நாட்டியம் கலை... உடல் நலம் கெட்டுவிடும் சாரீரம் கெட்டுவிடும் என்ற பல்லவியையே உபயோகித்து வந்தாளேயன்றி வாழ்க்கையில் இனிப்புடன் நடக்கவில்லையே !.......உலகத்தில் மற்றவர்கள் எப்படித்தானிருக்கிறார்கள் ! அவர்களெல்லாம் பாக்யசாலிகள்... எல்லோரும் சந்தோஷமாய் நன்றாக இருக்கட்டும்'' என்று தனக்குள் வாழ்த்தியவாறு ஜனங்களைப் பார்த்துக்கொண்டே படுத்திருந்தான்.

நன்றாக இருள் பிரியவில்லை. அச்சமயம் சுலோசனாவின் அண்ணனும் அவன் மனைவியும் உல்லாசமாய் கையில் ஒரு குச்சுநாய் சகிதம் உலாவவந்தார்கள். அங்கு உட்காருவதற்காகப் போடப்பட்டிருந்த ஆசனத்தில் ச்ரமப்பரிகாரத்தின் பொருட்டு உட்கார்ந்தபடியே அவர்கள் இதுவரையில் பேசிக்கொண்டு வந்த விஷயத்தையே துடர்ந்து... "ஆமாம். அப்படியானால் உங்கள் தங்கையின்மீது குற்றமே இல்லை. எல்லாம் அவள் கணவன்மீதுதான் என்கிறீர்களா!"... என்றாள்.

கணவன்:—கட்டாயம் அந்த அல்பனின்மீதுதான் குற்றம். இதில் சந்தேகம் வேறேயா? கலையைக் கொலை செய்யவல்லவா காத்திருக்கிறான்.

மனை:—என்ன! கலையைக் கொலை செய்வதா; எனக் கொன்றும் புரியவில்லையே.

கண:—புரியவில்லையா? கலைக்கே என் தங்கை உயிரை விடுகிறாள். அதையே அவன் நசுக்கப் பார்க்கிறான். இப்போது புரிந்ததா...

மனை:—சரிதான்... அப்படியானால் காதலைவிடக் கலைதான் முக்கியமென்கிறீர்கள்போலும்.

கண:—ஆமாம்... கலையில் பயிற்சி உடையவர்களுக்கு அதில் தான் உத்ஸாகமளிக்கவேண்டும். அவள் இதயத்தில் கலையின் ஆசைப்ரவாகம் ஓடுகிறது. அவன் நெஞ்சில் காதலின் ஆசைப்ரவாகம் ஓடுகிறது...

மனை:—உங்கள் அபிப்பிராயப் பிரகாரமே கலைக்குத்தான் பிரதானம் கொடுக்கவேண்டுமென்ருல் காதலை உதறித்தானே தள்ளவேண்டும்? எனக்குக்கூட சங்கீதக்கலையில் அபாரமானப் பிரேமை வெள்ளமாய்ப் பொங்குகிறது. இன்னும் இரண்டு வருஷம் நான் அதையே வளர்த்தால் பிரமாதமான வித்வாம்ஸினியாகிவிடுவேன் அப்படி சங்கீதக் கலையை வளர்க்கவேண்டுமென்ருல் முக்யமாக சாரீரத்தை வெகுபோஷணையாயும் ஜாக்ரதையாயும் பார்த்துக் கொள்ளவேண்டும். சாரீரம் இனிமையாய் ஜெஞ்ஜாமிருதமாய்... மதுரத்வனியாயிருக்கவேண்டுமானல் ஆகாரம் தினசரி வாழ்க்கைகளில் பலவித கட்டுப்பாடுகளும் ஆரோக்யமும் தேடிக்கொள்ள வேண்டும்; அவைகளில் ஏதாவது குறைந்தால் சாரீரம் கெட்டுவிடும். ஆகையால் அதற்காக க்ருகஸ்தாச்ரம வாழ்க்கையில் அனேகவித மாறுதல்களைச் செய்துகொண்டு கலைக்காக காதலைஉதறித்தள்ளவேண்டும். நானும் அப்படி உங்களை உதறித்தள்ளி எனது சங்கீதக் கலையை வளர்த்தால் நீங்கள் சும்மாவிருப்பீர்களா! துடைகிழியத்தாளம் போட்டுக்கொண்டு நான் பாடட்டும் என்று கலையின் வளர்ச்சிக்காக அனுமதி கொடுக்கிறீர்களா? கலைக்கு நானும் அடிமையாகிக் கடமையைக் கைவிட்டு விடுகிறேன்...

கணவன்:-(இடைமறுத்து) "அடாடா!... இதென்ன குண்டுவீச்சு... நாத்தனர்மீது குற்றம் கண்டுபிடித்து அவள் கணவனுக்குப் பரிந்து பேசுகிருய்...பேஷ்...பேஷ்...வெகு அழகாயிருக்கிறது. உன் பேச்சு!...

மனைவி:—ஏன் அழகாயில்லை? நானும் பி. ஏ. பாஸ் செய்தவள் தான். எங்கள் குடும்பமும் மகத்தான கண்ணியமும், செல்வமும் நிறைந்த பெரிய குடும்பந்தான். என் பிதாவும் பகதூர்பட்டம் பெற்றவர்தான். என் அண்ணனும் மதனியும் சேர்ந்து சீமைக்குச் சென்று வந்தவர்கள்தான். எது இருப்பினும் உங்கள் வீட்டைப்போன்ற மனேபாவமும் அனியாயமும் எங்கள் வீட்டில் திவலைகூடக் கிடையாது. கட்டோடு பிடிக்கவும் பிடிக்காது. உங்கள் வீட்டில் கூட இருக்கச் சரிப்படாது என்றதனல் தானே எங்கப்பா கல்யாணத்திலேயே பங்களாவை ஸ்திரீதனமாகக் கொடுத்து அன்றே அதில் நம்மைக் குடிவைத்தார். அது உங்களுக்கு எப்படித் தெரியும். உங்கள் தங்கைசெய்யும் அக்ரமத்தை மறந்து ஐயோ பாவம்! அந்த ஏழை மனிதனுடைய வேலையின் வாயில் மண்ணைப்போட்டீர்களே... அவனும் மிக்க கெட்டிக்காரனமே......எப்படியோ பிழைத்துக் கொள்ளுகிருன்......ஆனலும் இப்படிச் செய்வது தர்மமா?...

இதற்குமேல் அவனுக்குக் கோபம் வந்துவிட்டதால் மனைவியை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்தான். "ஓஹோ!...வெகுதூரம் மிஞ்சிவிட்டார்போலிருக்கிறது. இன்னும் கொஞ்சம் போனல் அந்த அயோக்யப்பயலை நீ வீட்டிலேயே வைத்துக் கொண்டுகூட ஆதரிப்பாய்போலிருக்கிறதே! இதோ பாரு... இந்த மனிதனிடம் ஆ பப்பு உடகது. தெரியுமா...என்னை வெறும் அப்பாவி என்று நினைக்காதே" என்று கூறியவாறு தடதடவென்று போனன்.

சதி என்கிற எண்ணத்துடன் அம்மாதரசியும் பதியின் பின்னலேயே நடந்தாள். இச்சம்பாஷணைகளைக் கேட்டவாறு ஆசனத்தின் பின்புறம் படுத்திருந்த ரகுவுக்கு

ஆச்சரியம் பொங்கிறது. தனக்குப் பரிந்துபேசும் ஆத்மாகூட அந்த வீட்டிலேயே ஒன்று இருக்கிறதா என்று வியப்புக்கடலில்திளைந்தான்.

காதலுக்கும், கலைக்கும், கடமைக்கும் உள்ள வித்யாஸத்தை அறிந்து பேசிய அவளை வாயார வாழ்த்தினன். இம்மாதிரி நல்ல விவேகம் என் சுலோசனுவுக்கு எப்போது வரும் என்று ஏங்கியது அவன் உள்ளம்.

## 24

ஆவேசம் வந்தவளைப்போல் சுலோசன மீண்டும் அவ்வீட்டிற்கே வந்து சாமான்களைப் பழயபடியே வேலைக்காரர்களின் உதவியால் ஒழுங்காக வைத்தாள். வீட்டை முற்றிலும் சுத்தமாக்கி அழகுபடுத்தும் மும்முரத்தில் அவள் கணவனைப் பற்றி முதலில் நினைக்கவில்லை. தன் வீட்டிலிருந்து புதிய சமையல் காரியை அழைத்துவந்து பழய குடித்தனப் பாங்கில் வீட்டைப் புதுப்பித்தாள்.

இரவு எட்டுமணியாகியது. தன் கணவனைப் பற்றிய எண்ணம் அப்போது தான் உண்டாகியது. அவன் எங்கு தனி அறைவைத்துக்கொண்டு போயிருக்கிறன் என்கிற தகவலே தெரியவில்லை.

யாரை விசாரித்தாலும் ஒன்றும் புலன் கிடைக்காததால் சற்று கவலை யுண்டாகியது. ஆபீஸில் விசாரிக்கலாம் என்ருல் வேலையும் போய்விட்டதால் இனி அங்கும் தகவல் கிடைக்காது. என்ன செய்வதென்று யோசித்தாள். என்ன விருப்பினும் படித்த புத்திசாலி யாதலால் அவளுக்கோர் யோசனை தோன்றியது. தனது விலாசம் மாறியதை எப்படியும் தபாலாபீஸுக்குத் தெரிவித்துத்தானே இருப்பான். காலையில் அங்கு விசாரித்தால் தெரிகிறது என்கிற முடிவுடன் இரவைக் கழித்தாள்.

பொழுது புலர்ந்தவுடனே சுலோசனவின் தகப்பனர் அவசரமாக வந்து "இதென்னம்மா காரியம்! நான் ஊரிலிருந்து வருவதற்குள் இப்படிச் செய்துவிட்டாய்? அந்த அல்ப தரித்திரத்திற்கு உள்ள கொழுப்பை அடக்காமல் நீயாக வந்து அவன் திமிரை அதிகமாக்குகிருயே... என்ன முழுகிப் போய் விட்டது? கிணற்றுநீரை வெள்ளமா கொண்டு போய்விடும்! ஆடிப் பாடி ஓய்ந்தால் நாய்போல் தானே வருகிருன். உத்யோகத்தின் வாயில் மண் விழுந்துவிட்டதால் இத்தனை அந்தஸ்தான வீடு எதற்கு என்று காலி செய்தானைக்கும். நாலு நாள் தெருவில் அலைந்தால் பிறகு விதியேது... உன்னைத் தேடிக்கொண்டு வந்து சேருகிறன்...காரியத்தைக் கெடுத்து விட்டாயே!...

ஊரிலிருந்த சொல்ப நிலத்தையும் விற்று தங்கையாம் தங்கை, புதிய உறவு முறை வைத்துக்கொண்டு தெருவில் போகிற கழுதைகளுக்குக் கல்யாணச் செலவு செய்துவிட்டானம். இனி காலை, தலையை வலித்தாலும் இங்குதானே வந்தாகவேண்டும். நான் நினைத்தது ஒன்று நீ நடத்தியது ஒன்ருக ஆய்விட்டதே. காரியம் கைகூடும் சமயம் அது சிதற விடும்படிச் செய்துவிட்டாய். இதோ! பாரு. லேடீ கவர்னர் கடிதம் எழுதியிருக்கிருர், உன் உடம்பைப் பற்றி ப்ரமாதமாக விசனித்திருக்கிருர்கள். நீ நாட்டிய மாட வேண்டியதற்காக என்னென்ன புதிய உடைகள், ஆபரணங்கள் வேண்டுமோ அவைகளை இப்போது முதல் தயாரித்துக்கொள்ளும்படியும் தன் மகளின் திருமணத்திற்கு மட்டுமின்றி இன்னும் பல பெரிய மனி

தர்களின் வீடுகளிலும் சபாக்களி லும் நாட்டியம் ஆடும்படிச் சந்தர்ப் பம் இருக்கிறது என்றும் அதற்காக ஒரு இடத்தில் போட்ட உடை மறு இடத்திலில்லாமல் தைத்துக்கொள் ளும்பொருட்டு முன் கூட்டி இதை எழுதி 5 ஆயிரம் ரூபாயிக்கு செக் கும் வைத்திருக்கிறார்கள்.

நீயோ இம்மாதிரி அவசரப்பட்டு விட்டாய். அந்த அல்பம் வந்தால் உன்னை லேசில் அனுப்புமா! முன்பு முட்டுக்கட்டைப் போட்டு உன்னுயி ருக்கே உலை வைத்ததை மறந்துவிட் டாயா! நான் வருவதற்குள் ஏன் இப்படி ஆத்திரப்பட்டாய்? இப்போ தும் பாதகமில்லை''...என்று மிகவும் ச்ரேஷ்டமான உபதேசம் செய்தார்.

எதனால் தான் இப்படி வந்தோம் என்பதையே சுலோசனாவால் அறிய முடியவில்லை. அவளுடைய நிலைமை இப்போது தர்மசங்கடமாகிவிட்டது. தகப்பனார் சொல்கிறபடி போய்விடு வதா! அன்றி சற்று நிதானித்துப் பார்ப்பதா! என்பதே விளங்காமல் குழம்பியது. பிறகு ஒருவாறு திடப் படுத்திக்கொண்டு, ''அப்பா! நான் ஒன்றும் ஆத்திரப்படவில்லை. நீங்க ளும் அண்ணாவும்தான் அவசரப் பட்டு அவருடைய வேலையை ஒழித்துவிட்டீர்கள். அந்த மன அதிர்ச்சியில் அவர் எங்கே தற் கொலை செய்துகொண்டு விடுவாரோ என்று என் மனத்தில் சடக்கென்று பட்டது. அவர் உயிருடன் இருந் தால்தானே நான் நாட்டியங்களாடி நற்கியாதி அடையமுடியும். அதற்கா கத்தான் நான் இங்கு வந்து அவரி டம் சண்டை போட்டுவிட்டு வரலா மென்று வந்தேன். நீங்கள் போங் கள். நான் வருகிறேன். சுதர்சன் இன்று வருவதாகக் கடிதம் வந்தி ருக்கிறது. இம்முறை அவரை நம் வீட்டிலேயே இறங்கச் செய்யுங் கள்'' என்றாள்,

தகப்:—அடேயப்பா! யோசனை யைப் பாரு யோசனை!... அவனாவது தற்கொலை செய்து கொள்வதாவது? அப்படியொன்றும் எனக்கு பய மில்லை. உன் அண்ணன் திரும்பி அடிப்பதற்குள் பயந்துகொண்டு ஓடிய வீரனல்லவா அவன்! போம்மா! அசடு...சரி. நான் போகி றேன். நீ சீக்கிரம் வந்துவிடு'' என்று கூறிச் சென்றார்.

லேடீ கவர்னரின் கடிதம் சுலோ சனாவின் இதயத்தில் ஆழமாகப் பதிந்து ஆசைக் கனலை எழுப்பிவிட் டது. அக் கனலை கணவனின் சீற்ற மாகிய ஜலத்தை விட்டு அணைத்து விடுவானோ! என்றும் ஒரு க்ஷணம் தோன்றியது. எதற்கும் இன்னும் ஏகப்பட்ட நாட்களிருக்கின்றதே பார்க்கலாம்'' என்று ஒரு எண் ணம் உண்டாகியது.

தபாலாபீஸில் விசாரித்ததில் அம் மன்கோவில் சந்தில் 5-ம் நம்பர் வீட்டில் மாறியிருப்பதாகத் தகவல் தெரிந்தது. ஆனால் முதல் முதல் தானே நேரில் அங்கு போவதற்குச் சற்று பின்னடைந்தாள். ஏதோ மகத்தான குற்றத்தைச் செய்தவ னிடம் தானேபோய் பேசுவதா! என்கிற ஒரு அசட்டு எண்ணம் தலை தூக்கியது....''அவர் என்ன அப்ப டிப்பட்ட குற்றத்தைச் செய்தார்?... ஏன்...எனக்குக் கிடைக்கவிருந்த மகத்தான புகழை உதைத்துத் தள் ளியதும் என்னுயிருக்கே ஆபத் தான நோயில் விழும்படிச் செய்த தும், என்னைக் கேட்காமல் வீட் டைக் காலி செய்ததும் பெருங் குற்றமில்லையா?''...

என்று ஒரு விநாடி நினைத்தாள். அதே சமயம் எதிர்சாரியில் ஏகப் பட்ட அழுகுரலும்...''அடீ பாவீ!...

உன்னால் தானேடீ அவன் கிணற்றில் விழுந்து செத்தான்!...அவன் மனம் முறியும்படி நீ செய்ததினலே தான் அவன் உயிரை விட்டான்'' என்று ஒரு கிழவி கத்துவது காதில் பட்டு இவளையறியாது திடுக்கிட்டு ஓடிப்போய் பார்த்தாள்.

ஏதோ பெரியவர்கள் சொல்வார்களே...ச்மசான வைராக்யம், புராண வைராக்யம், ப்ரஸவதி வைராக்யம் என்று......அது போல் சுலோசனவுக்குத் திடீரென்று அவள் கனவிலும் கருதாத விதமாய் ஒரு திகில் உண்டாயிற்று. ஒருகால் தன் கணவனும் அம்மாதிரி ஏதேனும் செய்துவிட்டால்... என்று நினைக்கும்போது அவளை அப்படியே பூமியோடு ஒரு ஆட்டம் ஆட்டியது. அவன் உயிருடன் நன்ருகவிருந்தால்தானே தனக்குக் கிடைக்க விருக்கும் சீமை ப்ரயாணமும் அதனல் உண்டாகும் புகழும் கிடைக்கும்...இல்லையேல் விதவை ...சீச்சீ...எண்ணுவதற்குக்கூட பயமாயிருக்கிறது. கணவன் மனைவிக்குள் எத்தனை மனஸ்தாபமிருப்பினும் அவர்கள் அதைப்பொருட்படுத்தாது விலக்கமுடியாதா என்ன?

இனிதாமதிக்கக்கூடாது. நானே அங்க இடத்திற்குப்போய் அவரை அழைத்து வருகிறேன்''...என்று ஒரு விதமான ஆவேசத்துடன் உணர்ச்சி கிளம்பியது. உடனே ஒரு ரிக்ஷாவை அமர்த்திக்கொண்டு புறப்பட்டாள்.

## 25

ரகு புதியதாய்க் குடியேறியுள்ள சிறிய வீட்டைப்பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. வெறும் உளுத்துப்போன பழய கட்டடமாகையால் எங்கு பார்த்தாலும் பொக்கையும் பொள்ளலும், பெருச்சாளி பாழியும் நிறைந்திருந்ததைப் பார்த்து வெறுப்புடன் வீட்டை நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள்.

வாசல் நடைப்பக்கம் மெத்தைப் படி இருந்தது. யாரோ ஒரு கிழவன் நடைத் திண்ணையில் படுத்து இருமிக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்த சுலோசன..."இந்த வீட்டில் புதிதாக யாரோ ஒருவர் குடிவந்தாராமே, அது எந்த இடம்? அவர் இருக்கிருரா!'' என்று குயிலினும் இனிய குரலுடன் கேட்டாள்.

கிழவன் இருமியபடியே மாடியைக் காட்டினன். உடனே சற்று அச்சத்துடனேயே மாடிக்கு ஏறினள். எத்தனைதான் தான் கனமுடுக்காக விருப்பினும் அவளையும் அறியாது சிறிது அதிர்ச்சியும் குழப்பமும் உண்டாயின. தன்னைப் பார்த்த உடனே என்ன சொல்வானே! என்ன பேசுவானே! பேசாமலேயே முகத்தைத் திருப்பிக் கொள்வானே! அல்லது கழுத்தைப் பிடித்துத் தள்ளி அவமானப்படுத்துவானே! அண்ணன் மீதும் அப்பாவின் மீதும்...ஏன்...என் மீதே உள்ள கோபத்தில் என்னதான் செய்வானே!...என்கிற திகில் பலமாக வாட்டத்தொடங்கியது. அந்தக் குழப்பத்துடன் ஓசை செய்யாமல் படிகளை ஏறும் அழகைப் பிறர் பார்த்தால் அதுவும் ஒருவிதமான அத்புத நாட்டியம் என்றே கூறுவார்கள்.

மாடிப் படிகள் ஏறிய உடனே ஒரு சிறிய ரூம் தெரிந்தது. அதன் முன்பக்கம் சிறிய வராண்டா இருந்தது. அந்த வராண்டாவில் ஒரு கும்மட்டியில் சிறிய பாத்திரத்தில் சாதம் கொதித்துக் கொண்டிருந்தது. உள்பக்கம் மெல்ல எட்டிப் பார்த்தாள். ஊதுவத்திகளின் வாசனை வெகு பரிமளத்துடன் நாசியைத் துளைத்து ஆனந்தத்தை எழுப்

மயது. நல்ல உயர்ந்த வாசனைப் புஷ்பங்களின் பரிமளம் அவளையறியாத பரவசத்தையுண்டாக்கியது.

உள்ளே ரகு க்ருஷ்ண விக்ரகங்களுக்கு புஷ்பாலங்காரம் செய்து திருவிளக்கேற்றி வைத்து தன் மன முருகக் கண்ணீர் பெருக அந்த விக்ரகத்தில் ஐக்யமாகி கைகளால் தாளம் போட்டுக்கொண்டு இன்னிசையுடன் முகாரி ராகத்தில்

முதுகுபற்றிக்கைத்தலத்தால்
முன்னொருகோலூன்றி★
விதிர்விதிர்த்துக்கண்சுழன்று
மேற்கிளைகொண்டிருமி★
இதுவென்னப்பர்மூத்தவா
றென்றுஇளையவர்ஏசாமுன்★
மதுவுண்வண்டுபண்கள் பாடும்
வதரிவணங்குதுமே.

உறிகள்போல்மெய்ந்நரம்
பெழுந்து ஊன்தளர்ந்துஉள்ள
மெள்கி★
நெறியைநோக்கிக்கண்சுழன்று
நின்றுநடுங்காமுன்★
அறிதியாகில்நெஞ்சம்! அன்பாய்
ஆயிரநாமம்சொல்லி★
வெறிகொள்வண்டுபண்கள்
பாடும்வதரிவணங்குதுமே.

என்கிற திவ்யப்ரபந்த பாடல்களை வெகு இனிமையாய்ப் பாடுவதைக் கேட்ட சுலோசனை உண்மையில் திடுக்கிட்டாள்.

சிறு குழந்தைகளுக்குக்கூட நன்ருகப் புரியும்படியாகப் பாடி அவன் மெய்மறந்து துதிக்கும் நிலைமையில் உலகையே மறந்தான் என்ருல் மிகையாகாது. இப்படியே பக்தி செய்தபடியே மகத்தான விரக்தியை அடைந்து அவன் சாமியாராக ஆய்விடுவானே என்ற திகிலும் அவள் மனத்தைப் பிளந்தது.

பாடலின் அர்த்தம் வேறு இதயத்தைத் துளாவியது. இத்தகைய வைராக்யப் பாடலுக்கு அபிநயம் செய்தால் எத்தனை அழகாகவிருக்கும் என்றும் ஒரு மின்னல் எண்ணம் தோன்றியது. கும்மட்டியிலுள்ள சாதம் அப்படியே அளிந்து கூழாவதைக் கண்டு, ஓசைசெய்யாமல் மெல்ல அதை எடுத்துவைத்தாள். நாட்டியத்தில் கைதேர்ந்தவளுக்குச் சமயத்திற்குத் தக்கபடி நடிப்பதற்கா கற்றுக்கொடுக்க வேண்டும்?

ஓசை செய்யாமல் உள்ளே சென்ருள். ரகு கண்களை மூடியவாறு மெய்மறந்து பாடுவதால் எதிரில் எது நடந்தாலும் அறியவில்லை. சுலோசனை அந்த க்ருஷ்ண விக்ரகங்களை ஓசை செய்யாமல் எடுத்துத் தன் இடையில் வைத்துக்கொண்டு பதுமைபோல் நின்ருள். ரகு மனம் பாகாயுருகும் நிலைமையில் கண்ணை மூடியிருக்கிருனேயன்றி கண்களில் பெருகும் நீரைத் தடைகட்ட முடியவில்லை. அதைத் துடைக்கவும் நினைப்பில்லை. தாரைகள் கன்னத்தில் வழிந்தோட

ஈசிபோமின்ஈங்குஇரேன்மின்
இருமிஇளைத்தீர்★உள்ளம்
கூசியிட்டீர்என்றுபேசும்
குவளையங்கண்ணியர்பால்★
நாசமானபாசம்விட்டு
நல்நெறிநோக்கலுறில்★
வாசம்மல்குதண்துழாயான்
வதரிவணங்குதுமே.

என்கிற மற்ருெரு பாசுரத்தை முன்னிலும் அதிக உருக்கத்துடன்பாடிய உணர்ச்சியில் சிலவிநாடிகள் தேகம் மயிர் சிலிர்க்க அப்படியே மவுனத்தில் மூழ்கிப் பின் கண்களைத்திறந்து அந்த கிருஷ்ண விக்ரகங்களை கட்டிக்கொள்ளப்போனன். பீடத்தில் விக்ரகங்களை காணுததால் ...“ஹா!...இதென்ன மாயம்! என் கிருஷ்ணன் எங்கே?” என்று ஒரு அலற்றலுடன் நிமிர்ந்து பார்த்தான்.

என்னே ஆச்சரியம்!... இரண்டு விக்ரகங்களையும் தாங்கிக்கொண்டுச்

சித்திரப் பதுமை போல் நிற்கும் சுலோசனாவைப் பார்த்ததும் ஒன்றுமே தோன்றாது மின்ஸாரம் தாக்கப்பட்டவன் போல்..."என்ன!... என்ன!''...என்று குழறினான்...ஒருவிதமான பக்குவமடைந்து பக்தி நிலையத்தில் நெஞ்சம் உருகி நிற்கும் சமயம் அதைச் சோதிப்பதே போல் இதென்ன தோற்றம் உருவெளியாகவிருக்குமா...என்று க்ஷண நேரம் தன் கண்களைத் தானே நம்பாமல் மறுபடியும் பார்த்தான்.



அப்போதும் அசையாத நிலையில் ஆனால் முகத்தில் ஒரு அத்புதமான புன்னகையுடன் நிற்கும் சுலோசனாவைக் கண்டு "உருவெளியல்ல..... உண்மை தான்!'' என்று நிச்சயம் செய்துகொண்டான் ஆனால் ஒரே உறுதிநிலையில் பக்தியிலாழ்ந்திருந்த மனம் "இதென்ன க்ரகசாரம்!''... என்று சற்று குழம்பத்தொடங்கியது. தான் பேசுவதா வேண்டாமா! என்று சில வினாடிகள் தத்தளித்தான்......அந்த கிருஷ்ண விக்ரகத்தைத் தாங்கி நிற்கும் அவளுடைய அதியத்புத சுந்தரவதனமும் வடிவமும் சாக்ஷாத் தேவகியோ! எசோதையோ நிற்பதாகவும், கிருஷ்ண விக்ரகம்கூட உயிர்பெற்று மானிட வடிவம் தாங்கிய குழந்தையைப் போல் காக்ஷியளிப்பதாகவும் கண்டு ப்ரமித்தான்......"பாழாய்ப்போன நெஞ்சே!...நித்யமான வாழ்க்கையில் புகவிருக்கும் சமயம் ஏன் வழுக்கி விழப்பார்க்கிறாய்...போனகாலமெல்லாம் போதுமே...இனியாவது மனிதர்களிடம் அளவற்ற ஆசையே வைத்து ஏமாறாது அந்த மாயவனிடம் அந்த ஆசைகளை அர்ப்பணம் செய்து நித்ய சுகத்தை அனுபவித்து இன்புறாது...வீணாகப் பாழாகாதே.....என்று நெஞ்சுக்கு உறுதி கூறிப் பார்த்தான்...

மாயையும் சத்தியமும் இதயத்தில் மகத்தான போர்புரியத் தொடங்கின...திக்குமுக்காடிய நிலைமையில்

மறுபடியும் நிமிர்ந்து பார்த்தான். நிமிடத்திற்கு நிமிடம் சுலோசன வின் அழகு பொங்கிப் பொங்கிப் பூரிப்பதுபோல் தோன்றியது. எனினும் தன் உறுதியைவிடாமல்... "இந்த விக்ரகங்கள் உன்னுடைய வையல்ல. உன்னுடைய சகல சாமான்களையும் அனுப்பிவிட்டேன். இவை என்னுடையவை. தயவு செய்துகொடுத்துவிடவும்"...என்று விரக்தியுடன் கேட்டான்.

அதேக்ஷணம்......ஏதுக் கித்தனே மோடிதாலய்யா...ஏழை என் மேல் என்கிற சுரட்டி ராக பதத்தைக் குயிலினும் இனிய குரலில் பாடிக் கொண்டே கிருஷ்ண விக்ரகங் களைத் தாங்கியவாறு சுலோசன ஒரு அபிநயம் செய்யவாரம்பித் தாள்......என்னே விசித்திரம்...... என்னே ஆச்சரியம். பக்தி என்கிற நிலையில் நன்றாகத் தோய்ந்து போகக்கூடியபரிபக்குவம் அடைந்த நெஞ்சில் இப்பாடலும் ஆடலும் சிறுகச் சிறுக இடம் பெற்று ஆனந்தத்தைக் கொடுக்க வாரம்பித்தன.

சில நிமிஷங்கள் மனத்துடன் பெரும் போர் செய்தான்... ஆனால் உறுதி என்கிற கட்டடம் கலகலத் தது...ஏற்னெவே ஆழமாகப்பதிந்து அவன் இதயத்தில் அதபாதாளம் வரையில் வேருன்றிப் போயிருந்த மனைவியின் ப்ரேமை...அவளுக்கு இதயத்தில் கொடுத்திருந்த விலை மதிப்பற்ற பீடத்தில் அவள் உரு வம் நிர்த்தனம் செய்யவாரம்பித்த தால் பக்திப் பரவசத்தால் நீர் பொழிந்த கண்களில் ஆசைப்ரவா கத்தின் அலைமோதலும் ப்ரேமை ஜ்வாலையின் ப்ரகாசமும் எப் படியோ தானாக உண்டாகி அவ னைக் குழப்பின.

நாட்டியத்தைப் பார்க்கிறான். மனத்தில் வைராக்யத்தை ஊட்ட முயல்கிறான். ஆனால் தேனினும் இனிக்கும் தீங்குரலின் இன்னமுத நாதம் கம்பீரமாகக் கிளம்பி அவன் இதயத்தில் ததத்தளிக்கும் நரம்பு களைத் தட்டிவிட்டுப் போவதால் உறுதிக்கு இடமே இல்லாது அவ ளது முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான். தன்னையும் அவளையும் பிரித்து வைத்த அதே சுரட்டி ராகம் இன்று மீண்டும் மதியை மயக்கவந்திருக் கிறதா! என்கிற எண்ணத்துடன் ப்ரமை பிடித்தவன்போல் உட் கார்ந்திருக்கையில் அபிநயம் முடிந் ததும் அந்த கிருஷ்ண விக்ரகங் களுடன் ரகுவே கனவிலும் காணத விதம் சுலோசன தபாரென்று ரகு வின் மடியில் அமர்ந்து "ஸ்வாமி! மன்னிக்க வேண்டுகிறேன்... இந்த கிருஷ்ணவிக்ரகங்கள் என்னுடைய வையல்ல எனினும் இதோ இந்த விக் ரகம் என்னுடையது. அதை நான் எடுத்துப்போகவே வந்தேன்" என்று யாழிசைப்பதுபோல் கூறி அவனை முற்றிலும் தன் வயமாக்கிக் கொண் டாள். காதலன்பிற்குக் கட்டுப் பட்டு அதில் சுலோசனதான் ஜெயித் தாளேயன்றி கடவுளன்பில் கட் டுண்ட ரகு தோற்றே போனான்.

எந்த ஒரு சந்திர தரிசனத்திற் காகக் குமுத மலர் காத்துக் கொண் டிருந்ததோ, ...எந்த ஒரு சூரிய தரி சனத்திற்காக தாமரை மொட்டு விகசிதமடையக்காத்திருந் ததோ, அதேபோல் சுலோசனவின் திவ்யதரிசனத்திற்காகவும் ஒரு மோகனப் புன்னகைக்காகவும் ஒரு அன்பு முத்திரைக்காகவும் காத் திருந்த ரகுவின் மனம் அவனை ஏமாற்றி வஞ்சித்து வைராக்யக் கட லில் தள்ளி விளையாடத் தொடங்கி

யதை விட்டு, கள்ளத்தனமாக் வெளிப்போந்து ப்ரேமை நதியில் தடாரென்றுகுதித்துவிட்டவியப்பை அவனாலேயே அறிய முடியவில்லை.

இம்மாதிரி மனம் உருக்கிய போதெல்லாம். "உம்... அத்தகைய விச்வாமித்திரரே காதலால்தவத்தை இழக்கவில்லையா! அப்பேர்ப்பட்ட சிவ பிரான்...ரிஷ்யச்ருங்கர்... முத லிய பலபேர்கள் உறுதி குலைந் திருக்கும்போது கேவலமான நாம் எம்மாத்திரம்?" என்று நினைப்பது உலக வேதாந்த மல்லவா?... அந்த தொத்துவியாதி ரகுவை மட்டும் விட்டு விலகிவிட முடியுமா! ஆழ்வார் களின் வேதாந்தப் பாசுரங்களையும் பட்டினத்தாரின் வைராக்யப் பாடல் களையும் கரைத்துக் குடிப்பதுபோல் இரவு பகல் படித்துப் படித்துச் செப்பனிட்டு வந்த மனம் ஒரு வினா டியில் சகலத்தையும் மறந்து ஆதி யில் இதயத்தில் கனல்விட்டு எரிந்து கொண்டிருந்த ப்ரேமையில் மூழ்கி விட்டான்.

அவள் அமுத வாயைத் திறந்து "என் விக்ரகத்தை நான் எடுத்துப் போக வந்தேன்" என்று கூறிய வார்த்தையாகிய ப்ரம்மாஸ்திரத்தில் கட்டுப்பட்டவன்போல் கட்டுப்பட்டு விட்டான். "தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கவில்லையா? அதே போல் நாமும் பொறுத்துப் பார்க்க வேண்டாமா! ஏதோ நாட்டியக் கலை யின்பால் கொண்டுள்ள தடுக்கமுடி யாத ஆசையினால் தன்னையறியாத தவறு செய்துவிட்டாள். இப்போது தான் செய்தது பிசகு என்று தெரிந்து தானாகவே வந்து மன்னிப் புக்கோரும்போது நாம் பிகுவு செய் வது கூடாது. இனிமேல் அப்படி இருக்கமாட்டாள். வலிய வரும் இன்பத்தை என் விலக்கவேண் டும்?" என்று எண்ணினவனாய்....

"இந்தக் கட்டை ... உன்னுடைய விக்ரக மென்கிற நினைப்பு இன்று தான் தெரியவந்ததா! அன்றி இது வும் நாட்டியந்தானா?" ... என்றான்.

"ஆம்! நாட்டியந்தான்.... ஏன் நாட்டியமாக இருக்கக்கூடாது? சாக்ஷாத் சிவபெருமானே நாட்டியத் தின் ஜீவநாடியல்லவா! சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் காளிந் தியின் மீது நின்று நாட்டியமாட வில்லையா? கோபிகைகளுடனும் ராதையுடனும் இன்பமாய் நாட்டிய மாடவில்லையா? அவர்களின் வாழ்க் கையின் சகலமும் நாட்டிய மயமா யிருக்கையில் நம்முடையதும் நாட் டியமயமாக இருந்தால் ருசிக்காதா! துரையே! கோபம் வேண்டாம்... ஏதோ நடந்ததை மறந்துவிடும்படி வேண்டுகிறேன்" ... என்றாள்.

## 26

"கங்கா! நம்ம குழந்தை ரகு கடி தம் எழுதியிருக்கிறான். அதைப் படித்தால் என்னால் நம்பவே முடிய வில்லை. இந்தா! நீ படித்துப் பாரு" என்று கிழவர் கடிதத்தைக் கொடுத் தார். கங்கா அதை ஆவலுடன் வாங்கிப் படிக்கவாரம்பித்தாள்.

"அனேக நமஸ்காரம். எனது முன்னறி தெய்வங்களாகிய உங் களுக்கு நான் எழுதப்போகும் விஷ யம் வெகு வியப்பைக்கொடுக்கும். ஒரு வேளை நம்பாமல் இருக் கலாமோ என்று சந்தேகப்படுகி றேன். என் வாழ்க்கையில் புதிய சகாப்தம் ஆரம்பமாகியிருக்கிறது. சுலோசனா தானாக வந்து, இடிந்து போன வாழ்க்கைக் கட்டடத்தைப் புத்துயிரளித்துக் கட்டியிருக்கிறாள். தேனும் பாலும் போன்ற ஒற்றுமை யுடன் குடும்பம் நடக்கிறது. கொஞ்ச நாளாவது பார்த்துக் கொண்டு இந்த புதியவாழ்வு நிலைத்த பிறகுதான் உங்களுக்குக் கடித

மெழுதவேண்டுமென்று எண்ணி இத்தனை நாள் பேசாதிருந்தேன். இன்றுதான் எழுதுகிறேன். முன்பிருந்த சுலோசனாவிற்கும் இப்போதிருக்கும் சுலோசனாவிற்கும் அஜகஜாந்திரமான வித்யாஸம் இருப்பதை என்னாலேயே நம்ப முடியவில்லை. அதே வீட்டில் குடித்தனம் பண்ண ஆரம்பித்து இன்று சரியாக ஒரு மண்டலமாகிறது. இது வரையில் ஒரு தினம்கூட அவள் தாயார் வீட்டில் இரவு தங்கவில்லை என்பதைக் கேட்க நீங்கள் நம்பவே மாட்டீர்கள். தினம் போகிறாள்; உடனே வருகிறாள். வெகு அக்கரையுடன் குடும்பத்தை கவனிக்கிறாள். அதோடு க்ளப்பு சிநேகிதர்கள் வீடு செல்வது, அவர்கள் வருவது, இவள் மட்டும் தனியாக நாட்டியமாடுவது இவைகள் பழயபடியேதானிருக்கின்றன. இதோடு ஒரு முக்ய விஷயம். இவ்வருஷம் வரலக்ஷ்மி பூஜையைத் தானே இங்கு செய்யப்போகிறாளாம். அதற்காக தனது சிநேகிதர்களை எல்லாம் அழைத்து ஒரு தேக்கச்சேரி கொடுக்க மிகவும் ஆசைப்படுகிறாள். வரலக்ஷ்மி வ்ருதத்திற்கு மாமாவும் மாமியும் கட்டாயம் வரவேண்டுமாம். சித்தி, கமலா முதலியவர்களுக்கும் வரும்படி கடிதமெழுதச் சொல்லித் தொந்தரவு செய்தாள். இத்தகைய நல்ல காலமும் என் வாழ்நாளில் வந்திருப்பதை நான் விலக்க ப்ரியப்படவில்லை. எழுதியிருக்கிறேன்...

எல்லாவற்றையும் விட முக்யமான விஷயத்தை எழுத மறந்துவிட்டேனே! எனக்கு மில்டரி ஆபீஸில் நல்ல வேலை ஆய்விட்டது. சம்பளம் முதலில் எடுக்கும்போதே 150 மில்ட்ரீ என்றால் பயப்படாதீர்கள், ஆபிஸில் வேலைதான். சிப்பாய் இல்லை. வரலக்ஷ்மி வ்ருதத்திற்கு இன்னும் 15 நாட்கள் இருப்பதால் நீங்கள் 10 நாள் முன்னதாகவே வந்துவிடுங்கள் இதே புத்தி கடவுள் க்ருபையால் இவ்விதமே நிலைக்கவேண்டுமென்று ப்ரார்த்தனை செய்யுங்கள்.

நமஸ்காரம்

ரகு"

தம்பதிகளின் உள்ளம் ஆனந்தத் தினால் பூரித்தது. அவர்களுடைய வரண்டுபோயிருந்த இதயங்களில் ஆனந்த ஊற்று சுரந்ததுபோன்ற உணர்ச்சி உண்டாகியது. "கடவுள் கிருபையால் இதே இன்பவாழ்க்கை நிலைத்து அதனடையாளமாய் ஒரு மலர் அரும்பி குல வ்ருத்தியானால் போதும்... என்ன! கங்கா! புறப்படலாமா?" என்றார் கிழவர்...

கங்கா:—கரும்பு தின்பதற்குக் கூலியா வேண்டும்? இத்தகைய ஒரு சந்தோஷ காலமும் வருமா என்று ஏங்கியிருந்த எனக்கு அந்த மகாலக்ஷ்மியே வலுவில் அழைத்திருக்கும்போது போகாமலிருப்பேனா! பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் வைத்துக்கொண்டு குடித்தனம் செய்ய எனக்கும் ஆசை அடித்துக் கொள்கிறது. இத்தனை நாட்கள் பூர்த்தியாகாத ஆசை இனியாவது பூர்த்தியாகட்டுமே...... நாளையே கிளம்பிவிடுவோம்—என்றாள்.

அவள் பிள்ளையைப் பெறவில்லையேயன்றி தாய் உள்ளத்தின் உணர்ச்சியும் இன்பமும் அவளை முற்றுகையிட்டன. மறுதினமே போகவேண்டுமாதலால் அன்றே அனேகவித பக்ஷணங்களைச் செய்து, ஏற்கெனவே செய்திருந்த பலதினுசு ஊறுகாய்கள், வத்தல், வடாம், அப்பளம் முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு இருவரும் ரகுவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அதிசயத்திலும் அதிசயம்! கங்காவே வியக்கும்படி சுலோசனா எதிர்

கொண்டழைத்து "வாருங்கள் மாமீ! ...மாமா!......நமஸ்காரம்" என்று ஸேவித்தாள்.

இதுவரையில் கல்யாண காலத்தில்கூட இவர்களை நமஸ்கரித்தறியாத வணங்காமுடி மன்னன் போன்றவள் வணங்கியதும் கிழவர்களின் இதயம் குளிர்ந்துவிட்டது. தாம் கொண்டுவந்த பக்ஷணங்களையும், வெற்றிலை, பாக்கு, புஷ்பம், பழம் எல்லாவற்றையும் அப்படியே அவள் கையில் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். புன்னகைத் தவழ சுலோசனவும் அவைகளை வாங்கி உடனே திறந்து தனக்குப் பிடித்தவற்றை ஆவலுடன் அப்போதே தின்று ருசி பார்ப்பதைக் கண்ட கங்காவின் உள்ளம் பூரித்தது.

சுலோசனவின் புதிய வாழ்க்கைக்கேற்ப அவளுடைய உருவமும் புதியதாகவே வெகு ப்ரகாசத்துடன் காணப்பட்டது. பளபளப்பான மேனியிட்டிருக்கும் அழகைப் பார்த்தவுடனே கங்காவுக்குச் சற்று சந்தேகம் உண்டாகியது. ஒருகால் கர்ப்பவதியாயிருக்கலாமோ... என்று ஒரு க்ஷணம் எண்ணினள். ஆனால் அடுத்த வினடியே..."உம்... குடித்தனத்திற்கு வந்தே ஒரு மண்டலந்தானே ஆகிறதென்று எழுதியிருந்தான். பார்ப்போம்......போகப் போகத்தானே தெரிகிறது. பகவான் அத்தகைய அத்புதமான நிலைமையைக் கொடுத்து, ரக்ஷித்தால் போதும்" என்று தனக்குள் எண்ணியவளாய் சுலோசனவை ஆவல் தீரக் கட்டியணைத்துக் கன்னத்தை வழித்து கைகளைச் சுடுக்கித் த்ருஷ்டி கழித்து, "உனக்கு வந்த ஆபத்து நீங்கி இம்மட்டும் வயிற்றில் பாலை வார்த்தாயே! அதுவே போதும். இந்தக் கிழங்கள் கண்டு களிக்கும்படி ஒரு குழந்தையைச் சீக்கிரம் பெற்றுக் கொடு... அந்த ஆசைதான் எங்கள் இதயத்தில் ப்ரவாகம்போல் ஓடுகிறது. அதை பகவான் பூர்த்தி செய்து வைத்தால் போதும். எங்கே ரகுவைக் காணவில்லை?" என்றார்.

சுலோ:—வெளியே போயிருக்கிறார். இதோ வந்துவிடுவார்... வாருங்கள்; ஸ்நானம் செய்துவிட்டுக் காப்பி சாப்பிடலாம்—என்றாள்.

அந்த அமுத வார்த்தைகளைக் கேட்டதுமே கங்காவின் உள்ளத்தில் அவளை மீறிய ஆனந்தம் உண்டாகியது. இன்றே தான் பெண் பிறந்த பேறு பெற்றதாய் அவள் மனது களிவெறி கொண்டது. ரகு வந்ததும் அவனே வியப்புக்கடலாடினன். தேனும் பாலும் போல என்ற பழமொழியின் சாரத்தை இக்குடும்பத்தில் நேருக்குநேராகக் கண்டார்கள்.

இத்தனை வருஷங்களிலும் கண்டறியாதவிதம் வெகு விமரிசையுடன் வரலக்ஷ்மியின் பூஜை நடந்ததைக் கண்டு கிழவர்களுக்கும், கமலா, காமு, முதலியவர்களுக்கும் சொல்லத்திறமற்ற பூரிப்பு உண்டாகியது. ஊரெல்லாம் அழைத்து மஞ்சள் குங்குமம் கொடுத்து சுலோசன எல்லோரையும் உபசரித்து செய்த அழகைப் பார்த்தாலும் பசியாறும் போலிருந்தது. இந்த வைபவத்தைப் பார்த்துப் பூரிக்கும் ரகுவுக்கு..."சீச்சீ! இத்தகைய ஆனந்த லக்ஷ்மியை நாம் உதறிவிட்டு வெறும் சன்யாசிக் கட்டையாகித் தாளம் தட்டிக்கொண்டு பாடித்திரியவிருந்தோமே!" என்றும் தோன்றியது.

## 27

காமு:—நானும் வந்து ஒரு மாதமாகிவிட்டது. என்ன அதிசயம்! பார்த்தாயா. இன்னமும் சுலோசன என்னைப் போகக்கூடாது என்று கட்டாயப்படுத்துகிறாள். ரகுவின் வாழ்க்கையில்கூட இத்தகைய ஒரு

ஆனந்தம் ஏற்படுமா! என்று ஏங்கிய நம் குறையைப் பகவான் பூர்த்தி செய்துவிட்டார்... இனி நாம் அதிக நாள் இங்கு தங்கக்கூடாது மரியாதையாகப் போய்விடவேண்டும்... என் அக்கா! சுலோசனையைப் பார்த்தால் எனக்கு மிக்க சந்தேகமாகவே இருக்கிறது. அவளிடம் நேரில் கேட்கவும் பயமாயிருக்கிறது. பார்த்தால் மூன்று மாதம் இருக்கும்போல் தோன்றுகிறது. மேனியின் பளபளப்பும், முகத்தின் புதிய சோபையும், கண்களில் கருத்தரித்த அடையாளமாகிய அபூர்வ களையும், முகம் தணிந்து வெளுத்திருப்பதும், சோர்ந்து சோர்ந்து படுப்பதும் பார்த்தால் நிச்சயமாகக் கர்ப்பவதியாகத்தானிருக்கிறாளென்று தோன்றுகிறது. நீ ஏதாவது அவளை விசாரித்தாயா?

கங்கா:—நான் ஊரிலிருந்து வந்தது முதலே அவளைப் பார்த்துச் சந்தேகப்பட்டு சமையல்காரியை விசாரித்தேன். அவளும் சந்தேகிப்பதாகவே கூறினள். கடவுள் கிருபையில் நல்ல குழந்தையாகப் பிறக்கவேண்டும். எல்லோரும் தீர்க்காயுஸாக இருக்கவேண்டும். அதுதான் நம்முடைய கோரிக்கை. ரகு என்னை இனிமேல் போகவே கூடாது என்கிறான். அவளும் அப்படித்தான் சொல்கிறாள்......ஆனால் இனிமேல் அதிக நாள் ஒரே தடவையில் இருக்க நான் விரும்பவில்லை. ஊருக்குப் போய்விட்டு கடவுள் கிருபையில் சீமந்தத்திற்கு வந்தால் போகிறது என்றுதான் தீர்மானித்து விட்டேன். அவளுக்கு இந்த புத்தி இப்படியே நிலைக்கவேண்டும். என்று பேசும்போது அங்கு ரகு வந்து குழந்தையைப்போல் கங்காவின் பக்கத்தில் உட்கார்ந்து "என்ன யோசனை! பலமானதாகச் செய்வது போலிருக்கிறதே!" என்றான்.

காமு:—ஆமாண்டா! கண்ணா பலமான யோசனைதான். இத்தனை நாளாகக் குழந்தையாயிருந்த நீ இனிமேல் தகப்பனாகப் போகிறாய். அது எங்களுக்கு ப்ரமாதமான சந்தோஷமில்லையா! அதனால்தான் யோசனை செய்கிறோம். சீமந்தம் எங்கு வைத்துக்கொள்வது? எப்படி தடபுடலாகச் செய்வது என்கிற யோசனையிலிருக்கிறோம். நீயாகச் சொல்லாவிடினும் நாங்களே திருட்டைக் கண்டுபிடித்து விட்டோம்... என்றாள்.

உண்மையில் இந்த அத்புதமான மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் ரகுவுக்கு தெரியவே தெரியாது. குழந்தை என்றால் சிறிய வயது முதல் அவனுக்கு அளவற்ற ஆசை, யார் குழந்தையாயினும் தூக்கிப் போட்டுக்கொண்டு திரிவான். வயது வந்த பிறகு அவனுடைய ஆசை தனக்கு ஒரு குழந்தை எப்போது பிறக்கும் என்றதில் லயித்தது. ஆனால், அவன் மகா சங்கோஜியாகையால் அதை இதய பாதாளத்தில் புதைத்திருந்தான். இப்போது இச் செய்தியைக் கேட்டதும் அவனுக்குண்டாகிய சந்தோஷத்திற்கு அளவே இல்லை. முகம் சூரியனைக் கண்ட தாமரையைப்போல் விகஸித முற்றதைக் கண்ட கங்காவின் மனதும் பூரித்தது... "மாமீ! சித்தி என்னைக் கோட்டா செய்கிறார்களா! உண்மையாகவே சுலோசனை கர்ப்பவதியாயிருக்கிறாளா! எனக்கு ஒன்றுமே தெரியாதே!"... என்று சிறுபிள்ளைத்தனமாகக் கேட்டான்.

காமுவும் கங்காவும் சிரித்துக் கொண்டே "போடா பயித்தியமே! இம்மாதிரி பிறத்தியாரிடம் சொன்னால் சிரிப்பார்கள். எங்கள் கோரிக்கையை பகவான் பூர்த்தி செய்யும்

காலம் இப்போதுதான் வந்தது போலிருக்கிறது. முதல் முதல் உங்கம்மாவை நினைத்து இரண்டு சுமங்கலிகளுக்குப் புடவை வாங்கிக் கொடுத்து சுமங்கலி ப்ரார்த்தனையைச் செய்யவேண்டும். அந்தம்மாள் எங்காவது தெய்வமாகவிருந்து காப்பாற்றட்டும்'' என்றூர்கள்.

ரகுவின் மனத்தில் ஆனந்த அலை மோதல் ப்ரமாண்டமாகக் கிளம்பி விட்டது. சுலோசனாவின் புதிய சோபையின் ரகஸியத்தையும் அவளுடைய தாய்மையின் கம்பீரத்தையும் எண்ணி இன்புற்றான். அவளுடைய சௌந்தர்ய வதனத்தை இமையிசைக்காமல் கண்டு களித்து தேன் குடித்த நரியைப் போலானான்.

வெட்கத்தையும் விட்டுத் தன் மனைவியைத் தானே கேட்க எண்ணி, ஓட்டமாக சுலோசனாவிடம் ஓடினான். அப்போது அவள் நிலைக்கண்ணாடிக்கு முன்பு நின்று ''காணி நிலம் வேண்டும் என்கிற பாரதியாரின் அத்புதப்பாடலைப்பாடி அதற்கு அபிநயம் செய்துகொண்டிருந்தாள். இந்த கண்கொள்ளாக் காக்ஷியை தூரவிருந்து பார்த்து இன்புற்றிருந்த ரகு அது முடிவடையும் சமயமறிந்து ...பாலக்ருஷ்ணன் வேண்டும்...நமக்கொரு பாலக்ருஷ்ணன் வேண்டும்'' என்று பாடிக்கொண்டே சென்று சுலோசனாவைச் சேர்த்தணைத்துக் கொண்டான். இருவரும் சேர்ந்து சிரித்த சிரிப்பொலி அக்கட்டடம் பூராவுமே எதிரொலித்தது... ''ப்ரியே! எனக்கு இத்தனை நாள் நீ ஏன் சொல்லவில்லை? இப்போது தான் மாமி சொன்னாள். அப்பாடா! ...நான் வெகு நாட்களாக எதிர் பார்த்துக்கொண்டிருந்த மனோரதத்தைப் பூர்த்திசெய்த என்னப்பன் கீதாசாரியனின் பாதங்களை வணங்குகிறேன்....ஒருவிதமான குறைவுமின்றி பகவான் பூர்ணயிம்பத்தை அளிக்கவேண்டும்'' என்றான்.

சுலோசனாவின் முகம் வெட்கத்தினால் சிவந்து குனிந்தது. அவளும் அபரிமிதமான சந்தோஷத்துடன் புன்னகை அரும்பும் வதனத்துடன் ரகுவை உற்றுப்பார்த்தாள். ஆனால் வாய் பேசவில்லை. இருவர் உள்ளங்களிலும் ஒரேவிதமான இன்ப ப்ரவாகந்தான் ஓடிக்கொண்டிருந்தது.

பின்னும் சில தினங்களில் காமு, கமலா முதலியவர்கள் போய்விட்டார்கள். கங்காவும் கிழவரும் மட்டும் ரகுவின் நிர்ப்பந்தத்தினால் போகவில்லை. சுலோசனாவின் தாயார் வீட்டில் அவளை அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று சொல்லியனுப்பினார்கள்.

முன்பு நடந்த அடிதடி சம்பவத்திற்குப் பிறகு ரகு இதுவரையில் மாமியார் வீட்டிற்குப் போகவில்லை. மாமனார், மைத்துனன் முதலியவர்களின் முகத்தில் விழிக்கவே இல்லை. அவர்களும் இவன் இருக்கும் வேளைகளில் இங்கு வருவதில்லை. எப்போதும் சுலோசனாவின் அண்ணன் மனைவிதான் தாராளமாக வருவது வழக்கம். சுலோசனாவின் கர்ப்பத்தை யறிந்ததும் உலக சம்ப்ரதாயப்படி பிறந்தகத்திற்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

சில நாட்கள்கூட சுலோசனாவைப் பிரிந்திருக்க மனமில்லாததால் ''சுலோசனா! உன்னைப் புஷ்பத்தின்மீது வைத்து நான் பூஜிக்கின்றேன். நீ எப்படி விரும்பினாலும் அப்படி நான் உன்னை நடத்தத் தயாராகஇருக்கிறேன். என்னை விட்டுப் போகாதே. உன்னை இனி அரைக்ஷணம் பிரிந்திருப்பதற்கும் என் மனம் சகிக்காது. உன்னுடைய அதிகாரத்தில் நீ உன் சொந்த

வீட்டில் இஷ்டமானபடி இருப்பதில் ஒருவிதமான கஷ்டமும் இருக்காது. ஆகையால் நீ போகவேண்டாம் சுலோசனா!" என்று ரகு தன் இதயத்தில் புதைந்து கிடக்கும் அன்பைமுற்றும் அப்படியே திறந்து காட்டிக் கெஞ்சினன்.

யார்செய்த புண்ணியமோ சுலோசனவின் மனதும் இளகிவிட்டது. "நான் போகவில்லை. உங்கள் விருப்பப்படியே இங்கு இருக்கிறேன்" என்று ஒப்புக்கொண்டாள். அம்மாதிரி அவள் தன் விருப்பப்படி நடந்தது அவன் ஆயுளில் இதுவே முதல் தரமாகவிருந்ததால் அளப்பரிய பூரிப்பை அடைந்தான். சுலோசனவுக்கு எப்படி இஷ்டமோ அப்படியெல்லாம் அவளை நடத்தி வந்தான். ரகுவின் வீட்டில் சுலோசன ஒரு அரசியாகவே நடந்துவந்தாள்.

## 28

யுத்த முழக்கம் எங்கு பார்த்தாலும் பலமாக எழுந்து ஆட்சி புரியத் தொடங்கியது. இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பவர்களும் ராணுவ ஆபீஸில் உத்யோகமாக இருப்பவர்களை வெளியூர்களுக்கும் சிலரை போர் புரியும் இடங்களிலேயே உள்ள ஆபீஸிற்கும் மாற்றுவதும் புதிய புதிய நபர்களுக்கு வேலைகள் கொடுப்பதும், ஏற்கெனவே வேலையிலிருந்து உபகாரச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் புதிய வேலை கொடுப்பதும், சண்டைக்குப் பயந்து ஜனங்கள் தத்தளிப்பதுமான போராட்டங்கள் வெகு மும்முரமாகக் கிளம்பின.

ரகுவின் ஆபீஸில் அனேகம் பெயர்களை வெளியூர்களுக்கு மாற்றும்போது ரகுவின் பெயரும் அந்த ஜாபிதாவில் சேர்ந்திருப்பது கண்டு ரகுவின் குடல் நடுங்கியது. அவனுக்கு வந்த கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் எல்லையே இல்லை. "சுலோசனவைப் பிரிய மனமின்றி அவளை அவள் தாயார் வீட்டிற்கு அனுப்பாத என்னை ஊரைவிட்டே பிரிக்கவா இந்தப் பாழும் யுத்தம் வந்து சேர்ந்தது? இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது?" என்று குமுறுகிருன்.

காலம் உள்ள நிலைமையில் மறுத்துச் சொன்னல் வேலை போய்விடும். என்கிற பயமும் வாட்டாமலில்லை. இச்செய்தியை சுலோசன அறிந்தால் என்ன நிலைமையை அடைவாளோ! என்ற திகில் ஒருபுறம் வாட்டுவதால் அதை சுலோசனவிடம் சொல்லலாமா! வேண்டாமா! என்று சில தினங்கள் தியங்கினன். அவளுக்குத் தெரிவிக்காமலேயே எப்படியாவது தான் வெளியூர் போகாமல் தடுத்துக்கொள்ளும் வழியில் முயற்சி செய்யவேண்டும் என்கிற எண்ணத்துடன் தனக்கு உடம்பு சரியில்லாததால் அவன் அந்த வேலைக்கு லாயக்கில்லை என்று கூறும்படி டாக்டரிடம் ஸர்டிபிகேட் வாங்கிக்கொடுத்து விடலாம் என்று எண்ணினன்.

மனத்தில் புதிய விஷயம் குடிகொண்டதால் அதே கவலையில் முகப் பொலிவு சிறிது குன்றி தேகம் இளைக்கவாரம்பித்தது. "சந்தோஷ சூரியன் உதயமாகிவிட்டான் என்று குதூகலிக்கும் சமயம் சங்கட சூரியன் அருணோதயமாகியதுபோல் இப்படியா சனியன் பிடிக்கவேண்டும்?" என்று குழம்பித் தவிக்கையில் சோதனையின்மேல் சோதனை செய்வதுபோல் இவனை இவனுடைய மேலதிகாரி கூப்பிட்டனுப்பினர்.

ரகுவின் கைகால்கள் நடுக்கலெடுத்துக்கொண்டன. உடனே தன்னை வெளியூருக்குப் போய்விடு என்று சொல்வதற்காகத்தான் கூப்பிடுகிருரோ! என்கிற திகிலு

டன் நடுங்கியவாறு போனான். இம் மாதிரி உத்திரவைப் பார்த்த எல்லோருமே தன்னைப்போலத்தான் கவலைப்படுவார்கள் என்று எண்ணியதற்கு மாறாக அனேகம் பேர் வேலை மாற்றத்தைக் கண்டு மிதமிஞ்சிய குதூகலத்துடன் கும்மாள மடிப்பதைக் கண்டு வியப்புற்றான்.

அதிகாரி பொறுக்காகச் சிலரை அழைத்து இன்னும் ஒரு மாத தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் நாங்கள் எந்த ஊருக்குப் போகச் சொன்னாலும் உடனே தயாராய் கிளம்பவேண்டும். ஒரு வேளை அதற்குள்ளேயே அவசிய மேற்படுமாயின் உடனே தெரிவிப்போம். தக்ஷணமே வந்துசேரவேண்டும். இந்த ஒருமாத அவகாசம் எதற்கெனில் குடும்பத்திற்கு வேண்டிய வசதிகளைச் செய்து நீங்கள் மட்டும் கிளம்பவேண்டும் என்பதற்காகத்தான்...என்று கூறியனுப்பினர்.

இனிமேல் என்ன செய்ய முடியும்? இதே விசாரத்துடன் வீட்டிற்கு வந்தான். சுலோசனாவிடம் இதை எப்படி தெரிவிப்பது? கர்ப்பிணியாகிய அவளுக்கு இச் செய்தி மிக்க அதிர்ச்சியைக் கொடுத்துவிடுமாயின் என்ன செய்வது என்று பல விதமாகக் குழம்பிக்கொண்டே மாடிக்குச் சென்றான். சுலோசனா வழக்கம்போல் வராததால் கங்காவே காப்பி கொண்டு வந்து கொடுத்துவிட்டு "என்னடாப்பா! சில தினங்களாகவே உன் முகமும் உடம்பும் நன்றாகவே இல்லையே! உடம்புக்கு ஏதாவது செய்கிறதா! அதுவே எனக்குக் கவலையாயிருக்கிறது. நானும் கேட்கக்கூடாதென்றே இருந்தேன். ஏன் இப்படி இருக்கிறது?" என்று விசாரித்தாள்.

ரகு:—உடம்புக்கு ஒன்றுமில்லை மாமி! பகவான் ஏதோ ஒருவிதமாய் குடும்ப வாழ்க்கையை இனிப்புடன் நடத்த க்ருபை செய்தபோது என் விதி அதைச் சிதைக்கும்படியாய் அமைந்துவிட்டது. உலகச் சண்டை ஆரம்பமாகிவிட்டது. எங்கள் ஆபிஸில் பலபேர்களை சண்டை நடக்கும் இடங்களுக்கும் பட்டாளத்தைச் சேர்த்துவைக்கும் இடத்திற்கும் வகுத்து அனுப்ப உத்திரவு வந்துவிட்டது. அதில் என் பெயரும் இருக்கிறது. இதே வேதனையில் தான் என் மனது ஊசலாடுகிறது. சுலோசனாவைப் பிரிய மனமின்றித் தவித்த எனக்கு இப்படிப்பட்ட சோதனையை பகவான் ஏன் செய்ய வேண்டும்? இது சுலோசனாவுக்குத் தெரிந்தால் அவளுக்கு எப்படி இருக்கும் என்றுதான் வருத்தமாயிருக்கிறது. எங்கே சுலோசனா?... தூங்குகிறாளா!

கங்கா:--என்ன! உன்னை மாற்றி விட்டார்களா! சண்டைக்காகவா!... அவளும் இரண்டு மூன்று நாட்களாய்ச் சரியாகவே இல்லை...உன் முகமும் நன்றாயில்லையே! அவளும் ஏதோ ஒருமாதிரி இருக்கிறாளே! என்ன விஷயமோ தெரியவில்லையே! என்றுதான் நான் கவலைப்பட்டேன். அவள் உடம்பு பற்றி விசாரித்தேன். ஒன்றுமில்லை என்று கூறிவிட்டாள். இன்று நீ ஆபீஸுக்குப் போன உடனே ஒரு கார் வந்தது. அதில் யாரோ இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அது யாரென்று எனக்குத் தெரியாது. அதில் அவளும் ஏறிக்கொண்டு போய்விட்டாள். விஷயம் இன்னதென்று தெரியாமல் தவிக்கிறேன்...

ரகு:—உன்னிடம் சொல்லாமலா போனாள்?......அவளுடைய அண்ணன் தம்பி யாருமே காரில் லையா?—

மாமி:- அவர்கள் யாருமே இல்லை.

முன் தலையை நாடகக்காரன் போல் வாரி பின்னல் விட்டுக்கொண்ட ஒருவன் உட்கார்ந்திருந்தான். வெகு ஷோக்காக அலங்கரித்துக்கொண்டி ருந்த நவநாகரீகப் பெண்மணி யொருத்தி உட்கார்ந்திருந்தாள். இவளை அழைத்ததும் இவள் ஒன் றுமே பேசாமல் கிளம்பிச் சென்று விட்டாள். சாப்பிடக்கூட இல்லை. எங்கு சென்றுளோ! இன்னும் வரக் காணோம்—என்றுள்.

இவள் சொல்லிய விவரத்திலி ருந்து காரில் வந்தவன் சுதர்சன் என்றும் அவனைச் சார்ந்த நாட்டி யக்காரி என்றும் விளங்கிவிட்டது. எனினும் இதைப்பற்றிப் பேசுவ தற்கு என்ன இருக்கிறது? மவுனந் தான் துணையாய் நின்றது. சுதர்சன னுடன் தனியாக எங்கே போயிருப் பாள்? அவள் பிறந்தகத்திற்குத்தா னிருக்கும். இரவு வந்துவிடமாட் டாளா என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டான்.

தன்னை அழைத்துக் கூறிய மேலதிகாரியின் வீட்டிற்குச் சென்று அவரிடம் எப்படியாவது தன்னைமட்டும் அனுப்பாமலிருக்கும் படி கேட்கவேண்டுமென்று அவன் மனது தவித்ததால் அப்போதே சூட்டோடு சூடாகச் செய்துவிட வேண்டுமென்று அந்த நிமிடமே அதிகாரியின் வீட்டில்போய் சந்தித் துத் தனக்குமட்டும் சிபார்சு செய் யும்படி வேண்டிக்கொண்டான். அதற்கு அவன் கூறிய காரணங் களில்; தனக்கு தேகசுகம் சரியா யில்லை என்பது ஒன்று; தன் மனைவி கர்ப்பவதியாயிருப்பதால் ப்ரஸவித் துக் குழந்தையைப் பார்த்த உடனே போவதாக மற்றென்று; தனது பிதாவுக்குச் சமமான மாமனின் தேக நிலை சரியாக இல்லை என்கிறவை களே கூறினன். ஏதோ முயற்சிப்ப தாக அவர் தெரிவித்தார்.

இரவு 10-மணி சுமாராயிற்று. ரகு வீட்டிற்கு வந்தான். ஆனால் அப்போதும் சுலோசன வரவில்லை என்பதையறிந்து மிக்க விசன மடைந்து ஏதேதோ குழப்பத்தி லாழ்ந்தான். "புதிய வாழ்வு ஆரம் பித்தபிறகு ஒரு தினமாவது அவள் தாயார் வீட்டில் தங்கினதே இல்லை. அங்கு சென்றுல் இரவு திரும்பிவிடு வாள்; இன்றுமட்டும் ஏன் இப்படி இருக்கவேண்டும்?" என்கிற யோச னையால் தூக்கமே பிடிக்காது தவித் தான். இவன் மாமனர் வீட்டிற்கு ஆள் அனுப்பி விசாரிக்க இவனுக்கு இஷ்டமில்லை. "எப்போது வருகி றளோ வரட்டும்" என்று எண்ணி பொறுமையை வகித்தான்.

"ஏன் சார்! உலகத்திற்கு ஏதோ பெருத்த நாசந்தான் உண்டாகி யிருக்கிறது. இல்லாவிட்டால் இத் தகைய சண்டையொன்று வருமா சார்! எத்தனையோ பேர்களை மாற்று கிறர்களாமே? நீங்களும் மில்ட்ரி ஆபீஸில் வேலையாயிருக்கிறீர்களே! உங்களுக்கு ஒன்றும் மாற்றல் வராதிருக்கிறதா.., ஆமாம். நேற்றே கேட்க எண்ணினேன். மறந்தே போய்விட்டேன். அம்மாளுக்கு என்ன உடம்பு? ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறர்களாமே...., கர்ப்பம் என்று பெரியம்மாள் சொல்லக் கேள்விப்பட்டேன்...இப்போது ஆஸ்பத்திரியில் ஏன் படுத்திருக்கி ருர்கள்?"..என்று தபால்காரன் ஒரு கவரைக் கொடுத்துவிட்டு ரகுவை வலுவில் கேட்டான்.

இதைக்கேட்ட ரகுவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன! என்ன! அம்மா ஆஸ்பத்திரியில் படுத் திருக்கிறர்களா......உனக்கு யார் சொன்னது?"...என்று பதறிய வாறு கேட்டான்.

தபால்காரன்:—என் சார்! உங்களுக்கு விஷயமே தெரியாதுபோல் கேட்கிறீர்களே! வாஸ்தவமாகவா தெரியாது......மூன்தா நாள் முதல் ஆஸ்பத்திரியிலிருக்கிறார்கள். என் மனைவியின் சொந்தக்காரர்கள் ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதால்நாங்கள் இரண்டு பேரும் போய் பார்த்தோம். அங்கு உங்கள் மாமியார் வீட்டுக்காரர்கள் இருந்தார்கள். யாருக்கு உடம்பு என்று விசாரித்தேன். உங்கள் மனைவிக்குதான் தேக அசுகமாம்......அபார்ஷன் கேஸ் என்று தெரிய வந்தது. இங்கிருந்துதான் போயிருப்பார்கள் என்றல்லவா எண்ணினேன்! உங்களுக்கு இன்னமுமா விஷயம் தெரியாது?....என்று ப்ரமாதமாய் அங்கலாய்ப்புடன் கேட்டான்.

ரகுவின் ஆசைக் கோட்டை அப்படியே இடிந்துபோய் அவனை அதபாதாளத்தில் தள்ளியதுபோன்ற அதிர்ச்சி உண்டாகியது. "அபார்ஷனா!...ஐயோ!..இதென்ன போதாத வேளை. எனக்கு ஏன் இதை சொல்லியனுப்பக் கூடாது?"......என்று ஆவேசம் வந்தவனைப்போல் எண்ணியபடியே அவன் கொடுத்த கவரைக்கூட பிரித்துப் படிக்க மனம் தாங்காது நேரே ஆஸ்பத்திரிக்கு ஓடினான்.

அங்குள்ளவர்களைக்கேட்டு சுலோசனா படுத்துள்ள இடத்திற்கு அலையக்குலைய ஓடினான். சுலோசனாவின் தாமரை மலர்போன்று விகசிதமுற்று இவனை மதிமயக்கச் செய்திருந்த முகம் விகாரமாக வெளுத்துப்போய் பளபளப்பும் செழிப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து குழி விழுந்தும் சுருங்கியும் காணப்பட்டது. மானின் மருண்ட விழிகளைப் பழிக்கும் கண்கள்சோபையை இழந்து சோர்வும் ஒருவிதமான வாட்டமும் ஏக்கமும் கலந்த நிலையில் வெறும் வரண்ட கண்களாகக் காக்ஷியளிப்பதைக் கண்ட ரகுவால் சகிக்கமுடியாது போய்விட்டது.

சுலோசனாவின் பக்கத்தில் அவளுடைய தாயார்தான் உட்கார்ந்திருந்தாள். முன்பு சுலோசனா படுத்திருந்த படுக்கை நினைவுக்கு வந்துவிட்டதால் அவன் இதயத்தில் சித்திரவதை செய்தது. நிராசையின் எதிரொலி அவனை நடுங்கச்செய்தது. அருகில்சென்று 'சுலோசனா!'...என்றான், அதற்குமேல் பேசமுடியாது துக்கம் பீறிக்கொண்டு வந்ததால் அழுதுவிட்டான்.


சுலோசனாவால் பேசவே முடியவில்லை. அவளையும் மீறி கண்கள் நீரைச் சொறிந்தன. அவள் தாயார் பெண்ணைச் சாமாதானம் செய்தவாறு மெல்ல தானே நகர்ந்துவிட்டாள். ரகு சுலோசனாவின் கண்களைத் துடைத்து அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டு...பகவான் இத்தகைய ஒரு சோதனை செய்வார் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லையே! கொடுத்த சந்தோஷத்தை பாதியில் சிதைத்து வேடிக்கை பார்ப்பதா கடவுளின்கருணையாகும்? என் மனத்தில் நான் கட்டியிருந்த கோட்டை அப்படியே படுசூரணமாகிவிட்டதே!...என்று கூறிக் கண்ணீர் விட்டான். மிகவும் பலவீனமான நிலைமையில் உள்ள சுலோசனா பதில்பேசவே முடியாது மவுனமாகவே இருந்தாள். ஆனால் முன்போல் அவனை அவமதிக்கவோ அப்புறம் திரும்பிக்கொள்ளவோ எதுவும் இல்லை.

கடவுள் கிருபையினால் ஒரு வாரத்தில் குணமாகி தாயார் வீட்டிற்கேசென்றாள். ரகு அங்கு போவதில்லை. பத்து தினங்களில் திரும்பி வந்துவிடும்படி கடிதம் மட்டும் எழு

தினான். அப்படியே வருவதாக சுலோசனா பதிலும் எழுதினாள்.

ரகுவின் முதல் ஆசை நிராசையாய்ப் போய்விட்டதால் அவனுக்கு அதுவே ஒருவிதமான ஏக்கமும் மனக்கலக்கமும் உண்டாக்கி, நோயாளியைப் போல் காணப்பட்டான். "என்று வெளியூருக்குப் போகும்படியான உத்திரவு வந்துவிடுமோ" என்று மனம் துடிதுடித்துக்கொண்டிருந்தான்.


சொல்லியபடி சுலோசனா பத்து தினங்களில் வராது, உடம்பு தேறிய பிறகுதான் வரமுடியும் என்று சொல்லியனுப்பிவிட்டாள். சுமார் இரண்டு மாதகாலம் சுலோசனாவைப் பார்க்கமுடியாதுபோன மனவருத்தம் ரகுவைப் பின்னும் பித்தனாகச் செய்துவிட்டது. "எனக்கு ஏதோ நல்லகாலம் பிறந்தது என்று எண்ணிச் சந்தோஷப்படுவதற்குள் ஏதேதோ தொல்லைகள் வந்துவிட்டதே! கடவுள் க்ருபையால் என்னை வெளியூருக்கு மாற்றாத நிறுத்தியும் சந்தோஷ வாழ்க்கைக்கு ஆஸ்பதமான எதையும் காணவில்லையே! தாயார் வீட்டிற்குப் போனதுமே புத்தியும் தடுமாறிவிட்டதா! பழையபடி ஆரம்பித்துவிட்டாளா!" என்று ஒருவிதமான திகிலும்கூடப்பிறந்தது.



## 30

கிழவரும் கிழவியும் தமக்கு திடீரென்று கிடைத்த சந்தோஷம் வந்ததுபோலவே திடீரென்று விலகிவிட்டதையும் தாம் எதிர்பார்த்த ஆனந்தபிம்பம் கிடைக்கப் பெருது சிதறிவிட்டதையும் அதே ஏக்கத்தில் ரகு கேவலமாக விருப்பதையும் கண்டு மிகவும் குன்றிவிட்டார்கள். தமது கிராமத்திற்கு ரகுவையும் அழைத்துக் கொண்டுபோக நினைத்தும் அது முடியாது போனதால் ஊரில் உள்ள தானியங்கள் பாழாகிவிடுமே என்று அவர்கள் ஊருக்குப் போனர்கள்.

முன்பெல்லாம் தனித்தவாழ்க்கை நடத்துகையில் எப்படி இருந்தோம் என்பதே இப்போது மறந்துவிட்ட ரகுவுக்கு சுலோசனவும் இல்லாமல் வீட்டில் யாருமே இல்லாமல் ஒண்டிக் கட்டையாயிருப்பது மகத்தான கஷ்டமாயிருந்ததோடு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது. எப்போது சுலோசனவருவாள் என்று நிமிடத்தை எண்ணிக் கொண்டிருந்தான். ஆனல் அவனுடைய ஏமாற்றமும் கவலையும் அதிகரிக்கச் செய்வதேபோல் "சுலோசனவை நான் ஷாப்பில் பார்த்தேன், பீச்சில் பார்த்தேன், சினிமாவில் பார்த்தேன், நாட்டியக் கச்சேரியில் பார்த்தேன்'' என்று இவனுடைய சிநேகிதர்கள் சொல்வதை முதலில் ரகு நம்பவே இல்லை.




"நன்ருக பலம் வந்திருக்குமாயின் இன்னமும் நம்மிடம் வராமலிருப்பாளா! இது உண்மையாகவிருக்குமா! என்னை வேண்டும் என்று கிளறுவதற்காகக் கூறும் கட்டுக்கதையாகத்தானிருக்கும்' என்று முதலில் எண்ணினன். ஆனல் அந்த எண்ணத்தை உடனே மாற்றும் பொருட்டு கடவுளே காட்டுவது போல் ரகு பஸ்ஸில் போகும்போது சுலோசனவும் சுதர்சனனும் அவளு

டைய தகப்பனருமாக ஒரு பெரிய வைர ஷாப்புக்குள் செல்வதைப் பார்த்ததும் அவனுக்கு அப்படியே மயக்கம் போட்டுவிடும்போலாயிற்று

"என்ன!......நான் காண்பது உண்மையான தோற்றமா....சுலோசனவா போவது!... ஆம்! ஆம்...,சந்தேகமில்லாமல் அவள்தான்...அடாடாடா! என்ன ஏமாற்றம்! என்ன! மோசம்...என்னிதயம் வெடித்துவிடும் போலிருக்கிறதே!...நான் முற்றிலும் நம்பி என்னுயிரையே வைத்து நேசிப்பதை யறிந்தும் என்னை ஏமாற்றுகிறளா... என்னல் நம்பவே முடியவில்லையே!" என்று இவன் தத்தளிக்கும்போது பஸ்ஸில் கூட உட்கார்ந்திருந்த முன் பின் அறியாதவர்கள் சுலோசனவும் சுதர்சனும் ஜோடியாகப் போவதைப் பார்த்ததும் "பேஷ்! ஜோடி எப்படி இருக்கிறது பாருங்கள். நாட்டிய அரசி என்ருலும் அரசன் என்ருலும் மிகவும்ஒற்றுமையாயிருக்கிறது.வைரம் வாங்கப் போகிருப்போலிருக்கிறது என்ன டான்ஸ்! என்ன உலகம்!"... என்று ஒருவர் ஆரம்பித்தார்.

ரகுவின் மண்டையில் ஏதோ செய்கிறது. தான் இறங்கிப்போய் விடலாமா! என்று முதலில் எண்ணினன். ஆனல் உலகம் திரைமறைவில் இப்போது எப்படிப் பேசுகிறது என்பதை அறிய இதுதான் சமயம். நாம் யார் என்பதே அவர்களுக்குத் தெரியாது. ஆகையால் என்னதான் பேசுகிருர்கள் பார்ப்போம் என்று கூடவே தோன்றியதால் வெகு மவுனமாய் உட்கார்ந்திருந்தான்.

முதல்வன் பேசியதை ஒட்டி மற்றெருவன்..."புதிய வைர செட்டு வாங்கிக்கொண்டு வரும்படி லேடி கவர்னர் உத்திரவு சார்! சீமைக்குப் போகப் போகிருர்களாமே அது தெரியாதா?".....என்ருன். இதை யாமோதித்த இன்னெருவர் "அது மட்டுமா தெரியும்? இன்னும் பலமான விஷயமெல்லாம் எனக்குத் தெரியும் சார்! உலகத்தில் இப்படிப்பட்ட அக்ரமம் நடப்பதைக்காண கலியுகம் சீக்கிரமே முடிந்து விடும் என்பதில் சந்தேகமே இல்லை. காலம் வரவர ரொம்பவும் கெட்டுப்போய் விட்டது. ஏதோ! விதவைகள்...கணவன் ஊரில்லாத சமயம் கெட்டு விட்ட விபசாரிகள்...கன்யாப்பெண்களாக விருக்கும்போது நாசமாய்ப் போன பாவிப் பெண்கள் முதலியவர்கள்தான் தலைவிதியை எண்ணி கள்ளத்தனமாய் தரித்த கருவை மனந்துணிந்து சிதைத்துவிடுவார்கள் என்று கேள்வி......அதிலும் சில விதவைகள் மானஹீனமின்றி பெற்று ஆஸ்பத்திரியிலேயே வளர விட்டுவிட்டு ஓடி விடுகிருர்கள். அத்தகைய கிராதக சண்டாளிகளுக்குக் கூட கருவை சிதைக்க மனமில்லை.

கட்டிய கணவன் செக்குலக்கையைப்போல் இருக்கையில் கலையாம் கலை. கட்டையில் வைத்தகலை. தான் சீமையில் போய் கூத்தாடுவதற்குக் கர்ப்பம் தடையாயிருந்ததாம். அதை வேண்டுமென்று சிதைத்து விட்டு சீமைக்குக் கிளம்பப் போகிருளாம். உலகத்தில் ஒரு குழந்தை வேண்டுமென்று எத்தனையோ தபம் செய்து விரதங்கள் அனுஷ்டித்து உருகி வேண்டுகிருர்கள். சில சினிமாக் காரக் கழுதைகள்தான் வயிறு முன்னல் வந்து விகாரப்படுத்துகிறதே என்று எல்லாவற்றிற்கும் துணிந்த மகா பாவிகள் கர்ப்பத்தைச் சிதைக்கிருர்கள். நாட்டியமாடி நாசமாய்ப் போவதற்குமா இப்படிப்பட்ட அக்ரமத்தைச் செய்யவேண்டும்? முத்துப் போல் குழந்தையையும் பெற்றுக் கொண்டு பிறகு சீமைக்கு ஒழிவது

தானே!"...என்று வெகு காரசாரமாய்க் கூறியதைக் கேட்ட ரகுவுக்கு சில விநாடிகள் மூச்சே நின்று விட்டதுபோலாயிற்று. ப்ராணனைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

இதற்குள் இன்னொருவர் "ஏன் சார்! நீங்கள் சொல்வது நிஜமாயிருக்குமா?"...என்று கேள்வி வேறு போட்டார்......முன் கூறிய அதே மனிதன் இன்னும் ஆத்திரத்துடன் "நிஜமாயிருக்குமா என்ற சந்தேகம் வேறு?...அந்த காரியத்தைச் செய்த லேடிடாக்டரே நேரில் சொன்னாளாம். சுதர்சன்தான் கருவைக் கலைத்துவிடும்படி கடிதம் எழுதினனும். அவள் சற்று தயங்கிப் பார்த்தாளாம்; பிறகு செய்துவிட்டாளாம். இது தெய்வத்திற்குக்கூட அடுக்காத அக்ரமம் சார்! இக்காலம் கெட்ட கேட்டைக்கூறவே பிடிக்கவில்லை. சற்று வயதான பிறகு கர்ப்பவதியானவர்கள் சிலர் வெளியில் சொல்வதற்கு வெட்கமாம்...துக்கமாம்.....மறைத்து மூடி ஏதேதோ தக்டா பேரங்கள் செய்கிறார்கள். கடவுள் கொடுப்பதைக் கை நிறைய பெற்று வைத்துக் கொள்ள என்ன கேடுகாலம்? முதலில் வ்யாதி என்பது, பிறகு திடீரென்று பிறந்து விட்டது... இறந்து விட்டது...என்று புளுகுவது. சுமங்கலியாய் மகாராஜியாய் இருப்பவர்களுக்கு இதென்ன புனைசுருட்டு......கலைக்காக கொலை கூடச் செய்வார்கள் என்பது நிச்சயமாகி விட்டது" என்று கூறிக் கொண்டே அம்மனிதன் இறங்க வேண்டிய இடத்தில் இறங்கினான்.

இதற்குமேல் பொறுமையை வகித்துக்கொண்டு ரகு உட்கார்ந்திருக்க முடியாமல் சித்திரவதை செய்ததால் அவன் மூளையே குழம்பி விட்டதுபோன்றும் இதயமே நின்று விட்டதுபோன்றும் தோன்றி வதைத்த வேகத்தில் பஸ்ஸிலிருந்து தடாரென்று இறங்கிவிட்டான். "சுதர்சன் சொல்லி சுலோசனை கருவை வேண்டுமென்று சிதைத்தாளா! வேண்டுமென்று கொலை செய்தாளா.....கொலையா......கலைக்காகக் கொலையா செய்தாள்!"... என்கிற எண்ணம் அவன் இதயத்தில் பெரும்போர்செய்து மல்யுத்தம் புரிகிறது.

தான் அப்படியே ஓடிப்போய் சுலோசனையை மென்னியை அழுத்தி விடலாமா...கொலை செய்தபாவியை உடனே கொலை செய்து பழிக்குப் பழி வாங்கிவிடலாமா! என்று ஒரு க்ஷணம் தோன்றியது. இந்த ஆவேச வேகத்தில் ஆபீஸ் போவதையும் மறந்தான். பைத்தியம் பிடித்தவன் போல், சுலோசனை எந்த வைர ஷாப்புக்குச் சென்றாளோ, அதே ஷாப் பின் பக்கம் நடந்து வந்தான்.

அங்கு வாசலில் காரைக் காணாததால் போய்விட்டார்கள் என்று தெரிந்தது. மனது ஒன்றும் இருக்கை கொள்ளவில்லையாகையால் நேரே தன் வீட்டிற்கே வந்தான். என்ன காரணத்தினாலோ ஒருநாளும் திறந்தறியாத சுலோசனையின் தனியறையையும் அவளுடைய பெட்டி பீரோ முதலியவைகளையும் திறந்து பார்க்கவேண்டும் என்கிற எண்ணம் உண்டாகியது.

அவைகளுக்கு சாவி இவனிடம் இல்லை. ஆத்திரத்தில் பெட்டியை உடைத்தெறிந்து சுதர்சனுக்கும் இவளுக்கும் ரகஸிய கடிதப் போக்கு வரத்து உண்டா! என்று பார்க்கவே மனது துடித்தது. பெட்டியில் கிளறிப் பார்க்கையில் லேடி கவர்னர் கடிதம் முதல் நட்டுவம் சொல்லிக் கொடுத்தவனது வரையில் சகலருடைய கடிதங்களும் இருந்தன.

ஆனால் வித்யாஸமானதோ, கள்ளக் காதல் கொண்டதோ எந்தவிதமான கடிதமும் இல்லை. ஆனால் சுதர்ச னுடன் இவள் சீமைக்குப் போவதற் கான சகல ஏற்பாடுகளும் ரகஸிய மாக நடந்துவரும் விஷயம் சில கடி தங்களால் விவரமாகத் தெரிந்தது.

"உள்ளுக்குள் இம்மாதிரி ஏற் பாட்டை வைத்துக்கொண்டுதானா மேலுக்குத் தன்னுடன் இப்படி உற வாடி மயக்கிக் குலுக்கித் தன்னை முற்றிலும் மயக்கும்படிக்குச் செய் தாள்! என்ன ஏமாற்றம்! என்ன சாகஸம்! நம்பவே முடியவில்லையே! ...நானா இப்படி ஏமாந்தேன்!... என் சுலோசனாவா இம்மாதிரி சதி செய்தாள்! கிடைத்தற்கரிதான கரு வைச் சிதைத்தாள்?"......என்று எண்ணி எண்ணி உள்ளம் கொதிக் கிறது.

சுலோசனாவின் பீரோவைத்திறந் தான். அதில் ஒரு பர்ஸ் இருப்பது கண்டு அதை எடுத்துப் பார்த்தான். பர்ஸின் மேலேயே நாட்டிய அரசன் கலாவிசாரத ஸ்ரீமான் சுதர்சன். என்று போட்டிருந்ததால் ரகுவின் ரத்தம் கொதிப்பெடுத்தது. தன் பர்ஸை அவளுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறான்போலும், என்று எண்ணியவாறு பர்ஸைத் திறந்து பார்த்தான். அதற்குள் சில கடிதங் களும் சில குறிப்புக்களும் 50 ரூபா மிக்கு நோட்டுகளுமாக விருந்தது கண்டு கடிதங்களைப் பார்த்தான். சுலோசனாவின் கையெழுத்தில் இரண்டு கடிதங்களிருப்பதை யறிந்து நெருப்பை மிதித்தவன் போல் துள்ளியவாறு படித்தான்.

"நாட்டிய அரசே! நமஸ்காரம். சமயசஞ்சீவி போன்ற உமது கடித மும் உஷாதேவியின் கடிதமும் வந்த தற்கு மிக்க வந்தனம். தாங்கள் எழுதியிருந்தபடியே, நான் எனது நிலைமையினால் உள்ள பாதகத்தை கினைக்காமல் தாயாகப்போகிற களிப்பில் சகலத்தையும் மறந்து தான் இருந்தேன். இது இயற்கை யல்லவா! என்னைவிட என் கணவர் மிகவும் ஆவலுடன் என் குழந் தையை எதிர்பார்ப்பதால் நான் அதிலேயே மூழ்கி இருந்தேன். பாழாய்ப்போன யுத்தம் ஆரம்பித்து விட்டதால் நாட்கள் ஏற ஏறக் கப் பல் ப்ரயாணமும் கடினமாயிருக் கும், அதோடு அபாயமானதாயும் இருக்கலாம். ப்ரஸவித்துப் பழைய உடம்பு ஆகிப் போவதென்றால் குறைந்தது ஒன்னரை வருஷகால மாவது ஆகும். ஆகையால் வலிய வரும் புகழ், கீர்த்தி, செல்வம், யாத் திரையின் ஆனந்தம் இவைகளை உதறித் தள்ளக் கூடாது. "கடவுள் கிருபையில் வெற்றிகரமாகச் சென்று வந்தபிறகு தானே குழந் தைப் பேறு கிடைக்கிறது. ஆகை யால் இம்முறை அதை தயவுசெய்து இப்போதே சிதைத்துவிட்டால் மிக்க நலமாகிவிடும்" என்று ஸ்ரீமதி உஷா தேவியும் தாங்களும் எழுதியதை நான் முதலில் விரும்பவில்லை. வெகு வெகு ஆழமாகயோசனைசெய்தேன். இக்காரியம் மகத்தான குற்றமில் லையா! செய்வது நியாயமா! என்று பலமாக யோசித்தேன். என் மனது விரைவில் ஒப்புக்கொள்ளாமல் தத்த ளித்தது. பிறகு என் பெற்றோரிடம் உங்கள் இருவரின் கடிதங்களையும் காட்டி யோசனை கேட்டதில் என் தாயாரைவிட தகப்பனாரும் தமைய னும் வெகு விரைவில் இப்படியே செய்துவிட வேண்டியதுதான் என் றும், முதலிலேயே தாங்களும் இப்ப டியே செய்துவிடவேண்டுமென்று சொல்லவே எண்ணி, டாக்டர்களைக் கலந்து யோசித்துக் கொண்டிருந்த தாயும், இதென்ன ப்ரமாதம் அடுத்த

வருஷமே பகவான் இன்னொரு குழந்தையைக் கொடுப்பார் என்றும் சொன்னார்கள். பிறகுதான் என் மனது சமாதானமாகி இசைந்தது. இச் செய்கை பிறருக்கு—அதிலும் என் கணவருக்கு—தெரியவே கூடாது. நாம் சீமைக்குச் செல்லும் விஷயமும் அவருக்குத் தெரியாது. கடைசிசமயத்தில் உஷாவும் நானும் ஜோடி நாட்டியமாடப் போவதாக அவரிடம் எப்படியாவது சொல்லி சாந்தப்படுத்துகிறேன். அவர் உண்மையில் வெகு நல்லவர். அவர் இதயபீடத்தில் எனக்களித்துள்ள சிம்மாஸனத்தில் நான் தனியரசு செலுத்துகிறேன் என்றால் மிகையாகாது. ஆகையால் அவரை முற்றிலும் நான் ஏமாற்ற விரும்பவில்லை. நான் உஷாவுடன் நடிப்பதாக மட்டும் சொல்லிவிட்டு வருகிறேன். நாளையே நீங்களும் உஷாவும் வருவதுபற்றி சந்தோஷம். கடவுள் நமக்கு ஜயத்தைக் கொடுப்பாராக. மனத்தில் கட்டுமீறிய கலையின் ஆசைப்ரவாகத்தை எழுப்பிய கடவுள் அதைப் பூர்த்தி செய்யாமலா போவார்? கலை வாழ்க.

சுலோசனா''

"அன்பு மிக்க உஷாதேவிக்கு. உங்கள் கடிதம் கண்டு சந்தோஷப்படுகிறேன். நீங்கள் நாட்டியக் கலைக்கு உழைக்கும் நோக்கத்துடன் பலதரம் கருப்பத்தை சிதைத்திருப்பதாயும், அதனால் எவ்வித அபாயம் நேரிடாது; பின்னால் குழந்தை பிறக்குமோ! பிறக்காதோ என்கிற சந்தேகம் சிறிதும் வேண்டாம் என்றும், உங்களுக்கு ஒரு குழந்தை இருப்பதைப் பார்த்து மனது சமாதானம் அடையலாம் என்றும் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். பல சினிமா ராணிகள் ஒரு படத்திற்குத் தாம் கையொப்பமிட்டபிறகு கர்ப்பமாகிவிட்டால், படம் முடிவடைய பல மாதங்களாகும் என்பதால் சிதைத்துவிடுவது சர்வ சகஜம் என்றும் லேடி டாக்டர் ஆசீர்வாதம் இதில் கைதேர்ந்தவர் என்றும் அவரிடம் நீங்களே அழைத்துப்போக வருவதாயும் எழுதியிருக்கிறீர்கள். அதைப்படித்து மனத்தைப் பலதரம் திடப்படுத்திக் கொண்டாலும் என்னையறியாது ஏதோ சங்கடம் செய்கிறது. தாய்மைப் பதவிக்கு என் மனமும் மகத்தான ஆசைப்படுகிறது. என்னைவிட என் கணவரின் ஆசை ப்ரவாகமாய் ஓடுகிறது. அதனால் மிக்க யோசனை செய்தேன். பெருத மலடியானால்தான் பயப்படவேண்டும். ஒரு தரம் கர்ப்பமாகிவிட்டால் அதற்குமேல் என்ன பயம் என்றும் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். நான் பலமாக யோசனை செய்து பார்த்ததில் முதலில் துணியாத மனது, உலகத்தையே சுற்றிப் பார்க்கவும் என்றென்றும் அழியாத புகழை அடையவும், கலைக்கே பல த்யாகங்களைச் செய்ய வேண்டும் என்கிற ஆசைக்கும் அடிமையாகிவிட்டது. நீங்கள் எழுதியபடியே வந்து மேலே நடக்கவேண்டியதைச் செய்யலாம். இது விஷயமாக பிறருக்கு எதுவுமே தெரியக்கூடாது. பரமரகஸியமாக இருக்கட்டும். வீட்டில் கிழவர்கள் இருப்பதால் எந்த பேச்சும் என் வீட்டில் வைத்துக் கொள்ளவேண்டாம்.

இங்ஙனம்,
சுலோசனா''

என்று எழுதியிருந்த அதே கடிதத்தின் பின்புறம்,...

"என்னுயிர் நடன அரசே! காய் பழுத்துப் பழம் நழுவி பாலிலும் விழுந்துவிட்டது. அதுவும் நழுவி வாயில் விழுந்துவிடும். சுலோசனா

எனக்கெழுதிய கடிதத்தை இதோடு உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன்.

இது உங்களுக்கு மகத்தான ஆனந்தத்தை அளிக்குமென்பதில் ஐயமில்லை. நாம் எப்போது புறப்படலாம் என்பதை எழுதினால் அன்று தயாராகவிருக்கிறேன்.

இங்ஙனம்,

உஷா''

இவற்றைப் படித்த ரகுவின் நிலைமை எப்படி இருந்ததென்று கூறவும் வேண்டுமா? இந்த நாட்டிய அரசியைப் பார்க்கவந்த அரசன் மறதியாக இதைத் தவறவிட்டுப் போயிருக்க வேண்டும். அதை ஜாக்ரதையாக அவனிடமே திருப்பிக் கொடுத்துவிடும் நோக்கத்துடன் பிரிக்காமலேயே எடுத்து வைத்திருக்கவேண்டும். மறுதினம் மகத்தான கொலை புரியச் செல்லும் வேகத்தில், அந்த அதிதமான உணர்ச்சியில், முக்யமான இந்த பர்ஸ் விஷயத்தைக்கூட மறந்து போயிருக்கவேண்டும். அதினால் தான் பகவான் எனக்களிக்கும் பொருட்டுநிறுத்திவிட்டார்போலிருக்கிறது...அடாடாடா!...என்ன அக்ரமம்!......என்ன நெஞ்சழுத்தம் பெற்ற பாவிகளா கருக்கொலை செய்ய இம்மாதிரி உடந்தையாயிருந்தார்கள்...என்ன நடிப்பு! என்ன நாட்டியம்!...ஐயோ! என்னால் நம்பவே முடியவில்லையே! இந்த உலகமே இப்படியே எரிந்துவிடக்கூடாதா!......நான் நிற்கும் இடம் இப்படியே வெடித்து என்னை விழுங்கிவிடக்கூடாதா!......இந்த க்ஷணமே ஒரு பூகம்பமோ, ப்ரளயமோ வந்து அழிந்துவிடக்கூடாதா! என்னால் இதைச் சகிக்கவே முடியவில்லையே!...ஆம்...என்ன பாதகம் வந்தாலும் வரட்டும். நான் உடனே போய் சுலோசனவை அடித்துப் புடைத்தாகிலும் இழுத்துக்கொண்டு வந்து சிறையிலிடுவதுபோல் வைத்து அவள் செய்த கருக்கொலைக்குச் சரியானபடி தண்டனையை விதிக்காவிடில் என் பெயர் ரகு இல்லை என்கிற ஆத்திரத்துடன் ஆவேசம் உச்சத்தில் தாண்டவமாடுகிறது.

"கொலை செய்யத்துணிந்த கிராதகியையா நான் என் இன்பக் களஞ்சியமென்று நம்பினேன்!... இந்த பர்ஸை, ஒரு வேளை நான் பார்த்து விஷயமறிந்து கொள்ளட்டும் என்கிற இறுமாப்பினால் வைத்திருக்கலாமோ?...ஏன் அப்படியும் இருக்கக்கூடாது? ஓடிப்போவது என்னவோ நிச்சயம். இதைநேரில் ஏன் சொல்லவேண்டும் என்றுகூட இப்படிச் செய்திருக்கலாமோ!...என் தேகம் பற்றி எரிகிறதே! சீமை யாத்திரையாம்! கலைக்காக த்யாகமாம்...அடாடாடா!...என்ன சண்டாளத்தனம்! கொலை செய்யத் துணிந்த பாவிக்கு த்யாகமாமே த்யாகம்!......தனக்கு மிஞ்சியவர்கள் உலகத்தில் இல்லை என்கிற இறுமாப்புடன் மனிதர்களின் முன்பு உலாவும் இந்தச் சண்டாளர்கள் என்றாவதொரு நாள் கடவுள் முன்பு எமன் முன்பு நின்று பதில் சொல்ல வேண்டும் என்கிற எண்ணமே இல்லை போலும்......கடவுளே! நீ வெறும் கல்லா...செம்புதானா... அநியாயத்தை மனந்துணிந்து செய்கிறவர்களுக்கு உதவி புரிவதா உன் தர்மம்?... ஆகட்டும். நானும் நியாயத்தை, சத்தியத்தை உதறித்தள்ளிவிட்டு அந்த மானங்கெட்ட காதகியின் மென்னியைத் திருகிவிடுகிறேன்...வந்தது வரட்டும்'' என்று மகத்தான கோபத்துடன் தலை தெறிக்க வாசலுக்கு ஓடினான்.

வெளியாகி விட்டது!

**வை. மு. கோ. 69-வது நவீனம்**

# அபராதி

**116 பக்கங்கள். விலை ரூ. 1—2—0 தான்.**

**ரிஜிஸ்தர் போஸ்ட் மூலம் ரூ. 1—5—0.**

சென்ற மோகினி இதழில் வெளியிட்டிருந்த அறிவிப்பைக் கவனித்து முன்கூட்டியே பணம் அனுப்பிய எல்லா நேயர்களுக்கும் ஷை நவீனம் அனுப்பியாய்விட்டது. நீங்கள் இன்னும் ஆர்டர் செய்திராவிடில் இன்றே மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

"ஓர் அபராதியின் கதையா!" என்று நினைக்கும்போதே உங்கள் உணர்ச்சியும் கற்பனையும் கிளறப்பட்டு உங்கள் ஆவல் உச்சஸ்தாயியில் ரீங்காரம் செய்கிறதல்லவா?

ஆம், அது இயற்கையே! புத்தகத்தைக் கையிலெடுத்தால் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டுத்தான் உங்கள் கவனத்தை வேறு விஷயத்தில் செலுத்துவீர்கள்.

நம் சமூகத்திற்கும் குலதர்மத்திற்கும் மகத்தான தீங்கிழைத்துள்ள பல அபராதிகள் இந்த சித்திரத்தைப் படித்த பிறகாவது சற்று நெறியுடன் இருப்பார்களாக!

All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no referance whatsoever to real persons
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge: V. M. SRINIVASAN, M.A, B.L.

Jaganmohini (Sept. 1945) Regd. No. M. 2210

# மகத்தான வெற்றி

வெற்றி முரசு கொட்டுகிறது. சாந்தி கீதத்தின் ரீங்காரம் ஒவ்வொரு திக்கிலும் எதிரொலிக்கிறது. யுத்த பயத்திலிருந்து விடுதலை பெற்ற மக்கள் ஆனந்தக்கூத்தாடுகின்றனர். வருங்காலத்தில் பெரிதும் நம்பியிருக்கின்றனர். ஒவ்வொருவருள்ளத்திலும் பலவித எண்ணங்களை—ஆசைகளை—எதிர்பார்ப்பை—எழுப்பியுள்ளது இம் மகத்தான வெற்றி!

யுத்தத்தின் பல படிப்பினைகளுள் மிகவும் முக்கியமானது எது? எப்பேர்ப்பட்ட இடையூறுகளும் இடுக்கண்களும் தோன்றிய போதிலும், சூழ்நிலை அனுகூலமற்றதாயிருந்தபோதிலும் **மனம் தளராது** தைரியத்துடன் லட்சியத்தில் வெற்றியைக் கோரி நின்ற **உறுதியே** இப்போது கிடைத்துள்ள வெற்றிக்கு அஸ்திவாரமாக அமைந்தது. தோல்வியின் மத்தியிலேயே 'வி' பிரசாரம் ஆரம்பித்தவர்களின் தைரியமும், முன் யோசனையும் இப்போது சரித்திரப் பிரஸித்தி பெற்றுவிட்டது.

எடுத்த காரியத்தில் வெற்றி என்ற லட்சிய பூர்த்தியை அடையும் பொருட்டு இடைவிடாது உழைத்து, முடிவில் வெற்றியையும் அடைந்துவிட்டால், மகிழ்ச்சிக்கு அளவேது?

யுத்த முடிவு சம்பந்தமாகச் சந்தோஷப்படும் நாம், மற்றொரு மகத்தான வெற்றியைக்குறித்தும் சந்தோஷப்படுவது நியாயமே, இயற்கையே! நமது தமிழ் நந்தவனம் முயற்சியில் பெண் சக்தியின் சிறப்பு மகத்தான வெற்றி பெற்றுவிட்டது. யுத்த மும்முரத்தின் நடுவே, காகிதப் பஞ்சத்தின் தாண்டவத்தின் மத்தியில், சகல இடையூறுகளையும் நன்கு அறிந்தே தமிழ் உலகுக்கே புதுமையான இந்த முயற்சியை மேற்கொண்டோம். முதல் மலர் வந்ததுமே காகிதக் கட்டுப்பாடு திட்டங்கள் கடுமையாக அமுலுக்கு வந்தன. எடுத்த காரியத்தைச் செய்தே முடிப்பது என்ற நோக்கத்துடன் இதர பிரசுரங்களின் புதிய பதிப்புகள் வெளியிடுவதையும் குறைத்துக்கொண்டு நந்தவனத்தைத் தொடர்ந்து வெளியிடலானோம். நான்கு மலர்கள் வெளியிட்டதும் மலிவுப் பதிப்பும் வெளியிட முன்வந்தோம். ஒரு மலரில் எழுதியவர் திரும்பவும் எழுதாது ஆறு நறுமலர்களிலும் புதுப்புது ஸ்த்ரீ எழுத்தாளர்களை அறிமுகம் செய்து தாரண நந்தவனத்தைச் சிறப்பித்தோம். 100 ஸ்த்ரீகளின் எழுத்து மலர்களை (சுமார் 100 படங்களுடன்) ஒரே புத்தகமாக (700 பக்கங்கள்) வெளியிட்டு ஷை வெற்றியைக் கொண்டாடினோம். இப்பார்த்திப ஆண்டிலும் நந்தவனம் புது அம்சங்களுடன் தமிழ்ப்பெண்களை மகிழ்விக்கிறது.

மோகினியைப் படித்து மகிழும் ஒவ்வொரு பெண்மணியும் ஷை நந்தவனத்தின் வெற்றியில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். எழுதும் சக்தி வாய்ந்த சகோதரிகள் எழுதிச் சிறப்பிக்கவேண்டும்; மற்றவர்கள் ஷை மலர்களைப் படித்து மகிழ்ந்து எங்களையும் ஸ்த்ரீ எழுத்தாளரையும் உத்ஸாகப்படுத்தவேணும். நந்தவனத்தின் வெற்றி தமிழ்ப் பெண்களின் வெற்றியேயாகும்.